திருமகள் நிலையம்
கூட்டிற்குள் புகுந்த உயிர்
இந்திரா சௌந்தர்ராஜன்
திருமகள் நிலையம் • கூட்டிற்குள் புகுந்த உயிர் • இந்திரா சௌந்தர்ராஜன்

Please share your novels and Comments @ http://www.tamilbooks.veeserve.com/mybb/

முதற் பதிப்பு : ஆகஸ்டு, 2009

© : ஆசிரியருக்கு

திருமகள் நிலையம் வெளியீடு

TITLE : KUTTIRKUL PUGUNTHA UIR
AUTHOR : INDRA SOUNDAR RAJAN
FIRST EDITION : AUGUST - 2009
PAPER : 11.6 Cream Wove
TOTAL PAGES : 192

Available at :
THIRUMAGALNILAYAM
16/55, Venkatnarayana Road,
T. Nagar, Chennai - 600 017.
Phone : 24342899, 24327696
Fax : 91-44-24341559

விலை ரூ. 70/-

திருமகள் நிலையம்
புதிய எண் 16, பழைய எண் 55,
வெங்கட்நாராயணா ரோடு,
தியாகராய நகர், சென்னை - 600 017.
தொலைபேசி : 24342899, 24327696
Fax : 91-44-24341559

Typesetting : AMARAVATHI GRAPHICS
Chennai - 33. Cell : 9444169725
Printed by : மஞ்சு ஆப்செட், சென்னை - 5.

கூட்டிற்குள் புகுந்த உயிர்!

மர்ம நாவல்

1

திருமணம் என்பது மட்டும் மனிதர்கள் திட்ட மிட்டுச் செய்வதால் நிகழும் ஒன்று இல்லை. ஏற்கெனவே திட்டமிடப்பட்ட ஒன்றிற்காக எல்லோரும் கூடிச் செயல்பட திருமணம் தன்னைத் தானாய் நடத்திக் கொள்கிறது என்பது தான் உண்மை!

மெடிக்கல் ரிப்போர்ட்டுடன் வெளியே வந்த சாரதியின் முகத்தில் ஏகத்துக்கும் வாட்டம் ஒரு பெரிய காக்கி கவருக்குள் ஏராளமான எக்ஸ்ரே படங்கள், பிளட் டெஸ்ட், யூரின் டெஸ்ட் என்று ஆய்வு செய்யப்பட்ட ரிப்போர்ட்டுகள்! சற்று பருத்து கனமாக காட்சியளித்த ரிப்போர்ட் கவரை ஆஸ்பத்திரிக்கு வெளியே நின்றுகொண்டிருந்த காரின் பின் ஸீட்டில் எறிந்துவிட்டு சோர்வாக டிரைவிங் ஸீட்டில் ஏறி அமர்ந்தான் சாரதி.

"ஸாரி மிஸ்டர் சாரதி! அதிகபட்சம் பதினைஞ்சு நாள் உங்க அப்பா உயிரோட இருந்தா அதுவே ரொம்ப அதிகம். அமெரிக்கா, ஐரோப்பான்னு எங்கே போனாலும் காப்பாத்த வழியில்லை. வேணும்னா கொஞ்சமும் வலியில்லாதபடி

இந்த பதினைஞ்சு நாளும் அவர் வாழ நாங்க ஏதாவது செய்ய முடியும். அதுக்குகூட சிங்கப்பூரில் இருந்து இன்ஜெக்ஷனை வரவழைக்கணும். இந்த மாதிரி கேஸ்களுக்குள்ளே ஹ்யூமன் கூரியர் மாதிரி சிலர் இருக்காங்க. அவங்களுக்கு டிக்கெட் எடுத்து கொடுத்து ஒரு சார்ஜ் கொடுத்துட்டா போதும். நமக்காகவே சிங்கப்பூர் போய் மருந்தை வாங்கிக்கிட்டு அடுத்த ஃப்ளைட்ல திரும்பி வந்துடுவாங்க. என்ன சொல்றீங்க?'' என்ற டாக்டர் சிவராமகிருஷ்ணன் தன் ஸ்கொயர் ஸ்பெக்ஸ் கண்ணாடியைத் துடைத்தபடியே சொன்னது சாரதியின் காதுகளில் அலை மோதியது. அதற்காக ஒரு பதினைந்தாயிரம் ரூபாயக்கு செக் ஒன்றை எழுதிக் கொடுத்துவிட்டு டிராவல் ஏஜென்ஸிக்கும் போன் செய்து சிங்கப்பூருக்கு டிக்கெட் ரிசர்வ் செய்ததையும் எண்ணிப் பார்த்தபடியே காரை கிளப்பினான்.

அந்த படகு கார் டிராஃபிக்கில் ரதம் போல் ஒடியது. ஆனால், சாரதியின் மனதுக்குள்தான் ஏகப்பட்ட தடுமாற்றங்கள், குழப்பங்கள்!

சாரதியின் அப்பா ராம்மோகன் ஒரு பெரிய பிஸினஸ் மேக்னட்! மதுரையில் பிறந்து வளர்ந்தவராக இருந்த போதிலும் சென்னைக்கு ஓடிவந்துவிட்டவர். அப்படி அவர் ஓடிவந்தபோது அவர் பாக்கெட்டில் இருந்தது மூணரை ரூபாய்.

ஆனால், இப்போது கிட்டத்தட்ட மூன்று கோடி ரூபாய்க்கு மாதாமாதம் கார்மெண்ட்ஸ் பிஸினஸ் செய்பவர். ஈசா கார்மென்ட்ஸ் என்றால் கீழ்த் திசை நாடுகளில் அப்படி ஒரு பெயர். தொடக்கத்தில் தெருத்தெருவாய் அலைந்தவர் ஒரு டெய்லர் கடையில் வேலைக்குச் சேர்ந்து முதல் ஆறு மாதங்களுக்கு அந்த டெய்லருக்கு டீ காபி வாங்கி வந்து

தருவதைத்தான் தொழிலாகவே செய்தார். பின் கடையிலேயே ஒரு மூலையில் படுத்துத் தூக்கம்... ஆறு மாதம் கழித்து முதன்முதலாக கற்றுக் கொண்டது காஜா எடுக்க... அதன் பின் இரண்டு வருடத்தில் தையல் கலையின் அத்தனை நுட்பங்களும் ராம்மோகனுக்கு வசமாகிவிட்டன.

வாடிக்கையாளர்களும் அவர் தைத்து தரும் பேண்ட் சர்ட்தான் அளவு மிகக்சிதமாக இருப்பதாகக் கூற, கடைக்கார முதலாளி, ''நீ வேற இடம் பார்த்துக்க'' என்று கழற்றி விட்டு விட்டார். அதன் பின் ஒரு வாடிக்கையாளர்தான் தன் வீட்டில் ஒரு தையல் மெஷின் பல வருஷங்களாக ஓடாமல் ஒரு மூலையில் கிடப்பதை நினைவுகூர்ந்து அதை வைத்துக் கொண்டு ஏதாவது செய் என்று சொல்லி அவர் வீட்டு முன்பக்கம் மரத்தடியில் கொஞ்சம் இடமும் ஒதுக்கிக் கொடுக்க, அதில் பிக் அப் ஆக ஆரம்பித்தது ராம்மோகனின் தொழில்!

இன்று ராம்மோகனின் ஈசா கார்மெண்ட்ஸுக்குள் நுழைந்தால் ஒரு கண்ணாடி அறைக்குள் அந்த தையல் எந்திரமும் அதற்கு மேல் அதை ராம்மோகனுக்குதந்து உதவிய அந்த வாடிக்கைக்காரரின் புகைப்படமும்தான் முதலில் கண்ணில் படும்.

கூடவே 'நன்றி மறப்பது நன்றன்று' என்கிற குறள் வரிகள் வேறு!

ஒரு டெய்லராக வாழ்க்கையை ராம்மோகன் தொடங்கியபோது அவர் வயது இருபது. இன்று ஐம்பது... எங்கிருந்து எப்படி வந்தது அந்த இரைப்பை புற்றுநோய் என்பது இறைவனுக்குத்தான் வெளிச்சம்...

கடந்த மூன்று மாதங்களாகவே சிகிச்சை சிகிச்சை என்று ஆஸ்பத்திரி வாசம்தான். இப்பொழுது அதற்கு ஒரு முடிவு

ஏற்பட்டு அவர் மொத்த வாழ்க்கையே வெறும் பதினைந்து தினங்கள் என்று சுருங்கி விட்டது.

அந்த உண்மையும்கூட டாக்டருக்கும் அவருக்கும் பிறகு ராம்மோகனின் மூத்த மகன் சாரதிக்கு மட்டும்தான் தெரியும்.

ரிப்போர்ட்டோடு படுக்கையில் இருந்த ராம்மோகனை சாரதி பார்த்தபோது அவர் அவனைப் பார்த்த விதமே சரியில்லை.

''என்னப்பா... நான் இன்னும் எவ்வளவு நாள் இருப்பேன்னு டாக்டர் சொன்னார்...'' என்றுதான் கேட்டிருந்தார். சாரதியும் எப்படியோ அவரைச் சாமாளித்து வெளியே வந்தான். அப்போதெல்லாம் அவன் இதயம் துடித்ததுடிப்பு...

'பாம்பாம்... பாம்பாம்... கீய்ங்ங்...' டிராஃபிக்கில் ரெட் சிக்னல் விழுந்தும் சாரதியிடம் பிரக்ஞையில்லை. அப்பா கேட்டது, சமாளித்தது என்று அதே எண்ணம் டிராஃபிக் போலீஸ்காரர் ஓடிவந்து கதவைத் தட்டி, ''ஏய்! யாருய்யாது?'' என்று பலமாக கத்தவும்தான் அவனுக்கு தன்னை மறந்துவிட்டதே நினைவுக்கு வந்தது.

''ஸாரி சார்...'' என்று சாமாளித்து வழிந்துவிட்டு காரை திரும்பவும் கிளப்பினான். காரும் வளசரவாக்கத்தில் இருக்கும் அவனது பங்களா நோக்கித்தான் ஓடியது!

வாட்ச்மேன் கேட்டைத் திறந்த விட, உள்ளே புகுந்த காரைப் பார்த்துவிட்டு சாரதியின் மனைவி இந்துமதி, அவன் தங்கை தேவி என்று இருவரும் ஓடி முன்வாசலில் வந்து நின்றனர். இறங்கி உள்ளே நுழைந்தவனை ஆவலாதியோடு பார்த்தனர்.

''டாக்டர் என்னங்க சொன்னார்... இன்னிக்கு ஃபைனல் ரிப்போர்ட் கிடைச்சிடும்னு சொல்லியிருந்தாரே...'' என்று அவன் உள்ளே நடக்கும்போது கூடவே ஆரம்பித்து விட்டாள் இந்துமதி.

சாரதி எதுவும் பேசாமல் போய் சோபாவில் விழுந்தான். தேவி அவன் மௌனத்தை கச்சிதமாக புரிந்து கொண்டாள். எம்.பி.பி.எஸ். இறுதியாண்டு படிப்பவளுக்கு எந்த வியாதிக்கு எவ்வளவு சக்தி என்றுகூடவா தெரியாது?

''என்னண்ணே... டாக்டர் கை விரிச்சிட்டாரா!'' என்று கச்சிதமாக கேட்டாள். அவனும் மௌனத்தில் அதனை அங்கிகரித்தான். ''எனக்குத் தெரியும்... அந்த கான்சர் வந்து அதிக நாள் வாழ்ந்துகிட்டிருக்கிறவர் அனேகமா நம்ம அப்பாவா மட்டும்தான் இருக்க முடியும். எப்ப காது மூக்கு வழியாரத்தம் வெளிய வந்துடிச்சோ அப்பவே அவர் லைஃப் மாசத்துல இல்ல வாரத்துலதான்னு நான் தெரிஞ்சுகிட்டேன்...'' என்ற தேவி, பொபொலவென்று கண்ணீர் விட்டாள்.

''என்னங்க... தேவி சொல்றது வாஸ்தவமா?'' இந்துமதியும் பதட்டப்பட, ''ஆமாம் இந்து'' என்று பெருமூச்சு விட்ட சாரதி, எழுந்து அந்த ஹாலில் புகைப் படத்தில் கண்ணாடி சட்டத்துக்குள் அடங்கிக் கிடக்கும் அவன் தாயின் படம் அருகே போய் நின்று அந்த படத்தை பார்த்தவன், ''இன்னிக்கு பதினாறாவது நாள் இந்த படத்துக்கு பக்கத்துல அப்பா படத்தை மாட்ட வேண்டியிருக்கும்...'' என்றபோது அப்படியே உடைந்து போய் அழத் தொடங்கி விட்டான். அவர்களும் தாளமாட்டாமல் அழுதனர். இடையீடு செய்தது தொலைபேசி. தேவிதான் எடுத்தாள். ஆஸ்பத்திரியில் இருந்து டாக்டர்தான் பேசினார்.

''திஸ் ஈஸ் மிஸ்டர் சாரதி...''

''நான் அவர் சிஸ்டர் தேவி பேசறேன் டாக்டர்.''

''ஓ... நீங்க எல்லாரும் கொஞ்சம் கிளம்பி வரமுடியுமா?'' டாக்டர் கூப்பிடும் தொனியே ஒருமாதிரி இருந்தது.

''டாக்டர் அப்பாவுக்கு சீரியஸா...''

''ஆமாம்மா... இருந்தாலும் ஒரு வாரம் வரை அவரை எப்படியும் காப்பத்திடுவோம். அவர் உங்க எல்லார்கிட்டையும் ஏதோ பேச நினைக்கறாரு... அனேகமாக அவரோட சுயநினைவு சீக்கிரம் போயிடலாம்...''

''ஓ... இப்பவே நானும் அண்ணனும் அண்ணியோட வர்றோம் டாக்டர்...'' என்றபடியே ரிசீவரை வைத்தவள், திரும்பினாள்.

''என்ன தேவி... நாம் எல்லாரும் இப்ப ஆஸ்பத்திரிக்குப் போறோமா?''

''ஆமாம் அண்ணி... அண்ணே கிளம்பு'' என்று சாரதியையும் திருப்பிக் கிளப்பிக் கொண்டு காரை நோக்கி ஓடினாள் தேவி. அவளே டிரைவிங் ஸீட்டில் ஏறி அமர்ந்து கொண்டு காரை கிளப்பப் பார்த்தபோது எதிரில் இன்னொரு கார். அதில் அவளோடு ஒன்றாக படிக்கும் அவளது காதலன் சந்த்ரகுமாரின் கார்.

இருவரும் காதலிப்பது சாரதிக்கு தெரியும்.

இது என்ன அந்த காலமா... காதலை காதலிப்பவர்கள் மூடிவைக்க...? ஒரு நாள் தேவியே சாரதியிடம் சந்த்ரகுமார் பற்றி கூறி அவனது குடும்பப் பின்புலம், வசதி வாய்ப்பு பற்றியும் சொல்லி விட்டாள்.

சந்த்ரகுமாரின் அப்பா ஒரு திறமையான ஹார்ட் ஸ்பெஷலிஸ்ட்... சந்த்ரகுமாரும் மெரிட் ஸ்டூடண்ட்.

ஒழுக்கமாக டி.வி. பார்க்காமல், ஊரைச் சுற்றாமல் படிப்பவர்கள்தான் மெரிட்டில் பாஸ் பண்ண முடியும். சந்த்ரகுமார் வாங்கிய மார்க்கே சாரதிக்கு அவனது ஒழுக்கத்தை பற்றி கூறிவிட்டது. சுந்த்ரகுமாரும் பார்க்க லட்சணமாக, நல்ல சிவந்த நிறத்தில் ராஜகுமாரன் கணக்காக இருந்ததால், சாரதி அவர்கள் காதலை ஒரு மோதலுக்குரிய விஷயமாக கருதவில்லை.

முதலில் இந்த விஷயம் அப்பா ராம்மோகனுக்குத் தெரியாது... அவர் உடல் இருக்கும் நிலையில் அதை சொல்ல சாரதிக்கு தெம்பும் வரவில்லை.

அப்படிப்பட்ட சந்த்ரகுமார்தான் எதிரில்!

காரை விட்டு இறங்கி வந்தவன் தேவியைப் பார்த்து ''தேவி அவசரமாக எங்கையாவது போறீங்களா?'' என்று கேட்க, அவளும் சிவந்துவிட்ட கண்களால் அவனைப் பார்த்தபடியே, ''ஆமாம் சந்த்ரா... அப்பாவைப் பார்க்க ஆஸ்பிடலுக்குப் போறோம். லேடர் ஐ வில் மீட் யூ...'' என்றாள்.

''அப்பாக்கு சீரியஸா... ஐ வில் ஆல்சோ கம்'' என்றவனை, ''வேண்டாம். இப்ப வேண்டாம்...'' என்று சாரதி காருக்குள் இருந்தபடியே கையை ஒரு மாதிரி அசைத்து தடுத்தான்.

சந்த்ரகுமாருக்கு அதற்கு ஒரு சரியான காரணம் இருக்க வேண்டும் என்றுதான் தோன்றியது.

2

கல்யாணம் மட்டும் நடக்க வேண்டிய நேரத்தில் நடந்தே தீரும். அதன் கணக்கு மிக வினோதமானது... கன்யாகுமரியில் பிறந்த ஒரு உயிரையும் கல்கத்தாவில் பிறந்த ஒரு உயிரையும் அதனால் மட்டும்தான் இணைத்து வைக்க முடியும்.

உரிய நேரம் வரும்போது விலகிட வேண்டிய தடைகள் அவ்வளவும் விலகி, நடக்க வேண்டிய எல்லாம் மளமளவென்று நடக்க ஆரம்பித்துவிடும்.

ஒருவர் மனைவியை இன்னொருவர் மணக்க முடியாது என்பது கல்யாண விஷயத்து பொன் மொழியாகும்!

ஆஸ்பத்திரி!

காரை விட்டு இறங்கி ஓட்டமும் நடையுமாக உள்ளே சென்றனர் மூவரும்.

இன்டென்ஸிவ் கேரில் கிடத்தப்பட்டிருந்தார் ராம் மோகன். மூவரும் உள்ளே நுழைந்தபோது அவருக்கு ஆக்ஸிஜன் செலுத்திக் கொண்டிருந்தனர்.

''நல்ல வேளை... சரியான டயத்துக்கு வந்துட்டிங்க. அவர் பாடில ஒவ்வொரு உறுப்பா செயலிழந்துகிட்டு வருது. அனேகமா அதுல முதல் விஷயமா அவரால பேச முடியாம போகலாம். இப்பவே என்ன பேச நினைக்கறீங்களோ பேசிடுங்க. சொல்றேன்னு தப்பா எடுத்துக்காதீங்க. சொத்து

விஷயமா உயில் ஏதாவது தயாரிக்கணும்னா உடனே உங்க லாயருக்கு தகவல் கொடுங்க. யோசிக்ககூட நேரமில்லை...'' என்ற டாக்டரை பரிதாபமாக பார்த்தான் சாரதி.

''நோ மிஸ்டர் சாரதி... இது எமோஷனலா ஃபீல் பண்ற டயம் இல்ல. ரொம்ப ஆக்டிவா திங்க் பண்ண வேண்டிய நேரம், கமான்...'' என்று டாக்டர் தூண்டி விட்டார்.

''நோ டாக்டர்... அப்பா எப்படவோ உயில் எல்லாம் பக்காவா எழுதி வெச்சுட்டார்... அந்த ஏரியாவுல எந்த சிக்கலும் இல்லை...'' என்று கூறிவிட்டு ராம்மோகன் அருகே சென்று கண்ணீர் மல்க நின்றாள். இந்த பக்கமாய் சாரதி, அந்த பக்கமாய் தேவி, அதே வேளையில் ராம்மோகனின் தங்கை தாட்சாயணியும் அவள் மகன் செல்வகுமாரும் மூச்சிரைக்க அங்கே வந்து சேர்ந்தனர்.

சாரதி டாக்டரை பார்க்க, ''உங்கப்பாதான் அவங்களுக்கு தகவல் கொடுத்து வரச் சொன்னார்...'' என்றார் சற்று கிசுகிசுப்பான குரலில்.

''அண்ணே...'' என்று அருகில் வந்து கைகளைப் பற்றினாள் தாட்சாயணி.

''தாட்சா...''

''நான்தாண்ணே... வந்துட்டேண்ணே...''

''தெரி... தெரி... தெரியும் எனக்கு... நீ வந்துடுவேன்னு தெரியும்...''

''அண்ணே ரொம்ப ஃபீல் பண்ணாதண்ணே! உனக்கு எதுவும் இல்லண்ணே...''

''பைத்தியம்... நான் போகப் போறவன். பத்துநாளோ, பதினைஞ்சு நாளோ...''

''இல்லண்ணே... உனக்கு சரியாயிடும்...''

''வேண்டாம்... இந்த சித்ரவதையை அனுபவிக்க என்னால முடியாது... போறதுக்கு முந்தி எனக்கு ஒரு ஆசை...''

''எதுவா இருந்தாலும் சொல்லுண்ணே! நான் தீர்த்து வைக்கறேன்...''

ராம்மோகன் தங்கை தாட்சாயணியிடம் அப்படியே குழைந்து உருகியவராக பேசப் பேச சாரதியும் தேவியும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

இருவருக்கும் தாட்சாயணியை சுத்தமாக பிடிக்காது... அதைவிட அந்த செல்வகுமாரை கட்டோடு பிடிக்காது... அவனை பிடிக்காமல் போக அவனது கிருதா ஒன்று போதும்... இப்பொழுதும் அதை எல்லாம் நினைப்பதில் அர்த்தமேயில்லை என்கிற மாதிரி இருவரும் ராம்மோகனும் தாட்சாயணியும் பேசுவதை கவனித்தனர்.

''தாட்சா... நான் வீட்டை விட்டு ஓடிவந்து உங்களை எல்லாம் மறந்துட்டேன்... இல்ல.''

''அட, என்னண்ணே நீ... அதை எதுக்கு இப்ப பேசறே...?''

''இப்பதானே பழசு எல்லாம் நினைவுக்கு வருது... நான் நிறைய பணத்தை சம்பாதிச்சேன். ஆனா... ஆனா...''

''விடுண்ணே... உனக்கு இப்ப எதுவும் இல்லை. அதான் இப்ப எல்லாரும் ஒண்ணா இருக்கோமே...''

''இதே மாதிரி நம்ம குடும்பம் எப்பவும் இருக்கணும். அது உன்கைலதான் இருக்கு தாட்சா...''

''என்னண்ணே சொல்றே... நான் இனி ஒதுங்கி தூரத்துல இருக்காம தினம் உன்னைப் பார்க்க வர்றேன். போதுமா...''

''நான் போகப் போறவன்... நீ என்னை இப்ப பார்க்கவர்றதுல ஒரு பிரயோஜனமும் இல்லை. ஆனா, எனக்கு கடைசி கடைசியா ஒரு ஆசை...''

''சொல்லுண்ணே...''

''என் மக தேவிக்கு உன் மகனை கொடுப்பியா?'' ராம் மோகன் அப்படி ஒரு விருப்பத்தை வெளியிடுவார் என்று தாட்சாயணியும் சரி, சாரதியும் சரி. துளிகூட எதிர் பார்க்கவில்லை. தேவி கிட்டத்தட்ட நொறுங்கி விட்டாள். பதைப்போடு அண்ணனைப் பார்த்தாள்.

''தேவி... தேவி...'' என்று அப்போது ராம்மோகனும் அழைக்க, குப்பென்று வியர்த்துவிட்டவளாக மெல்ல அப்பா முன் சென்று நின்றாள்.

''தாட்சா... இதோ உன் மருமக... நான் சாகறத்துக்குள்ள இவங்க இரண்டு பேர் கல்யாணத்தை பார்த்துட்டு சாக விரும்பறேன்... எனக்காக எவ்வளவு சீக்கிரம் கல்யாணம் பண்ண முடியுமோ அவ்வளவு சீக்கிரம் பண்றியா?'' என்று கேட்க, தாட்சாயணியிடம் ஒரு இனம் புரியாத தயக்கம்.

''அப்பா... நீங்க தேவை இல்லாம கவலைப் படறீங்கப்பா... உங்களுக்கு சரியாயிடும்பா. நீங்க வீட்டுக்கு வந்த பிறகு இந்த கல்யாணம் பத்தி எல்லாம் பேசலாம்ப்பா... ப்ளீஸ்...'' என்று பேச்சை மாற்ற முயன்றான் சாரதி.

''இல்ல. எனக்கு நல்லா தெரியும். நான் இன்னும் சில நாள்தான் உயிரோட இருப்பேன். எனக்கு என் பொண்ணு கல்யாணத்தை பார்க்கணும். அநாவசியமா காலம் தாழ்த்தாம வேண்டிய ஏற்பாட்டை வேகமா செய்...'' ராம்மோகனின் உதடிரண்டும் துடித்தன.

அப்போது டாக்டர் வேறு வரவும், ராம்மோகன் துடிப்பதை பார்த்து சற்று டென்ஷன் ஆகிவிட்டார்.

''ஸாரி சார்... நீங்க கொஞ்சம்கூட உணர்ச்சிவசப்படக் கூடாது. உணர்ச்சிவசப்படும்போது வயித்துல ஹைட்ரோ குளோரிக் அமிலம் நிறைய சுரக்கும். உங்களுக்கு இரைப்பைல தான் பிரச்சினையே... மிஸ்டர் சாரதி! இவர் ஒரு பேஷண்டுங்கறத மறந்து இப்படியா நடந்துப்பீங்க?'' என்று சாரதியின் பக்கமும் பாய்ந்தார். சாரதிக்கு தர்மசங்கடமாதி விட்டது.

''டாக்டர்... எனக்கு இனிமே பெரிசா என்ன நடந்துடப் போகுது. விடுங்க... நான் சாகறதுக்கு முந்தி என்னோட ஆசைகளை ஈடேற்றிக்க விரும்பறேன். அதுல ஒண்ணு என் மகளோட கல்யாணம்...''

அவரது பாச உணர்ச்சி தேவியையும் சுரீர் என்று தாக்கியது.

''அப்பா ப்ளீஸ்ப்பா... என்னை பத்தி கவலைப் படாதீங்க. நான் இன்னும் படிச்சே முடிக்கலப்பா. என் கல்யாணத்துக்கு இப்ப என்னப்பா அவசரம்?'' என்றாள் மெலிந்த குரலில்.

''வாஸ்தவம்தாம்மா... நான் நல்லா இருந்தா ஏன் அவசரப்படறேன். நான்தான் போகப்போறேனே. அதான் அவசரப்படறேன்.''

''இல்லப்பா உங்களுக்கு ஒண்ணுமில்ல. நீங்க குணமாகி நூறு வருஷம் எங்க கூட வாழப் போறீங்க...''

''போதும்மா... உன் நம்பிக்கையை நினைச்சு சந்தோஷப்படறேன். ஆனா, அனுபவிக்கற எனக்குதான் கஷ்டம் தெரியும்... நிறைவேத்தும்மா ப்ளீஸ்...'' அவரது குரல் அந்த கெஞ்சலோடு சுருதி குறைந்து அப்படியே அடங்கியது. பல்ஸ் டவுன் ஆகத் தொடங்கவும் ஆக்ஸிஜன் அளவைக் கூட்டி மானிட்டரில் பரபரப்போடு பார்வையை வைக்கச் சென்றார் டாக்டர்.

அதற்கு மேல் அங்கு நின்றால் நிச்சயம் விபரீதம்தான் என்பது தேவிக்கும் புரிந்தது. மெல்ல வெளியே வந்தாள். வெளியே தாட்சாயணியும் செல்வகுமாரும் காத்திருப்பது போல் தெரிந்தது.

சாரதியும் இந்துமதியும் அவர்களைப் பார்க்கவும், அவளும் அருகில் வந்தாள்.

''நல்லா இருக்கியா சாரதி?'' என்று நயமான குரலில் கேட்டாள். சாரதியும், ''இருக்கேன் அத்தை...'' என்றான். அவன் பதிலில் உயிரே இல்லை.

''உன் அப்பாவை இப்படிப் பார்ப்பேன்னு நான் நினைக்கலப்பா...'' என்றபோது தாட்சாயணியின் கண்களில் நீர் துளிர்த்துவிட்டது. ஆனால், அவள் மகனான செல்வகுமார் மட்டும் குறுகுறுவென்று பார்த்தபடியே இருந்தான்.

''ஆமாம் அத்தை... எங்களுக்கே என்ன செய்யறதுன்னு தெரியல...''

''கவலைப்படாதப்பா... அப்பா ஒண்ணும் உங்கள நடுத்தெருவுல விட்டுட்டு, போகல... கோடிக்கணக்குல சொத்துக்களோடதானே விட்டுட்டுப் போறாரு...''

அத்தையின் பதிலில் ஒரு வித்தியாசமான வாடை. சாரதி அவளை ஆழமாகப் பார்த்தான்.

''இப்பகூட பாரு... அண்ணனுக்கு சொந்தம் விட்டுப் போயிடக்கூடாதுங்கறதுதான் எண்ணம். அதான் என் மகனுக்கு உன் தங்கச்சிய கொடுக்கத் துடிக்கறார். எனக்கு இதுல எந்தவித ஆட்சேபணையும் இல்ல சாரதி. அண்ணன் ஆசையை நான் பரிபூரணமா நிறைவேத்தி வைக்க விரும்பறேன்...'' என்று அவளாக முன்வந்து அட்சதையை போட்டுக் கொண்டாள். அப்போது பார்த்து திரும்பிய தேவி முகத்தில் அதற்கு எதிர்ப்பான உணர்ச்சிகள். ஆனால், தாட்சாயணி தேவியைப் பார்க்கவேயில்லை.

''சாரதி! காலம் தாழ்த்தாம வேண்டிய ஏற்பாட்டை வேகமா செய்யுப்பா. நாளைக்குகூட நல்ல நாள்னு கேள்விப்பட்டேன்.''தாட்சாயணியின் வேகம் சாரதிக்கே கூட ஆச்சரியமளித்தது.

''அது சரி அத்தை! உன் மகன் என்ன வேலை பாக்கறான். எவ்வளவு படிச்சிருக்கான்... அதபத்தி நீ எதுவும் சொல்லலியே...''என்றான் சாரதி.

அவன் அப்படி கேட்டதே தேவிக்குப் பிடிக்கவில்லை.

''அண்ணே! நான் புறப்படறேன். நீ பேசிட்டு வா. நான் இப்ப எப்படிப்பட்ட மனநிலைல இருக்கேன்னு உனக்கு நல்லாவே தெரியும் அதுக்கு தகுந்த மாதிரி முடிவு எடு...'' என்று நறுக்குத் தெறித்தாற்போல சொல்லிவிட்டுப் புறப் பட்டாள். தேவி தன்னை வட்சியமே செய்யாமல் சாரதியிடம் மட்டும் சொல்லிக் கொண்டு சென்றது தாட்சாயணியையும் சற்று நெருடியது.

''என்னப்பா... ஏன் தேவி ஒரு மாதிரி பேசிட்டுப் போறா?''என்று சாரதியிடம் பேச்சை மாற்றப் பார்த்தாள்.

''அப்பா இப்படிக் கல்யாணப் பேச்செடுப்பார்னு அவ கொஞ்சம்கூட எதிர்பார்க்கல அத்தை. அவளுக்கு அமெரிக்காவுக்கெல்லாம் போய்ப் படிக்கணும்னு ஆசை.''

''அதனால் என்ன... கல்யாணத்துக்கு பிறகு தாராளமா அவ எங்க வேணா போய்ப் படிக்கட்டும். அதுக்கு நானோ என் மகனோ எந்த தடையும் போட மாட்டோம் சாரதி...''

''ஆமாம் மச்சான்... இதெல்லாம் ஒரு விஷயமே இல்லை.'' செல்வகுமாரும் நெருங்கி வந்து முதன்முதலாக வாய் திறந்தான். அவன் மச்சான் என்று உறவுமுறை வைத்தது சுத்தமாய் சாரதிக்குப் பிடிக்கவில்லை. அது சாரதியின் பதிலிலும் எதிரொலிக்கத் தொடங்கியது.

''செல்வகுமார்... நான் உன் மாமன் மகன். நீ என் அத்தை மகன்... கிட்டத்தட்ட சமவயசு. இந்த மச்சான், மாப்ளை பேச்செல்லாம் திடீர்னு எதுக்கு?''என்றான்.

''இல்ல... நான் தேவியைக் கட்டிக்கிட்டா நீங்க எனக்கு மச்சான்தானே?''

''கட்டிக்கிட்ட பிறகுதானே?''

''என்ன மச்சான்! ஏதோ நடக்க முடியாத ஒரு விஷயம் மாதிரி பேசறீங்க. பாவம் மாமான்னு நானே எவ்வளவு தூரம் என் மனசை மாத்திக்கிட்டு இந்த கல்யாணத்துக்கு சம்மதம் தெரிவிச்சிருக்கேன் தெரியுமா?''

''போதும் செல்வகுமார்... நான் சுத்திவளைச் செல்லாம் பேசாம நேரா விஷயத்துக்கு வந்துடறேன். தேவி அவ கூட படிக்கற சந்த்ரகுமார்ங்கற ஒரு சீனியர் மெடிக்கல் காலேஜ் ஸ்டூடண்டை லவ் பண்றா. இந்த காதல் எங்க எல்லாருக்கும் தெரியும். சந்த்ரகுமாரும் படிப்பு அந்தஸ்துன்னு எல்லாத்துலயும் ஒரு நல்ல நிலைல இருக்கிற நபர்.''

''சரிப்பா... இது அண்ணனுக்கு தெரியுமா?''

''தெரியாது அத்தை... ஒரு சரியான சமயத்துல சொல்லணும்னு நினைச்சுகிட்டிருந்தோம். அதுக்குள்ள அப்பா இப்படி ஆஸ்பத்திரியில் வந்து படுத்த படுக்கையா ஆயிட்டார்...''

''சரி... இப்ப நீ என்ன செய்யப்போறே?''

''இது என்ன அத்தை கேள்வி. அப்பாவுக்கு ஆசை தேவிக்கு ஒரு கல்யாணம் நடக்கணும்கறதுதான். அந்த கல்யாணத்தை நாங்க சந்த்ரகுமாரோட பண்ணி வெச் சுடறோம். நீங்களும் தேவி நிலையை புரிஞ்சுகிட்டு இந்த கல்யாணத்துக்கு ஆசீர்வாதம் பண்ணுங்க. இதுதான் இப்போதைய நிலைல சாத்தியமாகக் கூடிய விஷயம்.''

சாரதியின் பதிலில் ஒரு தீர்மானம் இழையோடியது. தாட்சாயணி உடனே திரும்பி மகனைப் பார்த்தாள். அவனோ, ''என்னம்மா... மாமா பழசை மறக்காதவர், சொந்தம் பிரியக் கூடாதுன்னு நினைக்கறவர் அப்படி இப்படின்னே... இப்ப மச்சான் என்னடான்னா இப்படிச் சொல்றார்.''

''சாரதி அவன் நிலையை சொல்லிட்டான்... நம்ம பதிலை நாமதானப்பா சொல்லணும்...''

''ஆமாமா... அதேசமயம் இந்த காதல் கல்யாணத்துக்கு மாமா சம்மதிக்கணுமே...?'' செல்வகுமாரின் பதிலில் ஒரு சந்தேகமும், ராம்மோகன் நிச்சயம் சம்மதிக்க மாட்டார் என்பது போலவும் ஒரு பாவனை இருந்தது.

''அப்பாகிட்ட பக்குவமா சொல்லி சம்மதம் வாங்க வேண்டியது என் பொறுப்பு. நீ அதைபத்தி எல்லாம் கவலைப்படத் தேவையில்லை செல்வகுமார்...'' என்று சற்று கோபமாக பதில் சொன்ன சாரதி, திரும்பி இந்துமதியை பார்த்தான்.

''அப்ப கிளம்புங்க... நாம் போய் மாப்ளை சந்த்ரகுமார் வீட்ல விவரமா உட்கார்ந்து பேசிட்டு வந்துடுவோம்...'' என்றாள் அவள். பின் இருவரும் வேகமாக அங்கிருந்து விலகி வெளியே பார்க்கிங்கில் நிற்கும் காரை நோக்கிச் சென்றனர்.

தாட்சாயணி அவர்கள் விலகிய நிலையில் செல்வகுமாரைப் பார்த்து, ''என்னடா இது... வெண்ணெய் திரளும் போது தாழி உடையுது...'' என்றாள்.

''தாழி உடையாம இருக்கணும்னா நீ மாமா கிட்ட போய் அழுவறதுலதாம்மா இருக்கு...'' என்றான் அவனும்.

''அழப் போய்தானேடா அண்ணனும் இப்படி ஒரு கல்யாணப் பேச்சை எடுத்தாரு...''

''எங்க... அந்த பொண்ணு இப்படிக் காதல் கத்தரிக்காய்னு வேற ஒருத்தன நினைச்சுக்கிட்டிருக்குதே?''

''அதுக்கென்னடா பண்ண... உன் வரைல அதிர்ஷ்டம் நபால்ல வந்தாதுரதிர்ஷ்டம் தந்தியிலல்ல வருது...''

''அம்மா! இப்படி எல்லாம் எதாவது பழமொழிய சொல்லி இந்த கல்யாணம் நடக்காம போக நீயும் காரணமாயிடாதே. நமக்கு இருக்கற கடனுக்கு மாமாவோட சொத்துல வாற பங்குலதான் நாம கரையேறணும். ஞாபகம் வெச்சுக்க...''

''அட போடா... நீ என்ன படிச்சிருக்கே? என்ன பண்ணிக்கிட்டிருக்கேன்னு சாரதி கேட்டப்போ எனக்கு அப்படியே நெஞ்சையே அடைச்சிடிச்சு தெரியுமா?''

''அந்த விஷயத்துல்லாம் பயப்படாதம்மா... பி.ஈ. முடிச்சிருக்கேன். சொந்தமா பிஸினஸ் பண்ணப் போறேன்னு சும்மா சொல்லிவை...''

''ஏண்டா முழுசா ஒரு B.A.வைகூட நீ பாஸ் பண்ணல. இப்படி B.E. படிச்சிருக்கேன்னு சொல்லிட்டுப் பின்னால் உண்மை தெரிய வந்தா என்னடா பண்றது?''

''கல்யாணத்துக்கு பிறகு இதெல்லாம் சின்ன விஷயமா போயிடும்மா... தாலி கட்டிட்ட பிறகு தேவியால் என்னம்மா பண்ண முடியும்?''

அவர்கள் இருவரும் பேசிக் கொள்வது அங்கு பக்கமாக அமர்ந்திருந்த நர்ஸ் ஒருத்தியின் காதுகளில் விழுந்த படியே இருந்தது. அவள் முகத்தில் அதன் எதிரொலிகள்.

தாட்சாயணி நடுவில் பேச்சை கத்தரித்துக் கொண்டு உள் பக்கமாய் போய் ராம்மோகன் நிலையை ஒரு பார்வை பார்த்தாள். ஆக்ஸிஜன் சிலிண்டர் உதவியுடன் சுவாசித்தபடி படுத்திருந்தார். பக்கத்தில் மானிட்டரில் ஒரு ஒளிக் கோடு

சீராக ஓடியபடி இருந்தது. அப்படி இருந்தால் பெரிதாக ஆபத்தில்லை, எல்லாம் நார்மலாக இருக்கிறது என்று அர்த்தம்.

தாட்சாயணியும் ராம்மோகனை நோக்கி நடந்தவளாக அடுத்த கட்டத்துக்குத் தயாரானாள்!

3

நம் வாழ்வில் விதி என்கிற ஒரு விஷயம் மிக வினோதமானது. இந்த விதியை பெரிய மேதைகள், புத்திசாலிகள் என்று சொல்லிக் கொள்பவர்கள் துளிகூட மதிக்கவோ, இல்லை நம்பவோ மாட்டார்கள். விதியாவது கிதியாவது... எல்லாம் மதியாகிய புத்திதான் என்று அடித்துப் பேசுவார்கள்! பாவம் அவர்கள்... அவர்களை அப்படி பேசவைப்பதேகூட அவர்களின் ஒரு வித விதிப்பாடுதான் என்பது அவர்களுக்கு தெரியாது. இந்த விதி ஒருவருக்கு தவறாக இருந்துவிட்டால் அதை மாற்ற அந்த சர்வேஸ்வரனாலும் முடியாது என்பதே சத்தியம். ஒருவரது தப்பான விதி ஒரு ஊரையேகூட தவறாக சிந்திக்க வைத்துவிடும். அது எப்படி என்றால் அது அப்படித்தான்...!'

மொட்டை மாடியில் நின்றுகொண்டு சந்த்ரகுமாரை அழைத்திருந்தாள். கையில் செல்போன், முகத்தில் ஒரு வித படபடப்பும் கோபமும் இழையோடிக் கொண்டிருந்தது.

''சொல்லு தேவி... அப்பாக்கு எப்படி இருக்கு?''

''அப்பாக்கு என்ன... அவர் உயிர் போறதுக்குள்ள இங்க பல பேர் உயிர் போயிடும் போல இருக்கு...''

''என்னடா இவ்வளவு விரக்தியா பேசறே... எனி ப்ராப்ளம்?''

''ஆமாம் சந்த்ரா.. எனக்கு இப்பவே உங்கள பார்த்து உங்கமடில தலை வைச்சு அழணும் போல இருக்கு...''

''உணர்ச்சிவசப்படாம என்ன நடந்ததுன்னு சொல்...'' தேவியும் ஆஸ்பத்திரியில் நடந்ததை அப்படியே அவனிடம் சொல்லி முடித்தாள். மறு பக்கமாய் சந்த்ரகுமாரிடம் ஒரு வித மௌனம்.

''சந்த்ரா... என்னாச்சு... ஏன் எதுவும் பேச மாட்டேங்கறீங்க...''

''ஒண்ணுமில்ல தேவி. இது ஒரு விதமான சென்டிமெண்ட் விஷயம். நோ ப்ராப்ளம். உன் அண்ணனுக்குதான் நம்ம விஷயம் தெரியுமே... அவர் சமாளிச்சிடுவார்...''

''எனக்கு அந்த நம்பிக்கைதான் சந்த்ரா. இன்ஃபாக்ட் அந்த அத்தையும் சரி, அந்த செல்வகுமாரும் சரி... பார்க்கவே பிடிக்கல சந்த்ரா. எங்க அத்தை குளிச்சே பல நாள் ஆன மாதிரி ஒரு கெட்ட வாடை. அவனோ அச்சு அசல் தெருப் பொறுக்கி மாதிரியே இருக்கான்...''

''லுக் தேவி... நீ என் மேல இருக்கற பிரியத்தால் அவங்கள எதுக்கு தப்பா சொல்ற. தைரியமா இரு. எல்லாம் நல்லபடியா நடக்கும்.''

''சந்த்ரா! ஒரு வேளை அண்ணனால முடியாமற் போய் நான் அந்த செல்வகுமாரைத்தான் கட்டிக்கணும்கற மாதிரி ஒரு கட்டாயம் ஏற்பட்டுட்டா...''

''இனிதானா ஏற்படணும். இப்பவே அந்த நிலைதானே தேவி...''

''ஆமாம்... அதிகபட்சம் ஒரு வாரம் அதுக்குள்ள என் கல்யாணம், அப்புறம் அப்பாவோட சாவுன்னு கண் எதிர்ல

நிக்கிற விஷயங்கள் நினைச்சா எனக்கு படபடன்னு வருது சந்த்ரா...''

''தைரியமா இரு... இந்த மாதிரி டென்ஷனான சமயங்கள்லதான் தியானம் யோகால்லாம் ஒரு மனுஷனுக்கு ரொம்ப பயன்படும். ஆனா, உனக்குதான் அதுல எல்லாம் இன்ட்ரஸ்ட்டே இல்லையே...''

அந்த நிலையிலும் தேவி அதைக் கேட்டு க்ளுக்கென்று சிரித்து விட்டாள்.

''என்ன தேவி... படபடன்னு இருக்குன்னே, இப்ப என்னமோ பெரிய ஜோக்க கேட்டுட்ட மாதிரி சிரிக்கிறே?''

''சிரிக்காம... புத்திய பயன்படுத்தி துணிச்சலா முடிவு எடுக்க வேண்டிய இந்த நேரத்துல தியானம் யோகான்னு போய் உக்காந்துக்கறது எவ்வளவு பெரிய மடத்தனம்... அது ஒரு வித எஸ்கேப்பிஸம்னு உங்களுக்கு தோணலையா?''

''எஸ்கேப்பிஸமா... தியானம் பண்றதும் யோகா பண்றதுமா?''

''அப்சல்யூட்லி... வேற அதை என்னன்னு சொல்றது சந்த்ரா...''

''தேவி! நீ ஒரு மெரிட் ஸ்டூடண்ட்! படிப்பு, ஸ்போர்ட்ஸ், கல்ச்சுரல் ஆக்டிவிடீஸ்னு எல்லாத்துலயும் நம்பர் ஒன் - ஆனா சில நுட்பமான சப்பெஜக்ட்டுல நீ ரொம்ப ஆவரேஜாவே இருக்கியே...''

''சந்த்ரா... நான் இப்ப இருக்கற நிலை தெரியாம நீங்க பேசிக்கிட்டு போறீங்க. ஹெல்த்தியா இருக்கறதுக்கு தியானமும் யோகாவும் ஹெல்ப் பண்ணலாம். நமக்கு இப்ப ஏற்பட்டிருக்கற நெருக்கடிக்கு அது எப்படி உதவ முடியும்?''

''இந்த மாதிரி நெருக்கடியான தருணங்கள்ல எப்படி முடிவு எடுக்கறோம்கறதுலதான் வாழ்க்கையோட வெற்றி

தோல்வி அடங்கியிருக்கு... சரியான முடிவை எடுக்கத்தான் நான் தியானத்துல உட்காரணும்னேன்...''

''இதுல சரியான முடிவு தப்பான முடிவுன்னு ரெண்டு இருக்கா என்ன... என் வரைல ஒரே முடிவுதான். அது நம்ம கல்யாணம்.''

''ரைட்... அந்த கல்யாணத்தை உங்கப்பாவுக்கு பாதிப்பு இல்லாம பண்ணிக்கணும் இல்ல.''

''அது சாத்தியம் இல்ல... ஏன்னா அவர் நாம பேசறத கேக்கற நிலைல இல்ல.''

''அப்ப இப்ப நமக்கு தேவை உங்க அப்பாவோட கேக்கற நிலை. ஆம் ஐ ரைட்?''

''ரைட்... ஆனா, அது இம்பாசிபிள். அப்பாவோட பல்ஸ் குறைஞ்சுகிட்டே போகுது. வயித்துல கேன்சர் முத்தி வெடிக்கற கன்டிஷன்.''

''கூல் பேபி, கூல்... உன் அப்பாவுக்கு உயிர் போயிடலையே... அப்புறம் என்ன கவலை?''

''அப்பா இப்ப கிட்டத்தட்ட செத்துட்ட மாதிரிதான் சந்த்ரா. நமக்கு இருக்கறது ஒரே வழிதான்... இம்மீடியட்டா நாம ரெண்டு பேரும் கல்யாணம் பண்ணிக்கிட்டு மாலையும் கழுத்துமா போய் நின்னுடணும். அவர் ஆசீர்வாதம் பண்ணா பண்ணட்டும். இல்ல நடக்கறது நடக்கட்டும்.''

''பார்த்தியா... பார்த்தியா... பெத்த அப்பாவைவிட உனக்கு உன் காதல் பெருசா போயிடிச்சு பார்த்தியா?''

''இதை என் காதலன் நீங்களே சொல்லிக்காட்றதுதான் கொடுமை...''

''நான் நியாயத்தை சொன்னேன்.''

''மண்ணாங்கட்டி. சாகப்போறவருக்கு எதுக்கு இப்படி வேண்டாத ஆசைகள். இவர்பாட்டும் எனக்கென்னன்னு

போய்ச் சேர்ந்துடுவார். இங்க நான்ல அந்த அருவா மீசைகாரன் கிட்ட மாட்டிக்கிட்டு சீரழியணும்.''

''டோண்ட் பீ எக்ஸைட்... எல்லாம் நல்லபடியா நடக்கும். இப்ப உனக்கு தேவை அமைதி. நீ உடனே கிளம்பி என் வீட்டுக்கு வா. நாம ரெண்டு பேரும் ஒரு முக்கியமான இடத்துக்கும் போறோம். அதன் பிறகு நம்ம சிக்கல் எப்படி திசை மாறி திரும்பப் போவுதுன்னு நீயே பார்ப்பே...''

''முக்கியமான இடம்னா... எங்க சந்த்ரா...?''

''நீ வா... சொல்றேன்.''

''அதுல கூடவா சஸ்பென்ஸ்...''

''யெஸ்... இனிமே எல்லாமே சஸ்பென்ஸ்தான். ஒவ்வொரு நொடியும் சஸ்பென்ஸ்தான்.''

''பீடிகை எல்லாம் பலமா இருக்கே... நாம கட்டாயம் ஜெயிப்போம்தானே?''

''ஜெயிச்சாச்சுன்னே வையேன். இன்ஃபாக்ட் உங்கப்பா பரிபூரணமா குணமாகறதுக்குகூட வாய்ப்பு இருக்கு தேவி.''

''என்ன சந்த்ரா சொல்றீங்க... நீங்க பேசறத பார்த்தா ஏதாவது மேஜிக் பண்ணப் போறீங்களா?''

''நான் பண்ணப் போறதில்ல. ஆனால், ஒருத்தர் பண்ணுவார்.''

''ஒருத்தர்... யார் அவர்?''

''போன்லயே எல்லாத்தையும் கேட்டா எப்படி? நீ கிளம்பி வா. போகப் போக உனக்கு எல்லாம் புரியும்.''

சந்த்ரகுமார் மறுபக்கம் துண்டித்துக் கொண்டான்.

தேவிக்கும் ஒரு புது தெம்பு வந்திருந்தது. சந்த்ரா சாதாரணமாக பேசுபவன் இல்லை. அதிலும் தானே ஓடிப் போய்த் திருமணம் செய்து கொள்ளலாம் என்று எடுத்துக் கொடுத்தும் அதை மறுத்து நடப்பவனை ஜென்டில்மேன் என்றுதானே சொல்ல வேண்டும்.

4

நம்முடைய அறிவுக்கும் திட்டமிடலுக்கும் அப்பாற்பட்டு ஏதாவது நடந்தால் அதை நாம் ஒரு அபூர்வமான விஷயமா நினைக்கிறோம். அப்படி எவ்வளவோ சம்பவங்கள் இந்த உலகில் தினம் தோறும் நடந்து கொண்டுதானிருக்கிறது. அதை புரிந்து கொள்ளவும் முயல்கிறோம். ஆனால், அதில் ஒரு அளவுக்கு மேல் நம்மால் அலச முடிவதில்லை. அப்படிப்பட்ட தருணங்களில் அதை தற்செயல் என்றோ, இல்லை கோ இன்சிடென்ஸ் என்றோ கூறி அதை ஒதுக்கி வைத்து விடுகிறோம். உதாரணமாக, பெரிய அளவில் சமீப காலத்தில் இயற்கை சீற்றங்கள் ஏற்பட்டன, குஜராத் பூகம்பம், சுனாமி, கும்பகோணம் தீ விபத்து... இப்படி வரிசையாக ஏற்பட்ட உற்பாதங்கள் அவ்வளவும் 26-ம் தேதி என்று ஒரு குறிப்பிட்ட தேதியில்தான் நடந்தது. இதை தற்செயல் என்பதும், இதற்கு பின்னால் நம் அறிவுக்கு அகப்படாத ஒரு காரணம் உள்ளது என்று யூகிப்பதும் அவரவர் புத்திசாலித்தனத்தை பொருத்ததாகும்...

சந்த்ரகுமாரின் பங்களா!

தனது டொயோட்டா காரில் அந்த பங்களாவின் போர்டிகோவுக்குள் ஊடுருவினாள் தேவி. வெளியே புல்வெளியில் பேப்பர் படித்துக் கொண்டிருந்தார் சந்த்ரகுமாரின் அப்பா திருஞானம். காரைவிட்டுக் கீழிறங்கும் தேவியை பார்த்து இணக்கமாய் சிரித்தார். சிரித்தபடியே, ''வாம்மா

மருமகளே...'' என்றார். அவர் அப்படி அழைப்பது தேவிக்கும் இதமாக இருந்தது. அவரை நோக்கித்தான் முதலில் நடந்தாள். அவரை நெருங்கிய வேகத்தில் காலைத் தொட்டு வணங்கினாள்.

''நல்லாரும்மா... என்ன சந்த்ரா வரச் சொன்னானா?''

''ஆமாம் மாமா... வீட்ல ஒரே குழப்பம்...''

''என்கிட்டயும் சொன்னான். இதுக்குத்தான் உங்க காதலை முதல்லயே உங்கப்பாகிட்டயும் சொல்லச் சொன்னேன். ஆனா, நீங்க அப்ப அதை பெருசா எடுத்துக்கலை. இப்ப அதுதான் சிக்கலா வந்திருக்கு.''

''அங்கிள்... அப்பா இவ்வளவு சீக்கிரம் எங்களை விட்டுப் போகக் கூடிய ஒரு சூழ்நிலை வரும்னு யாருமே நினைக்கலியே...''

''அதுவும் சரிதான்... இப்படி எதிர்பார்க்காத தெல்லாம் நடக்கறதுக்கு பேர்தாம்மா வாழ்க்கை. அதனால் தான் ஒரு நல்ல காரியத்தை செய்ய ஆசைப்பட்டா உடனே அதை செய்துடணும்னு சொல்வாங்க. கொஞ்சம் விட்டாலும் நம் வாழ்க்கைல எதுவேணா நடந்துடலாம்... அதனால் எல்லாமே மாறிப் போயிடலாம்.''

''இந்த மாதிரி அனுபவப்பட்டுதான் உணரணும்னு இருக்கும்போது யார் என்ன செய்ய முடியும் அங்கிள்...''

''கவலைப்படாதம்மா... நாம வேணும்னா சராசரியா அனுபவப்பட்ட பிறகு திருந்தற ஜென்மங்களா இருக்கலாம். ஆனா, பிறக்கும்போதே சிலர் அருளோட பிறந்து வளரும் போதும் அந்த அருளை வளர்த்துக்கிட்டிருக்காங்க. அவங்க தயவு நமக்கு இருக்கும்போது நாம அநாவசியமா கவலைப்பட தேவையில்லை.''

திருஞானம் யாரைச் சொல்கிறார் என்று தேவிக்கு புரியவில்லை. விழித்தாள்.

''என்னம்மா... நான் யாரைச் சொல்றேன்னு உனக்கு தெரியலியா?''

''தெரியல அங்கிள்...''

''பரஞ்ஜோதி சுவாமிகள்னு ஒரு சித்தர் சாமி இருக்காரும்மா. அவருடைய அறிமுகமும் பழக்கமும் கிடைக்க நானும் என் மகனும் கொடுத்து வெச்சிருக்கணும்னு தான் சொல்லணும்.''

''சித்தர் சாமியா?'' தேவி திருப்பிக் கேட்ட விதமே சரியாக இல்லை.

''என்னம்மா உன் தொனியே தப்ப இருக்கே?''

''இல்ல... எங்க சிக்கலை ஒரு சித்தரால எப்படிச் சரிசெய்ய முடியும்?''

''உங்க சிக்கல்ல நீயோ என் பையனோ பிரதான காரணம் இல்லையே... உங்க அப்பாதானே காரணம்?''

''ஆமாம்...''

''அவரை இவரால தான் சரிசெய்ய முடியும்?''

திருஞானம் சொல்லி முடிக்க, தேவி நெடுநேரம் வரை எதுவும் பேசாமல் அவரையே பேந்தப் பேந்தப் பார்த்தாள்.

''என்னம்மா இப்படிப் பாக்கறே?''

''இல்ல அங்கிள், நீங்க எப்ப இருந்து இப்படி எல்லாமும் யோசிக்க ஆரம்பிச்சீங்கன்னு யோசிக்கிறேன்...''

''சும்மா நேராவே முட்டாப்பயலேன்னு சொல்லு... எதுக்கு சுத்திவளைச்செல்லாம் பேசறே?''

''இல்ல அங்கிள்! இது முட்டாள்தனம்கூட கிடையாது. அதுக்கும் ஒருபடி மேல்...''

தேவியின் அழுத்தமான பதில் திருஞானத்தை சந்தோஷமாக சிரிக்க விட்டது. அப்போது சந்த்ரகுமாரும் தேவி வந்திருப்பது தெரிந்து புல்வெளிக்கே வந்து விட்டான்.

''வாப்பா... நான் நம்ம பரஞ்சோதி சாமி பத்தி சொல்லியிருந்தேன். தேவி சிரிக்குது...'' என்றார் மகனிடம் திருஞானம்.

''நானும் நீங்க சாமி பத்தி சொன்னப்ப முதல்ல சிரிக்கத் தானேப்பா செஞ்சேன்? அப்புறம் சாமிய பார்த்த பிறகுதானே ஒத்துக்கிட்டேன்.''

''அப்ப தேவிக்கும் அப்படி ஒரு அனுபவம் ஏற்பட்டாதான் சரிப்படும்னு சொல்...''

''ஆமாம்ப்பா... நான் தேவியைக் கூப்பிட்டிருக்கிறதே சாமியைப் பாக்கத்தான்பா...''

''அப்படியா... ரொம்ப சந்தோஷம் சீக்கிரமாய கூட்டிக் கிட்டுப் போ. உங்கவரைல உங்க கைல நேரமே இல்லை. சில நாட்கள்ல உங்க சிக்கல் தீர்ந்தாகணும். இந்த மாதிரி நம்ம மனசுக்கு வெளியே இருக்கற சிக்கல்களையும் பிரச்சினை களையும் சாமி மாதிரி ஆட்களாலதான் தீர்க்க முடியும்...''

''திருஞானம் பேசப் பேச தேவிக்குள் கோபம்தான் அதிகரித்தது. அதைவிட கோபம் சந்த்ரகுமாரின் மேல...''

''சந்த்ரா... நீங்க என்ன வரச் சொன்னது அந்த சாமியாரை பார்க்கவா?''

''ஆமாம் தேவி... புறப்படு. நாம இப்ப புறப்பட்டாதான் குற்றாலம் போய் அங்க புலியருவிக்கும் மேலே இருக்கற அவரோட குடிசைக்கு இருட்டறதுக்குள்ள போக முடியும்.''

''வாட்...நாம இப்பகுற்றலாம்வரைபோகப்போறோமா?''

''ஆமாம்... கார்லதானே தேவி! ஜஸ்ட் த்ரீ அவர்ஸ்...''

''சந்த்ரா! இது உங்களுக்கே டூ மச்சா தெரியல. அந்த மூணு மணி நேரம் இங்க நாம உச்சாந்து யோசிச்சா ஏதாவது ஒரு வழி தெரிய வரலாம்...''

''திரும்பத் திரும்ப நாம கல்யாணம் பண்ணிக்கறது தான் ஒரே வழின்னு தெரியும். நாம கல்யாணம் பண்ணிக்கத்தான் போறோம். ஆனா, உங்கப்பா மனம் நோகாம... அவர் ஆசீர்வாதத்தோட...'' சந்த்ரகுமார் மிகுந்த நம்பிகையோடு பேசினான். அவன் கருத்தில் ஒரு நியாயமும் இருந்தது.

''சரி, நான் தெரியாமதான் கேக்கறேன்... அந்த சாமியாரால எந்த விதத்துல நமக்கு உதவ முடியும்?''

''அது இப்ப எனக்கு எப்படி தேவி தெரியும். அவரைப் போய் பார்த்து பேசும்போதுதான் தெரியும்.''

''சந்த்ரா... எனக்கு என்ன சொல்றதுன்னே தெரியல. நீங்க அநாவசியமா டயத்தை வேஸ்ட் பண்ணிக்கிட்டிருக்கீங்க.''

''நோ... இதுதான் என்னுடைய சரியான முடிவு. உங்கப்பாவுக்கு இப்ப உடனடி தேவை நிவாரணம். அவர் குணமாகத் தொடங்கிட்டா டென்ஷன் விலகிடும். அவரும் அவசரப்பட்டு இப்பவே கல்யாணம் பண்ணனும்கற அபிப்பிராயத்துல இருந்து மாறிடுவாரு. அதன் பிறகு நம்ம விஷயத்தை பக்குவமா எடுத்துச் சொல்லி நாம நம்ம காதல்லயும் ஜெயிக்க முடியும்.''

''அப்ப என் அப்பாவை குணப்படுத்தத்தான் நாம இப்ப அந்த சாமியாரை பார்க்கப் போறோமா?''

''ஆமாம்.''

''நீங்களும் நானும் டாக்டர்ஸ்... கேன்சர் பத்தி நமக்கு நல்லாவே தெரியும். அதுக்கு இந்த உலகத்துல இது வரைலயும் மருந்து கண்டுபிடிக்கப்படலைன்னும் தெரியும். நீங்களா இப்படிப் பேசறீங்க?''

''க்ரெக்ட்... இதுக்கு மருந்து அலோபதில இல்ல... சித்தால இருக்கு. அதான் சித்தர்கிட்ட போக முடிவு செய்தேன்.''

''சித்தால இருக்குன்னா அந்த சித்தர் அதை உலகறியச் செய்திருக்கலாமே... அவர் ஏன் தனக்குள்ளே வெச்சிக்கிட்டிருக்காரு...

''அதெல்லாம் அவங்க விருப்பம். நாம கேள்வி கேட்க முடியாது.''

''முட்டாள்தனமா பேசாதீங்க... அவர் ஒண்ணும் அந்த மருந்தை சும்மாகூட கொடுக்க வேண்டாம். பல ஆயிரம் பேரை காப்பாத்தற ஒரு புண்ணியத்துக்காக, சமுதாய கடமையா நினைச்சு செய்யலாமே...''

''தேவி! அவசரப்பட்டு வார்த்தைகள் விடாதே. எல்லாத்துக்கும் ஒரு சரியான பதில் சாமிகிட்ட இருக்கு. நீ புறப்படு. அவரைச் சந்திச்ச பிறகு உனக்குத் தானா புரியவரும்...''

சந்த்ரகுமார் தூண்டினான். அவளும் அரைமனதாக அவனோடு கிளம்பினாள். அவர்கள் ஏறி அமர்ந்து கொண்டு புறப்பட்ட டொயோட்டாவிடம் நல்ல வேகம்.

திருஞானம் ஆகாசத்தை பார்த்து 'சாமி... உங்கள பார்க்க வர்ற இவங்கள நீங்கதான் நல்லபடியா சேர்த்து வெக்கணும்...' என்று பிரார்த்தித்துக் கொண்டார்.

ஹாஸ்பிடல்...!

சாரதியும் இந்துமதியும் திரும்பி வந்திருந்தனர். வெளியே ரிசப்ஷன் நாற்காலியிலேயே உட்கார்ந்திருந்தாள் தாட்சாயணி. சாரதியை பார்க்கவும் முகத்தை பரிதாபமாக வைத்துக் கொண்டு எழுந்து நின்றாள். சாரதிக்கு அப்போது தான் தாட்சாயணியை வீட்டிற்கு அழைக்காத தவறு புரிந்தது.

சொந்த அத்தை... பல வருடங்களாக வந்து போதல் என்கிற விஷயம் இல்லாமல் போய்விட்டது. அதற்காக அப்பாவுக்கு உடம்பு சரியில்லை என்று பார்க்க வந்திருக்கும் அத்தையை இப்படி ஆஸ்பத்திரியிலேயே விட்டுவிட்டு போனது அவனை நெருஞ்சி முள்ளாய்க் குத்தியது. அத்தையும் அவனருகில் வந்தவளாக, ''அண்ணன் இன்னும் கண்ணே திறக்கலப்பா... டாக்டரை கேட்டேன். அதிகபட்சம் 24 மணி நேரம் தாங்கினா அதிகம்னுட்டார்...'' என்றாள். அந்தப் பேச்சே சாரதியை நசுக்கியது. முகம் மாறிப் போனது.

''சரி! அத்தை, நீங்க இப்ப எங்க தங்கி இருக்கீங்க?'' என்று கேட்டான்.

''செல்வத்தை ஹோட்டல்ல ரூம் போடத்தான் அனுப்பியிருக்கேன். இப்ப வந்துருவான்...'' என்றாள்.

அவள் சொன்னது போலவே அவனும் வந்தான். அவன்கிட்டே வரும் முன்பே அவனது சிகரெட் பிடித்த வாடை குப்பென்று முன்னால் வந்தது. சாரதி மூக்கை சிணுப்பிக் கொண்டான்.

''வாங்க மச்சான்... இப்பதான் ரூம் போட்டுட்டு வரேன். பக்கத்துல ராஜ் ஹோட்டல்ல டீலக்ஸ் ஏ.ஸி. ரூமா போட்டிருக்கேன்.'' என்றான்.

''நான் தப்பு பண்ணிட்டேன். நம்ம வீடு இருக்கும் போது நீங்க ஹோட்டல்ல தங்கக் கூடாது. அந்த ரூமை கேன்சல் பண்ணிடு செல்வகுமார். இப்ப நான் கிளம்பும்போது நீங்களும் கூடவே வந்துடலாம்...'' என்றான் சாரதி.

''இருக்கட்டும் மச்சான்... நான் நம்ம வீட்டுக்கு மல்லியா மாலையும் கழுத்துமாதான் வரவிரும்பறேன்...''

செல்வகுமாரின் பதிலில் அசாத்திய நம்பிக்கை. அவனுக்கும் தேவிக்குமான கல்யாணத்தில் எந்தவித சிக்கலும் கிடையாது என்பது போல ஒரு அழுத்தம்.

சாரதியை அவன் பதில் உசுப்பிவிட்டது.

''செல்வகுமார்! முதல்ல இந்த மச்சான்னு சொல்றத விடு. என் பேர் சாரதி. இந்த பேரை சொல்லியே கூப்பிடு அப்புறமா இந்த கல்யாண எண்ணம். அப்பா ஆசைப் படறாருங்கறதுக்கா எல்லாம் கல்யாணம் நடந்துடாது உன்னை பத்தி எனக்கு எதுவுமே தெரியாது. உன் படிப்பென்ன, தொழில் என்னன்னு கேட்டதுக்கு இதுவரை உன்கிட்ட இருந்து பதில் இல்ல. அப்பா உன்னை தன் சகோதர மகனா மட்டும்தான் பார்க்கறார். அவர் பாசத்துக்கு அறிவில்ல. இருந்திருந்தா உன்கிட்டயே உன் படிப்பு, உத்தியோகம் இதை எல்லாம் கேட்டுட்டு முடிவு எடுத்திருப்பார். அடுத்து தேவி ஏற்கெனவே வேற ஒருத்தரை லவ் பண்றா... ஆகையால் எப்படிப் பார்த்தாலும் இந்த கல்யாணத்துக்கு வாய்ப்பே கிடையாது. ஆகையால் ஒரு அத்தை மகனா வீட்டுக்கு வா... இரு... போ... அதுதான் உனக்கும் அழகு. கண்டபடி ஆசைகளை வளர்த்துக்காதே நாளைக்கு ஏமாற்றம் வரும்போது அப்புறம் அது வருத்தத்துல தான் முடியும்.''

சாரதி கொஞ்சம் நீளமாக பேசினாலும் பேசவேண்டியதைப் பேசி விட்டான். செல்வகுமாரின் முகமும் சுரத்தை இழந்து விட்டது.

வேறு யாராக இருந்திருந்தாலும் இப்படி ஒரு சந்தர்ப்பத்தில் அதற்கு மேல் அங்கே நிற்பதே தவறு என்பது போல வெளியேறி இருப்பார்கள். ஆனால் செல்வகுமார் அப்படி எல்லாம் உணர்ச்சிவசப்படவில்லை. தாட்சாயணியைத்தான் பதிலுக்கு பார்த்தான். அந்த பார்வை இதற்கு நீ பதில் சொல் என்பதுதான்...

அவளும் மகனுக்காக வாயைத் திறந்தாள்.

''சாரதி... இந்த கல்யாணம் நடக்கணும்னு ஆசைப் பட்டது நாங்க இல்லப்பா. அண்ணன்தான்! அண்ணனுக்கு இப்படி ஒரு உடம்புங்கறதே எங்களுக்கு ஆஸ்பத்திரியில் இருந்து தகவல் வந்த பிறகுதான் தெரியும். நாங்களும் ஓடி வந்தோம். அண்ணன் நாங்க வர்றதுக்கு முந்தியே மனசுக்குள் தேவிக்கும் செல்வகுமாருக்கு கல்யாணம்னு முடிவு பண்ணிட்டார் அதைத்தான் அவர் எங்கள பார்க்கவும் சொன்னார். சொல்லாம கொள்ளாம வீட்டை விட்டு ஓடி வந்த அண்ணன் எப்படியோ வாழ்க்கைல பெரிய ஆளா ஆயிட்டாரு. ஆனா, எங்களுக்கு செய்ய வேண்டிய கடமைகளை செய்யலை. ஓடிவந்துட்டதால அதுக்கு பிறகு சகஜமா திரும்பி வந்து சேர்ந்துக்க அவருக்கு ஒரு இடைஞ்சல் ஏதோ ஒரு வடிவத்துல இருந்துகிட்டே இருந்திச்சாம். அதை என்கிட்ட பேசும்போது சொன்னாரு. எல்லாத்துக்கும் பரிகாரம்தான் இந்த கல்யாணம்னாரு. நானும் அதனாலதான் சரின்னேன். செல்வகுமாரும் B.E, வரை படிச்சவன்தான்... சொந்தமா தொழில் தொடங்கணும்கறது அவன் எண்ணம். இப்ப எதுக்கு எனக்கு கல்யாணம்னு சொல்லிக்கிட்டிருந்தவன் மாமா கண்ணீரோடு கைகூப்பி வேண்டிக்கவும் சரின்னு சொன்னான். இதான் நடந்தது. ஆனா, நீ இப்ப இது நடக்காதுன்னு சொல்றே. இதை நீ எங்கிட்ட சொல்றதுக்கு பேசாம அண்ணன்கிட்ட சொல்லுப்பா. அவர் உன் பேச்சை கேட்டு உன் விருப்பப்படி நடந்துகிட்டாருன்னா சந்தோஷம்தான். அதே சமயம் உன் பேச்சால அவருக்கு அதிர்ச்சி ஏற்பட்டு அவர் உயிர் பிரிஞ்சா அந்த பாவமும் உன்னை சும்மா விடாது... யோசிச்சுக்கோ...''

தாட்சாயணி சரியாகவே ஒரு பிடிபிடித்து விட்டாள். சரியான ஏற்ற இறக்கத்தோடு அவள் பேசிய விதம் நன்றாக வேலை செய்தது. சாரதியும் இந்துமதியும் ஒருவரை ஒருவர்

பார்த்துக் கொண்டனர். அவர்களுக்கு தாட்சாயணிக்கு என்ன பதில் சொல்வதென்றே தெரியவில்லை. தேங்கித் தேங்கி நின்றனர். தாட்சாயணி பேசியது அங்கிருக்கும் நர்ஸ் காதிலும் கொஞ்சம் போல விழுந்திருந்தது. அவளுக்குள் ஏராளமான அதிர்ச்சி... செல்வகுமாரும் அவளும் தப்புத் தப்பாக பேசிக் கொண்டதை ஏற்கெனவே கேட்டு வைத்திருப்பவள், அப்போதைய பேச்சையும் இப்போதைய பேச்சையும் ஒப்பிட்டுப் பார்த்தாள். மிரட்சியாகி விட்டது.

நடுவில் டாக்டர் அழைத்தார் என்று ஒரு வார்டு நர்ஸ் வந்து அழைத்தாள். மெல்ல நால்வரும் அவளைப் பின் தொடர்ந்தனர்... அமர்ந்திருந்த நர்ஸ் பயங்கரமாக வெறித்தாள். அவளிடம் ஆயாசம்... ஒரே குடும்பத்தில் ஒரு தாயின் வயிற்றில் பிறக்கின்றவர்களுக்குள்தான் எவ்வளவு வேற்றுமை என்கிற கேள்வி அவளுக்குள்ஓடியபடி இருந்தது.

ராம்மோகன் அட்மிட் ஆகியிருக்கும் வார்டு பக்கமாய் சென்றபோது டாக்டர் ஏராளமான முன்எச்சரிக்கை நடவடிக்கைகளை செய்யத் தொடங்கினார்.

''மிஸ்டர் சாரதி! உங்கப்பா இப்ப மருந்தால பாதுகாக்கப்பட்டுகிட்டு இருக்கார். அவ்வளவுதான்... ஆக்சுவலா இவ்வளவு சீரியஸ் ஆன ஒரு கேன்சர் பேஷண்ட்டை நாங்க இங்க வெச்கிட்டு இருக்கவே கூடாது. ரொம்ப ரொம்ப சாதாரண ஒரு நோய் கிருமிகூட இந்த இடத்துல ஆபத்தானது'' என்று கூறிவிட்டு எல்லோர் வாயையும் மூடிக்கொள்ளும் விதமாய்த் துணி ஒன்றை கட்டிக் கொள்ள செய்த பின்னே உள் அழைத்துச் சென்றார்.

உள்ளே கிட்டத்தட்ட சவமாகி விட்டதைப் போன்ற ஒரு தோற்றத்தோடு ராம்மோகன் கிடந்தார். கண்களைத் திறந்து பார்க்கவே அவர் சிரமப்படுவது தெரிந்தது.

''இங்க ரொம்ப மென்மையா பேசுங்க... பக்குவமாவும் பார்த்தும் பேசுங்க. எந்த காரணம் கொண்டும் Negative ஆன ஒரு சிறு விஷயம்கூட உங்க பேச்சுல வந்துடவேண்டாம்...'' என்று டாக்டரிடம் இருந்து காதோடு காது வைத்த மாதிரி எச்சரிக்கை வேறு... அதுவே சாரதியை பெரிய அளவில் கட்டிப் போட்டு விட்டது.

ராம்மோகன் மெல்ல கையை உயர்த்தி சாரதியை தன் படுக்கைக்கு அருகில் அழைத்தார்... சாரதியும் அருகில் சென்றாள். அவனிடம் மெல்லிய குரலில் 'எங்கே தேவி?' என்று ஜாடையாலேயே கேட்டார்.

''அவ கோயிலுக்குப் போயிருக்காப்பா?'' என்றான் சாரதியும். அடுத்து அவர் செல்வகுமாரைத்தான் அருகில் அழைத்தார். அவனும் நெருங்கினான்.

''தேவிகூட பேசினியா. உனக்கு அவளை பிடிச்சிருக்கு தானே!'' என்று கேட்டார். செல்வகுமாரும் ''ரொம்ப பிடிச்சிருக்கு மாமா'' என்றான்.

''சந்தோஷம்... உங்கள நான் மாலையும் கழுத்துமா பார்த்துட்டா நிம்மதியா கண்ணை மூடிடுவேன். உன் படிப்புக்கு நீ தனியா கஷ்டப்படாதே... சாரதியோட சேர்ந்து என் தொழிலையே பெரிசாக்கு... எல்லாரும் ஒண்ணா இருக்கணும். ஒத்துமையா இருக்கணும். உங்க வாரிசாதிரும்ப நான் வந்து பொறக்கணும்'' என்றார்... அந்த அளவு பேசி முடிப்பதற்குள்ளாகவே அவரது இதழ்க்கடை வழியாக லேசாக ரத்தம் கசிய ஆரம்பித்து விட்டது.

''சார்... ப்ளீஸ் சார். இனி நீங்க பேச வேண்டாம். மத்த எல்லாமே ரொம்ப நல்லவிதமா நடக்கும் சார்...'' என்ற டாக்டர், அவர்களையும் வேகமாக வெளியேறும்படி சைகை செய்தார். அவர்களும் கனத்த மனதோடு வெளியே செல்லத் தொடங்கினர்.

செல்வகுமார் முகத்தில் மட்டும் ஒரு சாதித்த மகிழ்ச்சி.

வார்டு அறையை விட்டு வெளியே வந்துவிட்ட சாரதி முகத்தில் உற்சாகமேயில்லை. இந்துமதியே அதைப் புரிந்து கொண்டவள் போல, ''விதி வலியதுன்னு சொல்லிக் கேள்விப்பட்டிருக்கேன். இப்ப நேர்ல பார்க்கறேன். பாவம் தேவி...'' என்றாள். அப்படி அவள் சொன்ன விதமே தேவிக்கு வேறுவழி இல்லை என்று சொல்லுகிற மாதிரி இருந்தது. சாரதியாலும் மறுத்துப் பேச முடியவில்லை.

விலகி நின்றபடி இருந்த செல்வகுமாரும் பார்த்துக் கொண்டுதான் இருந்தான்... மெல்ல தன்தாயான தாட்சாயணி அருகில் சென்று மெல்லிய குரலெடுத்து, ''அம்மா! மச்சான் என்ன பண்றதுன்னே தெரியாம முழிக்கறத பாரு...'' என்றான்.

''நான் எப்படிடா பேசினேன்... நல்லா மடக்கினேன் தானே?''

''சூப்பர்மா... சொதப்பாம கொள்ளாம நல்லா அழகா பேசினே...''

''ஆனாலும் இந்த சாரதி இசைஞ்சு வர்ற மாதிரியே தெரியலியேடா.''

''வருவாரும்மா... வர வைக்கணும். அதுலதான் நம்ம வெற்றி இருக்கு. இந்த சான்ஸை தவறவிட்டா அதுக்கப் புறம் காலம்பூராகறிசோறு கிடையாதும்மா... பழைய சோறுதான்...''

தாயும் பிள்ளையும் தங்களுக்குள் பேசிக்கொள்ள, உள்ளிருந்து ஒரு வார்டு பாய் ஓடிவந்தவனாக சாரதியை நெருங்கினான். பின்னர் ''சார்! உங்கப்பா என்கிட்ட கல்யாண தேதி குறிச்சிட்டாங்களா கேளுன்னு சொன்னார்... திரும்பத் திரும்பகூட அதையே சொன்னார். டாக்டர் ஊசி போடவும் மயங்கி தூங்கிட்டார். டாக்டர் இதை உங்ககிட்ட சொல்லச் சொன்னார் சார்...'' என்றான்.

சாரதியால் அதற்குமேல் பொறுக்க முடியவில்லை.

தேவிக்குதான் போன் செய்தான். ஆனால், சிக்னல் கிடைக்காமல் 'நாட் ரீச்சபிள்' என்றே வந்தது.

செல்வகுமாரும் நெருங்கி வந்தவனாக, ''மச்சான்... இப்பகூட மாமா மனசுக்காகத்தான் நான் அப்படிச் சொன்னேன். என்னை தப்பா எடுத்துக்காதீங்க...'' என்றான். சாரதியால் அவனிடம் மேற்கொண்டு எதுவுமே பேசமுடிய வில்லை!

5

நமது நாட்டிலும் சரி, மேல் நாடுகளிலும் சரி. எவ்வளவோ ஆராய்ச்சிகள் நடந்து வருகின்றன. அந்த ஆராய்ச்சிகளில் புவியியல் சார்ந்த ஆய்வுகள் ஒரு ரகம்... பூமிக்கடியில் கிடைக்கும் மண் தாழிகள், எலும்புத் துண்டுகளை வைத்து அவைகளின் வயதை கண்டறிவது, கடந்தகால வாழ்க்கை, அவைகளின் வயதை அறிய முயற் படுவது போன்றவையே புவியியல் சார்ந்த ஆய்வுகள்! விண்வெளி ஆய்வுகள் வேறுவிதம்... இவை பரந்த ஆகாயத்தில் பூத்து புதிதாக கோள் களைக் கண்டுபிடித்தல், சாட்டிலைட்டுகளை முன்கூட்டியே அறிதல், நிலவில் வாழ முடியுமா, செவ்வாயில் உயிரினங்கள் இருக்கிறதா என பார்த்தல் என்று அந்த ஆய்வுகள் ஒரு விதம். கடலுக்கடியிலும் ஆய்வு நடக்கிறது. இப்படி பலதப்பட்ட ஆய்வுகள்... இவைகளுக்கென்று சில அடிப்படைகளும் இருக்கின்றன.

இவைகளுக்கு நடுவில் இந்த பூமி, குறித்தும் பூமியில் உயிரினங்களாய் நாம் எல்லோரும் வாழ்வது குறித்தும் ஒரு வேதாந்தப் பார்வை பார்த்து ஆராய்ச்சிகள் ஒரு புறம் நடந்து வருகின்றன. அவைகளில் நம்முடைய அறிவைக் கொண்டு நெருங்க முடியாத ஆச்சரியமூட்டும் விஷயங்களும் இருக்கவே செய்கின்றன.

குறிப்பாக ஜோதிடம் எனப்படும் ஜோதிட இயல் ஒரு மனிதன் பிறந்த நேர காலப்புள்ளியை வைத்து அவன் எதிர்காலம் என்பது இப்படி எல்லாம்தான் இருக்கும் என்று ஓரளவு தெளிவாகவே கூறிவிடுகிறது... அப்படி கூறுவதற்கு அது பயன்படுத்தும் ஆயுதம் எது தெரியுமா? கணிதம்தான் அது!

அந்த டொயோட்டா குற்றாலத்தை நெருங்கி விட்டது. சில்லென்ற காற்று வீச்சு... எந்த பக்கம் பார்த்தாலும் பசுமை மூடிய சூழல்... மனதில் எவ்வளவுதான் துக்கமான, பாரமான எண்ணங்கள் இருந்தாலும் இதுபோன்ற காட்சி களைக் காணும்போது அவை சற்று சுருளத்தான் செய்கின்றன.

தேவிக்கும் அந்த சூழல் இதமாக இருந்தது.

சந்த்ரகுமாரும் கவனித்தான்.

''தேவி! நீ டென்ஷனாவே இருக்கே... மனசை சாதாரணமா வெச்சுக்கோ. தப்பா எதுவும் நடந்துடாது...'' என்றான்.

''சந்த்ரா! நீங்க எப்படி இப்படி எந்த டென்ஷனும் இல்லாம பேசறீங்களோ தெரியல'' என்றாள் தோளை குலுக்கிக் கொண்டு.

''நான் எப்ப பரஞ்ஜோதி சாமியை பார்த்தேனோ அப்பவே மாறத் தொடங்கிட்டேன் தேவி. அவர் மூலமா நான் உணர்ந்தது நிறைய... அதுல மனசை பத்திய உண்மைகளும் அடக்கம்...''

''பார்ப்போம்... உங்க பரஞ்ஜோதி சாமியாரோட சக்தியை... சந்த்ரா! நீங்க டெய்லி பேப்பர் படிக்கறதுண்டு தானே?''

''ஏன் கேக்கறே?''

''இன்னிக்கு இடஒதுக்கீடு பிரச்சினை இல்லாத இரண்டே இடம் ஒண்ணு, சினிமா. இன்னொண்ணு, சாமியார் மடம்.''

- தேவி அடுத்து எங்கே வருவாள் என்பது தெரிந்தது போல் அவளைப் புன்னகையோடு பார்த்தான்.

''என்ன சிரிக்கறீங்க சந்த்ரா... அதனால் இந்த இரண்டு இடத்துலயும் யார் வேணா வரலாம், எதை வேணா பேசலாம்னு ஆகிப் போச்சு. இரண்டு படம் ஜெயிச்சா போதும், ஒரு நடிகன் அடுத்த முதல்வர் நான்னு கனவு காண ஆரம்பிச்சிடறான்... தாடி வளர்த்து காவி கட்டிட்டாலே போதும், சாமியார்னு உலகம் சொல்லும்கறது ரொம்ப பேர் நம்பிக்கையா இருக்கு...''

''அதனால...?''

''என்ன அதனால...? சாமியார்னாலே பயமா இருக்கு. அலர்ஜியாவும் இருக்கு. எனக்குத் தெரிஞ்சு இந்த ஒரு நாட்டுலதான் இவ்வளவு சாமியாருங்க! சரி, இவ்வளவு பேர் இருக்கற இந்த நாட்டுல பிரச்சினைகள் இல்லாம இருக்கா... அவ்வளவுகூட வேண்டாம்... பிரச்சினை குறைவா இருக்கா? அதுவும் இல்லை...''

''அப்ப நீ நாம சந்திக்கப்போற பரஞ்ஜோதி சாமி பத்தி கொஞ்சம்கூட நம்பலைன்னு சொல்...''

''என்னால அவரை மட்டுமில்ல, எந்த சாமியாரையுமே நம்பமுடியாது. அவ்வளவு பேரும் சாமி பேரால தப்பு பண்றவங்க... சில பேர் தேடிக்கறவங்க. மக்கள் காசுல மடம் அமைச்சுகிட்டு மஞ்சக்குளிக்கறவங்க... விதிவிலக்கா காஞ்சிபுரத்துல வயசான சங்கராச்சாரியார் சாமி இருந்தார். நான் பார்த்ததுல அவர் மட்டும்தான் நிஜமான சாமியார். அவரைப் பார்க்கும்போதே மனசுக்கும் அமைதி ஏற்பட்டது. அவரும் கடைசிவரை நான் அதை செய்துடுவேன், இதை செய்துடுவேன்னெல்லாம் சொல்லல. பிரதம மந்திரியே பார்க்க வந்தப்பகூட ஆசாரம் அனுமதிக்கலன்னு அவங்கள பார்க்கறத தவிர்த்துட்டாரு. அந்த ஒரு செயலால அவர் ரொம்பவே உயர்ந்துட்டார்னு கூட சொல்வேன்.''

- தேவி பொரிந்து தள்ளிவிட்டாள்.

சந்த்ரகுமார் எதுவுமே சொல்லவில்லை. மௌனமாக காரை குற்றாலம் நகரின் கார் பார்க்கிங் ஏரியாவுக்குள் செலுத்திக் கொண்டிருந்தான்.

அருவி ஆர்ப்பாட்டமாய் கொட்டும் சப்தம் அங்கு வரை கேட்டது. சுற்றி நடமாடுபவர்கள் அவ்வளவு பேரும் குளித்த தலையைத் துவட்டியபடிதான் நடந்து கொண்டிருந்தனர். சட்டையே போடாமல் மார்பு மேல் ஒரு சிவப்புத்துண்டோடு ஏகாந்தமாக திரிபவர்கள் பலர்.

அவர்களைப் பார்க்கும்போதுதான் சுதந்திரம் என்பதற்கே ஒரு புதிய பொருள் தேவிக்கு தோன்றியது. அங்கு ஒரு குறிப்பிட்ட இடத்தில் இருந்து பார்த்தபோது அருவி பளிச்சென்று தெரிந்தது... நொப்பும் நுரையுமாக அட்ட காசமான காட்சி. இயற்கை இயற்கைதான்!

தேவி கன்னத்தில் கைவைத்துக் கொண்டாள்.

கண்கள் அகல விரிந்து கொண்டன. சந்த்ரகுமார் அதை வெகுவாக ரசித்தான். மனதை அழுத்திக் கொண்டிருந்த

செல்வகுமார் பிரச்சினை ஒரு ஓரமாகப் போய் ஒடுங்கி விட்டது போலகூட அவனுக்கு தோன்றியது.

''தேவி! இவ்வளவு தூரம் வந்துட்டோம்... குளிக்கலாமா?'' என்று கேட்டான். தேவியும் உற்சாகமாக தலையை ஆட்டினாள்.

''அப்பா இரு. போய் நல்லா பெருசா இரண்டு துண்டு வாங்கிட்டு வந்துடறேன்...'' என்றான்.

''சந்த்ரா எனக்கு ஒரு நைட்டியும் வேணும்.''

''ஓகே... வாங்கிடலாம்...'' - அவன் எதிரில் தெரிந்த ஒரு காதி கிராஃப்ட் ஷாப்புக்குள் புகுந்தான். வெளியே சிலர் தேவியை சூழ்ந்து கொண்டு வெட்டிவேர், மலைத்தேன், மங்குஸ்தான் பழம் என்று விற்கப் பார்த்தனர்.

ஒரு கட்டு வெட்டிவேரை தேவி விலை கேட்கவும் ஒருவன் நூறு ரூபாய் என்றான். ஒரு கைக்குள் அடங்கிவிடும் அதனுள் தென்னை நாறும் கலந்திருந்தது. தேவி அவனை முறைத்துப் பார்த்தாள்.

''ஏய்யா... நாலணா பெறாத இதை நூறு ரூபாய்க்கு என் தலைல கட்டப்பாக்கறியா - இதுல தேங்கா நாரை வேற கலந்திருக்கே. ஆமா, எது எதுலதான் ஏமாத்தறதுன்னே விடையாதா?'' என்றாள்.

இன்னொருவன் குறுக்கிட்டு, ''ஏய்யா இப்படி துபாக்கூர்தனமா நடந்துக்கறே... போய்யா அந்தப் பக்கம்'' என்று முன்னால் வந்தான். அவன் கையில் தேன்குடுவை. ஆனால், அதில் வெல்லப்பாகு வாடை.

நல்லவேளையாக சந்த்ரகுமார் வந்துவிட்டான். அவர்கள் கவனம் அவன் பக்கம் திரும்பியது.

''சார், சார்... வெட்டிவேர் சார், மலைத்தேன் சார்...'' என்று ஆரம்பித்தனர்.

''எதுவும் வேணாம் - ஆளை விடுங்க. நான் மாசத்துக்கு நாலு தடவை இந்த ஊருக்கு வர்றவன். உங்களப்பத்தி எல்லாம் எனக்கு நல்லாவே தெரியும்...'' என்றான்.

அவர்கள் அடுத்த நொடியே தெறித்து ஓடிவிட்டனர்.

''ஊருக்கு ஊர் இப்படி நாலு பேர் - நமக்கு நேரம் சரியில்லைன்னா இவங்களால மொட்டைதான்...'' என்ற படியே அருவி நோக்கி நடக்க காலெடுத்தபோது தேவியின் செல்போன் ஒலி எழுப்பியது. வேகமாக எடுத்து திரையைப் பார்த்தாள்.

அண்ணன் சாரதியின் பெயர்!

''அண்ணே...''

''தேவி... எங்கம்மா இருக்கே நீ?''

''ஸாரிண்ணே! உன்கிட்ட நான் சொல்லாம கொள்ளாம குற்றாலம் வரை வந்துட்டேன்...''

''என்னம்மா சொல்றே. குற்றாலத்துல உனக்கென்ன வேலை?''

''நானா வரலைண்ணே - சந்த்ராதான் கூட்டிக்கிட்டு வந்துட்டார்.''

''அடடா... அப்ப நீ இப்ப அவர்கூடதான் இருக்கியா?''

''ஆமாம்... யாரோ பரஞ்ஜோதின்னு ஒரு சாமியாராம். அவரைப் பார்த்தா நம்ம பிரச்சினைக்கு ஒரு நல்ல வழி கிடைக்கும்னு கூட்டிக்கிட்டு வந்துட்டார்ணே...''

''என்னத்த நல்லவழிம்மா... இங்க அப்பாவோட பல்ஸ் கிட்டத்தட்ட டோட்டலா டௌன் ஆன நிலைல இருக்கு. கொஞ்சம் முந்திகூட தேவிக்கு கல்யாணம்... டைம் குறிச்சாச்சான்னு நர்ஸுங்க கிட்ட கேட்டிருக்காரு. நானும் போய் பார்த்தேன். நாம பேசற எதையும் கேட்க மாட்டேங்கறாரு. 'சொந்தம் விட்டுடக்கூடாது. தேவி

செல்வகுமார் கல்யாணம் நடக்கணும் சீக்கிரம்'னு பேசினதையே பேசறார்...''

''சரிண்ணே... இப்ப நீ என்ன முடிவுல இருக்கே?''

''எனக்கே தெரியலம்மா. அப்பாவை மறுத்து உன் காதலை பத்தி சொல்லி உன்னையும் சந்த்ராவையுமேகூட கல்யாண கோலத்துல நிறுத்தினா என்னன்னுகூட யோசிச்சேன். ஆனா, அந்த இடியட் செல்வகுமார் என்ன சொக்குப்பொடி போட்டான்னே தெரியல. அவனையும் நான் வெச்ச வாங்கு வாங்குன்னு வாங்கிட்டேன். உன் காதலையும் எடுத்துச் சொல்லி, தேவி உனக்கு கிடைக்க முடியாதுப் பான்னா காதுலயே வாங்கிக்க மாட்டேங்கறான். இடியட்...''

''போதும்ண்ணே... நீ பேசறத பார்த்தா அவனைத்தான் நான் கட்டிக்கிட்டாகணும்னு சொல்லிவிடுவேன்னு பயமா இருக்கு...''

''நான் ஏன் அப்படி நினைக்கறேன்... இங்க சூழ்நிலை அப்படித்தான் போய்க்கிட்டிருக்கு...''

''நாம படிச்சவங்க... அப்பா ஏதோ சென்டிமெண்ட்டா சீரீஸ் பண்றாரு. பேசாம அவர்கிட்ட நேராவே பேசிட்டா என்னண்ணே... எதுக்கு என் காதலை அவர்கிட்ட இனியும் மூடி மறைக்கணும்.''

''அப்பாகிட்ட பேச முடிஞ்சா நான் விடுவேனா... நீயே இந்த செல்வகுமாரை கட்டிக்கிறேன்னு சொன்னாலும் நான் சம்மதிக்க தயாரில்லை. அவன் கிட்ட மேனர்ஸே கொஞ்சம்கூட இல்லை.''

''அண்ணே... நீ முடிவா என்னதான் சொற்றே?''

''எனக்கு தெரியல தேவி... உன் சிக்கலுக்கு தீர்வு என் கைல இல்லை தேவி. எனக்கு தெரிஞ்சு ஒரே வழிதான்...

அப்பாவை நாம ஒரு நாலு நாளைக்கு யாருமே போய் பார்க்காம இருந்திடணும். டாக்டர் கணக்குப்படி அவரோட உயிர் அடங்கிடும். அப்புறம் சிக்கல் இருக்காது... இந்த சிக்கலை தீர்த்துக்க அது ஒண்ணுதான் வழி. ஆனா, அப்பா நம்மை எல்லாம் பார்க்காம தன் ஆசையும் நிராசையான நிலைல ரொம்ப வருத்தத்தோடதான் உயிரை விடுவார்.. அந்த பாவத்தை நாம சம்பாதிச்சுட்டுதான் தீரணும் பரவாயில்லையா?''

-தன் கையில் தீர்வு இல்லை என்றபோதிலும் சாரதி ஒரு தீர்வைச் சொல்லாமல் இல்லை. அந்த கேள்விக்கு தேவியாலும் எந்த பதிலும் கூற முடியவில்லை. உலகில் யார்யாருக்கோ எப்படி எப்படி எல்லாமோ பிரச்சினைகள் வருகின்றன. ஆனால், இப்படி ஒரு பிரச்சினை நிச்சயம் ஒருவருக்குகூட வந்திருக்காது என்றுதான் தேவிக்கும் தோன்றியது.

கண்களில் நீர் சேர்ந்திட அண்ணனுக்கு எந்த ஒரு பதிலையும் கூறிடாமல் மௌனமாகவே இருந்தாள். அதுவே அவள் தயங்குவதை சாரதிக்கும் உணர்த்தி விட்டது.

''தேவி உன்னால பதில் சொல்ல முடியலல்ல...?''

''ஆமாம்ண்ணே... இப்பதான் வாழ்க்கைல விதிங்கறது எப்படிப்பட்டதுங்கறத நான் புரிஞ்சுக்க ஆரம்பிச்சிருக்கேன்...'

''இந்த மாதிரி கட்டங்கள்லதாம்மா மனிதர்கள் எவ்வளவு பெரிய ஆளா இருந்தாலும் சரி... மனசளவுல தெய்வத்தை நினைச்சே தீரணும்கற நிலை வந்துருது.''

''நினைச்சு என்னண்ணே பிரயோஜனம்? இப்பகூட நான் குற்றாலத்துல அருவிகிட்டதான் இருக்கேன். பக்கத்துலயே கோயில். ஆனா, எனக்கு இப்ப குளிக்கற ஆசையும் இல்ல. கும்புடற ஆசையும் இல்ல...''

''மனசு மருண்டு போகும்போது இப்படித்தாம்மா பேசுவோம். சரி, நீ எப்ப வருவே?''

''எங்கண்ணே... யாரோ பரஞ்ஜோதி சித்தராம். அவர் எங்கேயோ மலைக்கு மேல இருக்காரு. அவரைப் போய்ப் பார்க்கணும். நான் பார்க்கணும்கறேன்... சந்த்ரா அதையே கொஞ்சம் மாத்தி தரிசிக்கணும்னு சொல்றாரு... அந்த பார்வையோ தரிசனமோ முடிஞ்சபிறகுதான் நாங்க இரும்புவோம். எப்படியும் இன்னிக்கு ராத்திரி மணி பன்னெண்டுல இருந்து ஒரு மணி ஆயிடலாம்...''

''சரிம்மா... நீங்க அந்த சித்தரை பார்த்துட்டு சீக்கிரமா இளம்பி வர்ற வழியைப் பாருங்க. அதுக்குள்ள என்ன நடக்கணும்னு இருக்கோ நடக்கட்டும்...''

- சாரதி பேசிவிட்டு போனையும் முடக்கிவிட, இந்த பக்கமாய் தேவியும் செல்போனை அணைத்தாள். கவனித்துக் கொண்டே வந்தான் சந்த்ரகுமார்.

''யார் தேவி... அண்ணனா?''

''ஆமாம் சந்த்ரா...''

''ரொம்ப முக்கியமான விஷயமாக ஏதாவது சொன்னாரா?''

''சொன்னாரு... நான் அந்த செல்வகுமாரை கட்டிக்கறத தவிர வேற வழியே இல்லேங்கற மாதிரி...''

''அப்புறம்...?''

''என்ன அப்புறம்... அது ஒண்ணு போதாதா சந்த்ரா...''

''டென்ஷனாகாதே தேவி! தைரியமா இரு...''

''தைரியமாதான் இருக்கேன். இப்ப என்ன கண்ணீர் விட்டுக்கிட்டு, மலருக்கு தென்றல் பகையானால்னு சினிமா கதாநாயகி மாதிரி பாடிக்கிட்டா இருக்கேன்.''

''அதுக்குன்னு இப்படி விரக்தியாவும் பேசாதே தேவி.''

''போதும் சந்த்ரா... இங்க இப்ப எனக்கு குளிக்கற எண்ணமெல்லாம் போயிடிச்சு. நாம வேகமா போய் அந்த சாமியாரையோ சித்தரையோ பார்க்கறோம். அவர் ஆசீர்வாதம் பண்ணி விபூதி கொடுப்பாரு... அப்படியே கடவுளை நம்பும்மா. கைவிடமாட்டாருன்னு சொல்லப் போறாரு. அதையும் கேட்டுக்கறோம். உடனேயே மதுரை நோக்கி திரும்பறோம்.''

- தேவி படபடவென்று பொரிந்து முடித்தாள். ஆனால் சந்த்ரகுமாரிடம் அப்போதும்கூட பெரிதாக எந்த மாற்றமும் இல்லை. மௌனமாக சரி என்பது போல பார்த்தான். உடனேயே புலியருவி நோக்கி நடக்கவும் செய்தான்.

6

ஜோதிடத்தை நிறையப்பேர் ஏதோ மாய மந்திரம். போல நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஜோதிடத்தை போல ஒரு அசாத்திய கணக்கு எங்கும் எதிலும் இருக்க முடியாது.

கணக்குக்கு நீதிதேவன் என்றும் ஒரு பெயர் உண்டு. இது பலருக்கு ஆச்சரியத்தை தரலாம். கணக்கு என்று ஒன்று இல்லாவிட்டால் நீதியே இந்த உலகத்தில் இருக்க முடியாது. அவ்வளவுமே அநீதியாகத்தான் இருக்கும்.

சற்று தீர்க்கமாக யோசித்து பாருங்கள்!

கணக்கு என்ற உடனேயே ஒன்றில் இருந்து ஒன்பது எண்கள்தான் நம் நினைவுக்கு வரும். இந்த ஒன்பது எண்களை பயன்படுத்தாமல் ஒருவரால் அரை மணி நேரமாவது பேசமுடியுமா? இந்த அரை மணி என்பதில்கூட கணக்கு வந்து விட்டது பாருங்கள். ஜோதிடமும் கணக்குக்குள் தான் தன்னை வைத்துக் கொண்டிருக்கிறது.

ஒருவருக்கு பெயர் கூட இல்லாமல் இருக்க முடியும். ஆனால், அவர் பிறந்த நேரம் என்கிற ஒன்று இருக்கவே செய்யும். அது ஒரு எண்! அந்த எண்ணுக்குள்தான் அவர் வாழ்நாள் கணக்கு கருட்டி அடக்கப்பட்டிருக்கிறது. குறிப்பிட்ட தேதியன்று குறிப்பிட்ட மணிப் பொழுதில் பிறந்திருக்கிறார் என்னும்போதே ஐந்து விஷயங்கள் அதைத் தொட்டு வந்துவிடும். முதல் விஷயம் பிறந்த தேதி, அடுத்தது மாதம், மூன்றாவது பிறந்த நேரம், நான்காவது பிறந்த கிழமை, ஐந்தாவது பிறந்த நட்சத்திரம். இந்த ஐந்துக்குள்தான் இருக்கிற ஐந்தாகிய (பஞ்சபூதம்) நம் வாழ்க்கைக் கணக்கு!

இந்த ஐந்தை வைத்துக் கொண்டு எங்கே எதை கூட்ட வேண்டும், எங்கே எதை பெருக்க வேண்டும், எங்கே எதை வகுக்க வேண்டும் என்பது மட்டும் ஒருவருக்கு பிடிபட்டுவிட்டால் அந்த மனிதனும் காலமும் ஒன்று, அந்த மனிதனும் கடவுளும் ஒன்று!

தேனருவியில் இருந்து புலியருவிக்கு செல்லும் பாதை ஓரளவுக்கு நடக்க முடிந்த விதத்தில்தான் இருந்தது. ஆனாலும் மூச்செறிந்தது. சிலர் மேலே போய் புலியருவியில் குளித்துவிட்டு திரும்பிக் கொண்டிருந்தனர். அவர்களில் பலர் [illegible]

குளித்த கையோடு மேலாடைகூட அணியாமல் குளித்
அதே கோலத்தோடு குதித்துக் குதித்து வந்
கொண்டிருந்தனர்.

வரும்போது சும்மா வரக்கூடாதா?

கைக்கெட்டிய மரத்தின் கிளைகளை ஒடித்து அ
பிரம்பு போல வீசிக்கொண்டு வந்தனர். மனிதனுக்
இன்னமும் இயற்கை பற்றிய பேரறிவு இல்லை என்றுதா
கூறவேண்டும்.

நன்றாக வளர்ந்தபடி இருக்கும் ஒரு மரத்தின் ஒ
கிளையை ஒடிப்பது என்பது ஒரு வினைச்செயல். சி
குடும்பங்களில் குறிப்பிட்ட சிலருக்கு வாரிசுகள் தோன்
வழியே இருக்காது. பிள்ளைகுட்டியே பெற முடியாம
கணவனும் மனைவியும் ஒரு மலட்டு வாழ்க்கை வாழ்ந்
விட்டு இறந்துபோயிருப்பார்கள்.

அவர்களுக்கு பின்னால் இப்படி விருட்சங்களை ஒடித்
பாவம்தான் உட்கார்ந்திருக்கும். மரம் பேசுவதில்லை அ
தேடி வந்தோ, இல்லை அங்கேயே தண்டித்துவிட
போவதில்லை என்கிற விஷயமே அறியாமையால் பாவ
செய்யத் தூண்டுகிறது. செய்யத் தூண்டுவதும் ஒரு கிரகம்
செய்வித்துக் கொள்வது இன்னொரு கிரகம். எல்லாம் விதி
வழிச்செயல்பாடுகள். பாவம் அந்த விடலைப் பையன்... த
தலைமுறையில் தனக்கோ, இல்லை தன் பிள்ளைகளி
எவருக்கோ சந்ததி வேண்டாம் என்று கூறிவிட்டான்
அதுதான் இப்படி நடந்து கொண்டிருக்கிறான்.

நடக்கும்போது சந்த்ரகுமாரும் தேவியும் இந்
காட்சிகளை எல்லாம் பார்த்தார்கள். திடும்மென்று ஒ
அழுகுரல் சப்தம். ஒரு வாலிபரின் பிணத்தை தோளி
போட்டுக்கொண்டு சிலர் எதிரில் வந்தபடி இருந்தனர்.

அருவிக்குள் விழுந்து சிக்கி மூச்சு முட்டி இறந்துவிட்டவன்.
உடம்பு வீங்கிப் போயிருந்தது.

மலைமேல் தண்ணீருக்குள் சாகவேண்டும் என்பது
காலன் கணக்காக இருந்திருக்கிறது. பார்க்கவே அருவருப்
பாக இருந்தது. தேவிக்குதான் ஏதோ ஒரு தவறான பாதை யில்
போய்க்கொண்டிருப்பது போலகூட தோன்றியது.

''சந்த்ரா... என்ன சந்த்ரா இது - இன்னும் எவ்வளவு
தூரம் போகணும்?''

''வா தேவி... கிட்ட நெருங்கிட்டோம்...''

''ஏன் சந்த்ரா, இந்த சாமியாருங்கல்லாம் இப்படி
ஏதாவது ஒரு மலைமேல கஷ்டமான இடங்கள்ல வந்து
உக்காந்துகிறாங்க.''

''அதை நீ பரஞ்சோதி சித்தரை சந்திக்கும்போது கேள்.
அவருக்கு கேள்விகள்னா ரொம்ப பிடிக்கும்.''

''நாம என்ன அரட்டை அடிக்கவா போய்க்கிட்டிருக்
கோம்.''

''திரும்பவும் கோபப்படறிய தேவி, நீ கேட்டதுக்காக
தான் அப்படிச் சொன்னேன்.''

''டயம் ஆகிக்கிட்டே இருக்கு சந்த்ரா. அழகாக
குறும்புத்தோட உக்காந்து தெளிவா பேசி ஒரு முடிவுக்கு
வரவேண்டிய நாம இப்படியா ஒரு கரடுமுரடான மலைமேல
ஏறிக்கிட்டிருக்கோம்.''

''பேசினா முடிவுக்கு வரும் விஷயமா நம்ம விஷயம்.
அப்படி இருந்திருந்தாதான் அப்பவே வந்திருக்குமே?''

''பேசினாலே ஒரு முடிவுக்கு வரமுடியாத ஒண்ணும்
இப்படி மலை ஏற்றத்தால மட்டும் எப்படி சந்த்ரா
வரமுடியும்...?''

''ரொம்ப அவசரப்படறே தேவி நீ... உன் படிப்பு உனக்குள்ளே நம்பிக்கையைவிட சந்தேகப்படத்தான் அதிகம் சொல்லிக் கொடுத்துருக்கு. அவ்வளவுதான் இப்போதைக்கு என்னால சொல்ல முடியும்?''

- முதல் தடவையாக சந்த்ரகுமாரிடம் ஒரு சன்னமான கோபம் வெளிப்பட்டது. ஹோவென்ற இரைச்சலுடன் புலியருவியும் கண்ணில் பட்டது. அங்கிருந்து மேற் கொண்டு ஒரு ஐந்து நிமிட நேரம் நடந்ததில் சிறியதாய் ஒரு குடிசை. அதன் முன்னாலே ஒரு பெரிய வில்வமரம். அந்த மரத்துக்கு கீழே ஒரு சிவலிங்கம் தெரிந்தது. குடிசையைச் சுற்றி எளிய அளவில் ஒரு படப்பு வேலி... மலையில் தானாக விழுந்து கிடக்கும் சுள்ளிகள் குச்சிகளைக் கொண்டு உருவாக்கப் பட்டிருந்தது. அவைகளை இணைத்துக்கட்ட ஆலம் விழுதுகளும், சில மலைச்செடிகளின் காய்ந்த பாகங்களும் பயன்பட்டிருந்தன. வேலியை ஒட்டி ஒரு இடத்தில் சலசலவென்று அருவி நீர் ஒரு சிறு வாய்க்கால் போல ஒடிக் கொண்டிருந்தது. அங்கே நான்கைந்து முயல்கள் புற்களை கறித்துக் கொண்டிருந்தன. தேவிக்கு அந்த சூழல் மிக பிடித்துவிட்டது. படப்பு வேலியை தள்ளிக் கொண்டு 'சாமி... சாமி...' என்கிற குரலோடு உள்ளே நுழைந்தான் சந்த்ரா... பின் தொடர்ந்தாள் தேவி. உள்ளே குடிசையும் திறந்துதான் கிடந்தது. மெல்ல எட்டிப் பார்த்தான். யாரும் இருக்கிற மாதிரியே தெரியவில்லை.

''எங்கே போய்ட்டார் இவர்?'' - அவனிடம் முணுமுணுப்பு.

''என்ன சந்த்ரா... ஆளை காணோமா?''

''ஆமாம் தேவி... எங்கயாவது மலைக்குமேல போய்ட்டாரா என்ன?''

''என்னை கேட்டா... ஆமா இங்க மேல போக என்ன இருக்கு. எங்க பார் மரம் செடி கொடிதானே? ஏதோ நிருவல்லிக்கேணில இருக்கற ஒருத்தர் பீச்சுக்கு போய்ட்டாரான்னு கேக்கற மாதிரி இருக்கு...''

''சரி, கொஞ்சம் வெயிட் பண்ணுவோம்!''

''வெளிட் பண்றதா... என்ன சந்த்ரா இது - நிலைமை தெரியாம பேசறீங்க...''

''என்னை என்ன பண்ண சொல்றே தேவி... அவர் இல்லாதப்ப நான் என்ன பண்ணட்டும்?''

''அப்ப அவர் வரும்வரை நாம இங்க காத்திருக்கப் போறோமா?''

''பொறுமை தேவி... தவிக்காதே - சாமி வரட்டும் அப்புறம் பார்...''

''என்ன சந்த்ரா நீங்க... சாமி சாமின்னு இவரை நீங்க ரொம்பவே நம்பறதும் மதிக்கறதும் எனக்கு புரியாத புதிரா இருக்கு!

இவரால பெருசா என்ன பண்ணிட முடியும்? அப்பாவை பிழைக்க வைக்க முடியாதுங்கறது உலகத்துக்கே தெரிந்த விஷயம். குறைந்தபட்சம் அந்த செல்வகுமாரே முன் வந்து எனக்கு இந்த கல்யாணத்துல இஷ்டம் இல்லைன்னு சொல்லவைக்கவாவது இவரால முடியுமா?''

- தேவி திரும்பவும் படபடவென்று பொரியத் தொடங்கினாள். சந்த்ரா கஷ்டப்பட்டு காதை மூடிக் கொண்டு எதிரே காட்சி தந்த சிவலிங்கத்தை பார்த்தான்.

ஹாஸ்பிடல்!

ராம்மோகனிடம் ஒரு புதிய தெம்பு. மளுக்கென்று கண்களைத் திறந்தவர் படுக்கையில் இருந்தபடியே மிகவும்

தெளிவாகவும் திடமான குரலோடும் பேசினார். டாக்டரிடமும் ஒரு சின்ன ஆச்சரியம்...

''டாக்டர்! எங்க என் மகனும் மகளும்?''

''வெளியதான் இருக்காங்க... இருங்ககூப்பிடறேன்...''

''முதல்ல கூப்பிடுங்க... எனக்கென்னமோ உடம்பு திடீர்னு சரியாயிட்ட மாதிரி ஒரு உணர்வு, ஒரு சுகத்தை இப்ப நான் ஃபீல் பண்றேன்!''

- அவர் சொல்லச் சொல்ல டாக்டருக்கு விளங்கத் தொடங்கிவிட்டது. புற்றுநோயாளிகள் பலருக்கும் சாகப் போவதற்கு முன்னால் ஒரு ஐந்து நிமிட நேரத்துக்கு இப்படி ஒரு தெம்பும் திடமும் ஏற்படுவது மிகவும் சகஜமான ஒன்று.

உடம்பின் மிச்சம் மீதி சத்தி ஆதாரம் அவ்வளவும் சேர்ந்து அப்போது வேகமாக செயல்படும். அணையப் போகும் விளக்கு எப்படி பிரகாசமாக எரியுமோ அப்படி ஒரு பிரகாசத்தை அவர்களிடம் பார்க்க முடியும்.

டாக்டரும் அதை ஊர்ஜிதம் செய்து கொண்டபோது முதலில் உள்ளே வந்தவர்கள் தாட்சாயணியும் செல்வகுமாரும்தான்...

டாக்டர் அவர்களை வெகுவேகமாக தனியே அழைத்துச் சென்று, ''என் அனுபவத்தில சொல்றேன்... சார் இன்னும் அஞ்சு நிமிஷம் வரைதான் உயிரோட இருப்பார். இந்த சந்தர்ப்பத்துல அவர்கிட்ட ரொம்ப சன்னமா பேசணும்'' எனும்போதே சாரதியும் இந்துமதியும் நேராக ராம்மோகன் அருகே சென்று விட்டனர்.

''சாரதி... வாப்பா வா... திடீர்னு எனக்கு ரொம்ப நல்லாயிட்ட மாதிரி இருக்குப்பா... கொஞ்சம்கூட பெய்ன் இல்ல. கண்பார்வையும் நல்லா பளிச்சின்னு தெரியுது. ஆமா எங்க தேவி...?''

''தேவி... தேவி... வீட்ல இருக்காப்பா - இப்பதான் போன் பண்ணேன். வந்துடுவாப்பா.''

''என்னப்பா நீ... ஆமா கல்யாண ஏற்பாடெல்லாம் செய்திட்டியா. எங்க செல்வகுமார்...''

''மாமா... நான் இங்கதான் இருக்கேன்...'' என்றபடி செல்வகுமார் அவருக்கு வெகு அருகில் போய் நின்று கொண்டான்.

''செல்வகுமார்! உனக்கும் தேவிக்கும் சின்ன கருத்து வேற்றுமைகூட ஏற்படக் கூடாது... தேவி ரொம்ப நல்ல பொண்ணு - அவளுக்கு கொஞ்சம் முன்கோபம். நீதான் அட்ஜஸ்ட் பண்ணிக்கணும்...''

''நிச்சயமா மாமா... உங்களுக்கு அந்த கவலையே வேண்டாம் மாமா...''

''அண்ணே! ஏண்ணே இப்படிப் பயப்பட்டே... தேவியை நான் பெத்த பொண்ணு மாதிரி பாத்துப்பேண்ணே! நீ கவலைப்படாதே'' என்றாள் தாட்சாயணி.

''அதுல எனக்கு எந்த சந்தேகமும் இல்லம்மா. அதனாலதானே நான் தேவியை உன் மகனுக்கே கட்டிவைக்க நினைச்சேன். ஒரு பக்கம் பிரிஞ்ச குடும்பமும் ஒண்ணு சேர்ந்த மாதிரி, இன்னொரு பக்கம் தேவிக்கும் ஒரு நல்ல மாமியார் கிடைச்ச மாதிரி ஆச்சே...''

- ராம்மோகன் பேசப் பேச சாரதிக்கு 'ஐயோ அப்பா' என்று வயிற்றுக்குள் அமிலமே சுரக்கத் தொடங்கி விட்டது.

நடுவில் செல்வகுமார் ஒரு பெரிய திருப்பத்தையே அங்கே ஏற்படுத்த தொடங்கி விட்டான். வக்கீல் உடையில் நிடும்மென்று ஒருவர் அங்கே வருவார் என்று யாருமே எதிர்பார்க்கவில்லை.

அவரைப் பார்க்கவும் அவனும் உற்சாகமானான்.

''வாங்க வக்கீல் சார்... நல்ல நேரத்துக்கு வந்தீங்க...'' என்றவன், ராம்மோகன் பக்கம் திரும்பி ''மாமா! எனக்கும் தேவிக்குமான கல்யாணத்தை சட்டபடி நடத்தி வைக்கத்தான் வக்கீல் வந்திருக்கார். உங்க உடம்பு இருக்கற நிலைல உங்களால ரிஜிஸ்தர் ஆபீஸுக்கெல்லாம் வரமுடியாது. முகூர்த்த நேரமும் இப்ப அமையல... அதனால பத்திரத்துல ரெண்டு பேருக்கும் கல்யாணம்னு எழுதி லக்னப் பத்திரிகை மாதிரியே, ஆனா பாண்டு பேப்பர்ல எழுதி எடுத்துட்டு வந்துருக்காரு... அம்மா அதுல கையெழுத்து போட்டுட்டாங்க. நீங்க கையெழுத்து போட்டாலும் சரி, இல்ல பெருவிரல் ரேகையை எடுத்துக்கறோம்...'' - என்றவன், மளமளவென்று அவர் கையை தேடிப்பிடித்து ரேகையை உருட்டி பதிவும் செய்து கொண்டு விட்டான்.

சாரதிக்கு பகீர் என்றது - இந்துமதியோ, ''இனி நம்ம கைல எதுவுமே இல்லைன்னு ஆயிடிச்சே... என்னங்க இது, இவன் இப்படிப் பண்ணிட்டான்...'' என்றாள்.

செல்வகுமார் அந்த நிலையிலும் ஒரு சாரைப் பார்வையாக சாரதியையும் இந்துமதியையும் பார்த்தான். அப்படியே, ''மாமா... உங்க விருப்பத்தை நிறைவேத்தறது மட்டும்தான் இனி என் கடமை. நீங்க கவலையே படவேண்டாம் மாமா...'' என்று நெகிழ்ந்தான்.

- சாரதிக்கும் இந்துமதிக்கும் எரிச்சலாக வந்தது.

திடீரென்று ராம்மோகனிடம் ஒரு பதட்டம். ''டாக்டர்! என் கண் பார்வை கொஞ்சம் கொஞ்சமா மங்கறா மாதிரி இருக்கு டாக்டர்... என்ன டாக்டர் இது?'' - என்றார். டாக்டரும் அதற்கு மேல் மௌனத்தை தொடரத் தயாரில்லை.

''மிஸ்டர் சாரதி... உங்கப்பா அதிகபட்சம் இன்னும் 15 நிமிஷத்துல இருந்து 30 நிமிஷத்துல இறந்துடுவார். கேன்சர்

பேஷண்டுகளோடு முடிவு கண்பார்வை மங்கறதுலதான் ஆரம்பமாகும். இனி எதனாலயும் யாராலயும் எதுவும் செய்ய முடியாது. தயவுசெய்து இந்த 15 நிமிஷத்துல அவர் சந்தோஷப் படும்படியா என்ன செய்யணுமோ அதை மட்டும் செய்யுங்க. நாங்க வெளியே இருக்கோம்'' என்று கூறிவிட்டு நர்ஸை எல்லாம் அழைத்துக் கொண்டு வெளியேறி விட்டார்.

சாரதிக்கு நெருப்பின் மேல் நிற்பது போல் இருந்தது.

ராம்மோகனுக்கு முற்றாக கண்பார்வை போய் விட்டது.

''சாரதி... சாரதி... எங்கப்பா தேவி... எங்க என்னால பாக்க முடியலேன்னாலும் அவ குரலையாவது கேட்கறேன். எங்கப்பா தேவி... வந்துட்டாளா என் செல்லம்?''

- அவர் குரலில் தழுதழுப்பு. செல்வகுமார் இந்த கேப்பில் கோல் போடத் தொடங்கினான்.

''மாமா! தேவி வந்துட்டா... தேவி சீக்கிரம் வா... சீக்கிரம் வா...'' - என்று தாயை அழைத்து அவள் கைகளை பிடித்து ராம்மோகனிடம் தந்தான்.

ராம்மோகனும், ''தேவி... என் செல்லம்... அப்பா புறப்படறேண்டா. இந்த உலகத்துல வாழ எனக்கு இவ்வளவு நாம்மா அனுமதி. நீ நம்ம செல்வகுமாரோட சந்தோஷமா வாழணும்... உன் வயித்துல நானே மகனா வந்து பொறக்கணும். இதாம்மா என் விருப்பம்... சாரதி... இந்துமதி... தாட்சாயணி எல்லாரும் நல்லா இருங்க... எல்லாரும் சந்தோஷமாக இருங்க. உங்க யாருக்கும் யாரோடயும் பிரிவுங்கறதே இருக்கக் கூடாது. அதான் என் விருப்பம். ஒத்துமை ரொம்ப முக்கியம்... ஒத்துமை ரொம்ப முக்கி...''

-அதற்கு மேல் அவரிடம் வார்த்தைகள் இல்லை. உயிர் பிரிந்து விட்டது. தலையும் ஒரு பக்கமாய் சாய்ந்தது.

தாட்சாயணி வாய்விட்டு, அண்ணே என்று கதறினாள். பக்கத்தில் உள்ள வார்டுகளில் இருப்பவர்கள் காதுகளில் எல்லாம் அந்த குரல் விழுந்தது.

டாக்டர் அருகில் வந்தார்.

''எல்லாரும் கொஞ்சம் வெளியில் போங்க... பாடியை 'என்பாம்' பண்ணி ஃப்ரீசர்ல வெச்சுத்தான் தருவோம். கேன்சர் பேஷண்ட்டுங்கறதால கிருமித் தாக்கத்துக்கு வாய்ப்பு அதிகம். உடம்பும் சீக்கிரமா நீர் விட்டுடும். ஆகையால் எவ்வளவு சீக்கிரம் உடம்பை தகனம் பண்ண முடியுமோ பண்ணிடுங்க'' என்றார்.

-சற்று முன்வரை அவர் பேசிய பேச்சுக்கும் இப்போது பாடி, தகனம், கிருமி என்றெல்லாம் அவர் பேசும் பேச்சுக்கும் உள்ள வித்தியாசத்தில் வாழ்க்கை என்பது மாறுவதற்கு நொடிகள்கூட அதிகம்தான் என்று எல்லோருக்கும் தோன்றியது.

சாரதியை பற்றிக் கொண்டு குமுறிக் குமுறி அழ ஆரம்பித்து விட்டாள் இந்துமதி.

''மச்சான்... தேவியைக் கொஞ்சம் சீக்கிரமா வரச் சொல்லுங்க. நாங்க ரெண்டு பேரும் மாலையும் கழுத்துமா மாமா காலை தொட்டுக் கும்பிடணும்'' என்று செல்வகுமார் ஒரு போடு போட்டான்.

சாரதி கண்ணீருக்கு நடுவிலும் அவனை வெறித்தான்.

''அப்படி எல்லாம் பார்க்காதீங்க மச்சான். மாமா செத்துட்டாரு. இனி எப்படி வேணா மாறிக்கலாம்னு தப்பால்லாம் முடிவு பண்ணிடாதீங்க. அப்புறம் மாமா ஆத்மா கொஞ்சம்கூட சாந்தியே அடையாது... அதனால் தான்

போனதுக்கு பிறகு எந்த தப்பும் நடந்துடக்கூடாதுன்னு வக்கீலை வரவெச்சு எழுதியே வாங்கிட்டேன்...'' என்றவனை சாரதி பார்த்த பார்வையில் அனல் வீசத் தொடங்கியது.

செல்வகுமார் அதற்கு மேல் அங்கே நின்றால் ரசாபாசம் என்பதை உணர்ந்து அங்கிருந்து வெளியேறினான்.

நடையில் ஒரு தெனாவெட்டு.

சாரதி போய் ஒரு நாற்காலியில் இறந்தது போல அமர்ந்து விட்டான். இந்துமதிக்கும் எப்படி ஆறுதல் சொல்வது என்றே தெரியவில்லை.

அவனை தேற்றத் தொடங்கினாள்.

''வருத்தப்பட்டாதீங்க... கல்யாணம்கறது எப்பவும் நாம் பார்த்து பண்றது கிடையாதுங்கறது உங்களுக்குத் தெரியாதா?''

''போதும் இந்து... ஏதாவது உளறாதே. நாம் பார்த்து பண்றது கிடையாதுன்னா என்ன அர்த்தம்... தெருவில் போறவனா பார்த்து பண்ணி வைப்பான்...?''

''அப்படி இல்லீங்க - அது சொர்க்கத்துல முடிவானதுன்னு சொல்வாங்களே, அதை சொன்னேன்...''

''மண்ணாங்கட்டி... சொர்க்கமாம், சொர்க்கம்! யாரோ எப்பவோ உளறின உளறல் இது. இப்ப நீ பார்த்தேல்ல. ஒரு மனசாட்சியே இல்லாதவனும் வக்கீலும் சேர்ந்து செஞ்சு வைக்கறது அது... இவன் எவ்வளவு பெரிய கிரிமினல் பார்த்தியா... வக்கீலை வெச்சு பத்திரப் பேப்பர்ல எழுதியே வாங்கிட்டான்...''

''நாமளும் ஒரு வக்கீலைப் போய் பார்ப்போம். இது செல்லுமான்னு கேப்போம். தேவி இதுக்கெல்லாம் ஒரு நாளும் கட்டுப்படமாட்டா...''

''அவ தூக்கி எறிஞ்சிடுவா... கல்யாணம்கறது என் சொந்த விஷயம்... பெத்த அப்பாவே ஆனாலும் என் விருப்பம் இல்லாம முடிவு செய்ய முடியாதுன்னு வாதாடுவா. அது எனக்கும் தெரியும். ஆனா, அப்பாவுக்கு தான் அவமானம்... சாகும்போது அவரை ஏமாத்திட்டோம்னு எல்லாரும் பேசத் தொடங்கிடுவாங்க...''

- சாரதி கரைந்து போனான்.

''எவ்வளவு நாளைக்குங்க பேசுவாங்க... நம்ம கஷ்டம் நமக்குதானேங்க தெரியும்... பேசினா பேசிட்டு போகட்டும்க. நாம முதல்ல நல்லபடியா காரியத்தை முடிப்போம். இந்த பத்திரம் கையெழுத்து இது எதைப் பத்தியும் தேவிகிட்ட இப்ப பேசவேண்டாம். காரியம் முடியட்டும், மெல்லப் பேசலாம்...''

- இந்துமதியும் சாரதியும் தங்களுக்குள் மாறிமாறி பேசிக் கொள்வதை கேட்டபடியே அருகே வந்தான் செல்வகுமார்.

அவன் முகத்தில் முன்பிருந்த அப்பாவித்தனம் துளி கூட இல்லை. மாறாக ஒரு கள்ளத்தனமும் அதில் அரிவாள் முனை போல ஒரு கூர்மையும் தெரிந்தது. அவன் வரவுமே சாரதி முகத்தை திருப்பிக் கொண்டான்.

''மச்சான்... எதுக்கு முகத்தை திருப்பிக்கிறீங்க. நான் என் மாமாவோட விருப்பப்படிதானே நடந்துகிட்டு வர்றேன். என்னடா பத்திரத்துல கையெழுத்து வாங்கிட்டேனேன்னு யோசிக்காதீங்க. அது உங்களுக்காக இல்ல... யாரோ ஒருத்தன் என் தேவியை காதலிச்சிகிட்டு இருக்கான்னு சொன்னீங்கல்ல... அவனுக்காக! அவன் வந்து கலாட்டா பண்ணான்னு வையுங்க - பாருடா என் மாமாவே கையெழுத்து போட்டு கொடுத்துருக்கார்னு காட்டுவேன்ல.

அவன் அதுக்கும் அடங்காம குதிச்சான்னா கோர்ட்ல பார்த்துக்கடான்னு சொல்லிடுவேன். ஏன்னா மரணவாக்கு மூலத்துக்கு எப்பவுமே அவ்வளவு பவர். அதனாலதான் ஆஸ்பத்திரி டாக்டர்கிட்டயே சாட்சி கையெழுத்தும் வாங்கிட்டேன். நாளைக்கு இதுதான் ராம்மோகன்கறவர் ரேகைன்னு எதை வெச்சு நம்பறதுன்னு கோர்ட்ல யாரும் கேட்டுடக் கூடாது இல்லையா... அதுக்காக டெத்சர்டிபிகேட் வாங்கும்போதுகூட மாமாவோட மொத்த கைரேகையோட பிரிண்ட்டையும் அட்டாச் பண்ணச் சொல்லியிருக்கேன். கொஞ்ச நேரத்துல போலீஸ் வந்துடும். வக்கீலே கூட்டிக்கிட்டு வந்து ரேகையை எடுத்துக்கிட்டுதான் உடம்பை 'என்பாம்' பண்ணப் போறாங்க. என்பாம்னா உடம்பு கெட்டுடாதபடி சில ஊசிங்க போடறதுன்னு அர்த்தம். அப்படியே குறிப்பிட்ட ஒரு திரவத்தால துடைச்சு சுத்தப்படுத்தி பக்குவமா உடம்பை கட்டிக் கொடுத்துடுவாங்க... ஒண்ணும் அவசரம் இல்ல. நாளைக்குகூட காரியம் பண்ணலாம். நானும் என்னோட நண்பர்கள் என் அப்பா வழி உறவுக்காரங்கன்னு எல்லாருக்கும் தகவல் சொல்லி அவங்களும் வரணும்ல?''

- செல்வகுமார் பேசிக்கொண்டே போனான். சாரதியால் ஒரு அளவுக்கு மேல் தாங்க முடியவில்லை. ''ஸ்டாப் இட்...'' என்று ஆஸ்பத்திரியே திரும்பிப் பார்க்கும்படி கத்தினான். கத்திவிட்டு தலையில் அடித்துக் கொண்டு அழவும் ஆரம்பித்தான்!

7

ஜோதிடம் என்பதும் கணக்கு என்பதும் ஒன்றுதான் எனப் பார்த்தோம். அதில் தேறியவர் தெளிந்தவர் கடவுளுக்கு நிகரானவர் என்றும் பார்த்தோம்... ஒரு லட்சம் பேரில் ஒருவர்தான் அப்படிப்பட்டவராக திகழ முடியும். அவர் அப்படி திகழவும் அடிப்படை காரணங்கள் இருக்கின்றன. புதன் என்னும் கிரகமும் குரு என்னும் கிரகமும் மிக சிறப்பான இடத்தில் இருக்க வேண்டும். கூடவே சந்திர சூரியர்களும் சிறப்பாக இருக்க வேண்டும். இதற்கு நடுவே ஞானகாரகன் எனப்படும் கேதுவும், யோககாரகன் ராகுவும், ஆயுள்காரகன் எனப்படும் சனியும், மங்களகாரகன் செவ்வாயும் எங்கும் பழுதில்லாதபடி எதாலும் கெட்டிராதபடி உச்சம் பெற்றும் பார்வை பெற்றும் அவரவர் வீட்டிலும் இருக்க வேண்டும். பல லட்சம் கோடி வினாடிகளில் ஒரு சில வினாடிகளின்போது மட்டுமே அப்படி ஒரு கட்ட அமைப்பு சித்திக்கும். ராமாயண நாயகனான ராமனின் ஜாதகத்தை பார்த்தவர்களுக்கு தெரியும்... அபூர்வமான கிரக அமைப்பு அது. ஜாதக கட்டங்களில் நம் விருப்பத்துக்கு கிரகங்களை போட்டு எழுத முடியாது. அதில் சிறு தவறை ஒருவர் செய்தாலும் அதை மிக சுலபமாக கண்டுபிடித்துவிடலாம்.

ஒரு ஜோதிடர் முதலில் ஜாதகத்தைப் பார்த்து அது சரியானதுதானா என்று கண்டு பிடித்த பிறகே பலன்களைப் பற்றி சிந்திக்கத் தொடங்குவார்!'

வானில் இருட்டிக் கொண்டு வர ஆரம்பித்து விட்டது, மழையும் வரும்போல் இருந்தது... அந்த குடிசையில் காத்துக் கொண்டிருந்த தேவிக்கு அதற்கு மேல் பொறுமையில்லை.

''சந்த்ரா... இனி என்னால ஒரு நிமிஷம்கூட இங்க இருக்க முடியாது. இரண்டு மணி நேரம் ஆச்சு... அந்த சாமியாரை காணோம்! இதுல அவர் தப்புக்கும் இடமில்லை. அவர் இருப்பாரா மாட்டாரான்னு தெரியாம வந்த நம்ம தப்பு இது. கமான் சந்த்ரா... மழை வேற வரும் போல இருக்கு... பாருங்க...''

- அவள் சொல்லிமுடிக்க, கேப் பட்டாஸ் வெடிப்பது போல மழைப் பொட்டுகள் மரக்கிளைகள் மேல் பட்டு ஒரு நிஜமாக சப்தமும் கேட்டது.

''ஐயோ மழை வந்திடிச்சு...''

''வரட்டும் தேவி... கொஞ்சம் அலட்டிக்காம தைரியமா இரு. சித்தர்சாமிகளுக்கு நம்ம காசு பணம் பக்திங்கற எல்லாத்தையும்விட திடசித்தமும் நம்பிக்கையும் ரொம்ப பெருசு...''

''காத்திருக்கறதுக்கும் நம்பிக்கைக்கும் என்ன சம்பந்தம். இருக்காரா இல்லையாங்கறதே தெரியாம காத்திருக்கறது ஒரு விதத்துல பெரிய முட்டாள்தனம்?''

''தேவி ப்ளீஸ்...''

''அப்புறம் ஒரு விஷயம் புரியாத நிலைல அதை நம்பறதும் ரொம்ப கஷ்டம். உதாரணமா கடவுள் நம்பிக்கை! ஒருத்தர்கூட கடவுளை நேர்ல பார்த்ததே கிடையாது. ஆனாலும் அவர்மேல் ஒரு நம்பிக்கையோட எப்படி இருக்காங்கன்னே எனக்குத் தெரியல...''

''தேவி! நீ உன் கொள்ளுத் தாத்தாவை பார்த்திருக்கியா?''

''இப்ப எதுக்கு இந்த கேள்வி சந்த்ரா...''

''பதில் சொல்...''

''இல்ல... அவரை நான் பார்க்க வாய்ப்பே கிடையாது. ஈவன் எங்காப்பாவே அவரைப் பார்த்ததில்லை. என் தாத்தா சின்ன பையனா இருக்கும்போதே அவர் செத்துட்டாராம்.''

''இல்ல.. நீ பாக்காததால - பாக்க முடியாத ஒரு சூழ்நிலை இருக்கறதால உன் கொள்ளுத்தாத்தான்னே ஒருத்தர் இல்லன்னு சொன்னா நீ ஏத்துக்குவியா?''

''என்ன லாஜிக்கா பேசறதா நினைப்பா சந்த்ரா... தாத்தா இல்லாட்டியும் அவர் வாரிசுகள் வரிசையா வந்துருக்கோம். அது போதாது அவர் இருந்தாருங்கறத நம்ப...''

''அதே மாதிரிதான் இவ்வளவு பெரிய உலகம் - அந்த உலகத்துக்கு வெளிச்சம் தர சூரியன், இரவுல விளக்கு மாதிரி சந்திரன், தாகம் தீர்க்க மழை, சுவாசிக்க காத்துன்னு தந்துருக்கற ஒரு சக்தியை கடவுள்னு சொல்லி அதை ஏத்துக்கறதும்...''

''சந்த்ரா... என்ன பட்டிமன்றத்துல பேசறதா நினைப்பா?''

''இல்ல தேவி... நீ இன்னும் புலன்களை நம்பி யோசிக்கறதுல இருந்து விடுபடல... இந்த புலன்கள் நம்மை ஏமாத்தக் கூடியது. நம் கைல இது இல்ல... இதோட கைலதான் நாம இருக்கோம்.''

''எப்பிடின்னு சிம்பிளாவிளக்கமுடியுமாஉங்களால?''

''ரொம்ப சிம்பிளாவே சொல்லிடறேன். எப்ப பசிக்குதோ அப்பதானே நாம சாப்பிடறோம்?''

''அதனால...?''

''நம்ம விருப்பத்துக்கு பசியை உருவாக்கிக்க முடியுமா? நம்ம விருப்பத்துக்கு சிறுநீர் கழிக்க முடியுமா முதல்ல...''

''முடியாது... பாடியோட ஜெனடிக்ட் ஃபேக்டரே இருபத்து நாலு மணி நேர இயக்கம்தானே?''

''நான் விளக்கம் கேக்கல. நிலையைச் சொன்னேன். எந்த ஒரு மனிதனும் உடம்புக்கு கட்டுப்பட்டவன்தான்... ஒரு சில மணி நேரங்கள் இல்ல, சில நாட்கள் பசி தாங்கலாம். ஆனா, சாப்பிடாமலே உயிர் வாழ முடியாது... இதைதான் நான் புலன்களை நம்பி செயல்படறதுன்னு சொன்னேன்.''

''சரி... யாரா இருந்தாலும் அப்படித்தானே இருந்தாகணும்?''

''ஸாரி... பரஞ்ஜோதி சித்தர் அதுல இருந்து மாறுபட்டவர்...''

''மாறுபட்டவர்னா... மூக்குல சுவாசிக்கறதுக்கு பதிலா காதில சுவாசிக்கறவரா. சாப்பிடாமலே வருஷக்கணக்கா உயிர் வாழறவரா... எந்த விதத்துல...?

உடம்பை எப்படி சந்த்ரா ஜெயிக்க முடியும்... யாரா இருந்தாலும் பசிச்சா சாப்பிட்டுதான் தீரணும். தாகம் எடுத்தா தண்ணி குடிச்சுதானே தீரணும்?''

- அவள் கேள்விக்கு எதனாலோ சந்த்ரகுமாருக்கும் பதில் கூற வேண்டும் என்கிற எண்ணம் ஏற்படவில்லை. வெளியே மழையோ வலுவாக பெய்ய ஆரம்பித்து விட்டிருந்தது. குளிர் வேறு பிடித்து உலுக்க ஆரம்பித்தது. காற்றின் ஒரு திசை நோக்கிய வீச்சில் குடிசை வாசலில் நின்று கொண்டிருந்த அவர்கள் இருவர் மேலும் மழை வீசித் தெளித்தது போல பெய்யத் தொடங்கி விட்டது.

''சந்த்ரா... உள்ள போய் உட்காருவோம்...'' என்று தேவி உள்ளே நுழைந்தாள். உள் பாகத்தில் ஒரு வித இனம்புரியாத மூலிகை வாசம். சுவாசிப்பதற்கே சுகமாக இருந்தது. அதேசமயம் துளிகூட குளிராதபடி ஒரு இதமான வெப்பம். தேவிக்கு ஆச்சரியமாக இருந்தது. சந்த்ரகுமாரும் அதை உணர்ந்துபோது மணி ஒலிக்கும் சப்தம் கேட்டது. எங்கிருந்து வருகிறது என்று பார்த்தபோது பரஞ்ஜோதி சித்தர்தான் வேலிப்படப்பை கடந்து உள் நுழைந்து கொண்டிருந்தார். அவர் இடுப்பில் கட்டியிருந்த சில பித்தளை மணிகளிடம் இருந்துதான் சப்தமும் வந்து கொண்டிருந்தது. பட்டினத்தார்போல இடுப்பில் ஒரு துண்டு, வயிற்றில் தொப்புள் பாகத்தை தொடுமளவுக்கு தாடி - தலை முடிகளிலோ சடைவிழுந்து கைக்குள் அடங்கி விடும் கற்களை தலையில் அவர் சடைசடையாக சுமக்கிறாற்போல் இருந்தது.

''தேவி, சாமி வந்துட்டார்...'' என்று உற்சாகமானான் சந்த்ரா.

அவரும் உள்ளே வந்தார்.

''நமஸ்காரம் சாமி...'' என்ற சந்த்ரகுமாரை ''வாப்பா... ரொம்ப நேரமா காக்க வெச்சிட்டேன் போல இருக்கு...'' என்றார். சந்த்ரகுமார் ஆமோதிப்பை முகபாவத்தில் காட்டினான். ஆனால், தேவிக்கு அது பிடிக்கவில்லை.

''சாமி... நாங்க கிட்டத்தட்ட இரண்டரை மணி நேரமா காத்துக்கிட்டிக்கோம்...'' - என்றாள். அவர் சிரித்தார்.

''சாமி! இவ பேர் தேவி... நான் நேசிக்கற பொண்ணு...'' என்றான் சந்த்ரா. அவரும் சற்று உற்றுப் பார்த்துவிட்டு, ''குடும்பத்தோட உக்காந்து பேசி உங்க சிக்கலுக்கு தீர்வு காணவேண்டிய பரபரப்பான நேரம் இது. இப்ப போய் இங்க என்னைப் பார்க்க வந்ததுல ரொம்ப காலதாமதம் வேற...

இல்லம்மா?'' - பரஞ்ஜோதி சித்தர் கேட்டதும் தேவிக்கு கொஞ்சம் சுருக்கென்று இருந்தது. ஏனென்றால், சற்றுமுன் அது அவள் சொன்ன கருத்து...

''தரைல எவ்வளவோ இடம் இருக்கும்போது இப்படி கரடுமுரடான மலைல வேற என்னை மாதிரி சாமியாருங்க வந்து உக்காந்துக்கிறோம். இதனால் எங்களைப் பார்க்கணும்னு நினைக்கற உங்களுக்கும் ரொம்ப கஷ்டமா இருக்கு. இல்லம்மா...''

- அவரே கருத்தும் கேட்டுவிட்டு ஒரு காடாவிளக்கை எடுத்து தீக்குச்சியை உரசி விளக்கேற்றினார். அந்த குடிசையின் உட்பாகம் வெளிச்சத்தால் சூழ்ந்து மாறியது. வெளிய ஒரு மின்னல் வானில் ஓடிட, இடி ஒன்றும் இடித்து முடிக்க, தேவி பயத்தில் சந்த்ராவை கட்டிக் கொண்டாள். சுவரில் ஒரு மான் தோல் கேலண்டர் போல் மாட்டப்பட்டிருந்தது. அதை எடுத்து தரையில் விரித்தபடி அதன் மேல் அமர்ந்து கொண்டார். சந்த்ரகுமாரை எதிரில் அமரச் சொல்லி கைகை காட்டினார். அங்கே இரண்டு மரப்பலகைகள் இருந்தன. தேவியும் அவனும் அமர்ந்தனர்.

மூவருக்கு நடுவில் மினுக்மினுக்கென்று காடாவிளக்கு!

சந்த்ரகுமார் வந்த விஷயத்தை ஆரம்பிக்காமல் அவரை மலங்க பார்த்தபடி அமர்த்திருப்பது தேவியை என்னவோ செய்தது. எனவே அவளே ஆரம்பித்து விட்டாள்.

''சாமி... நாங்க எதுக்கு வந்துருக்கோம்னா...?'' என்று அவள் ஆரம்பித்த நொடியே கையை உயர்த்தி 'எதுவும் சொல்லாதே - எல்லாம் எனக்கு தெரியும்' என்பது போல தடுத்து விட்டார்.

''என்னை கொஞ்சம் பேச விடுங்க... இப்படி தடுத்தா எதுக்கு நாங்க வந்துருக்கோம்னு உங்களுக்கு எப்படித்

தெரியும்...?'' என்று சன்னமான கோபத்துடன் அவள் திரும்பவும் நிமிர்ந்தாள்.

''அவசியமில்லம்மா...தம்பியோட பிரச்சினை என்னன்னு எனக்கு நீங்க மதுரையை விட்டு கிளம்பிட்டப்பவே தெரியும். வர்றவழியெல்லாம் நீ தவிச்சதவிப்பு - அதுக்கு பொறுமையா சந்த்ரா சொன்ன பதில்... எல்லாம் தெரியும். உங்களுக்கு நல்லவிதமா உதவணுமேன்னு நான் இங்க மலை உச்சில இருக்கிற அகத்தியர் குகைக்குப் போய் இவ்வளவு நேரமா அவரோட பேசிட்டு வரேன்...''

- அவரது பதில் அவளுக்கு கிள்ளினது போல இருந்தது. அதை நம்புவதற்கே சிரமமாக இருந்தது. அகத்தியரோடு பேசி விட்டு வந்தேன் என்ற பதிலை எந்த கணக்கில் வைத்து எப்படி ஏற்பது என்பதில் எல்லாம் ஏராளமான குழப்பங்கள். அந்த குழப்பம் அவள் முகத்தில் சலன ரேகைகளாக ஓடி நெற்றியில் வரிகள் விழுந்தன.

''என்னம்மா இவன்பாட்டும் அகத்தியர்கிட்ட பேசிட்டு வரேங்கறான்... அவர் என்ன இன்னும் உசுரோட இருக்காருன்னு ஒரு கேள்வியும், என் மேல ஒரு சந்தேகமும் வருதோ?''

''ஆமாம்... நாங்க வரப்போறத தெரிஞ்சிகிட்டு நீங்கள் எங்கள காக்கவெச்சத நினைச்சா அது ஒருபுறம் கோபத்தை தருது. அதே சமயம் நாங்க தகவல் தராத நிலைல அது எப்படி உங்களுக்குத் தெரியும்னும் புரியல. இங்கே செல்போன் டவரும் ஒர்க் ஆகாது. சுருக்கமா சொல்லப் போனா உங்கள புரிஞ்சிக்கிறதே கஷ்டமா இருக்கு...''

''வேண்டாம்மா... எதுக்குப் புரிஞ்சுக்க முயற்சி செய்யறே. ஒரு மனுஷனுக்கு தன்னைப் புரிஞ்சுக்கறதே பெரிய பாடு. இதுல எதுக்கு தேவை இல்லாம என்னைப் போல பரதேசிங்கள புரிஞ்சிக்க முயற்சி செய்யணும்... விட்ரு...''

''அது எப்படிங்க... இதோ - இவரைப் போல நல்லா படிச்ச நபர்களே உங்க கிட்ட பிரமாதமா என்ன வெல்லாமோ இருக்குங்கற மாதிரில்ல நினைக்கறாங்க. இவங்க நம்பிக்கைய என்மேல் ஏத்தி இவ்வளவு தூரம் கூட்டிக்கிட்டும் வந்துட்டாரு. எப்படித் திரும்பிப் போகப் போறோம்னும் தெரியல. எப்படிப் பிரச்சினை தீரப் போகுதுன்னும் தெரியில...''

- தேவியிடம் பெருமூச்சோடு அனலாய் வார்த்தைகளும் வந்து விழுந்தன. சந்த்ரகுமார், தேவியை கடுமையான முகபாவங்களோடு பார்த்து, ''தேவி! ஸ்டாப் இட்... தயவுசெய்து எதுவும் பேசாம கொஞ்ச நேரம் சும்மா இரு. சாமிக்கு தெரியும் நமக்கு என்ன செய்யணும்னு...'' என்று தேவியை சற்று கடுமையான குரலில் அதட்டினான்.

''தம்பி! நீ சும்மா இரு... மனசுக்குள்ள இருக்கறத மறைச்சிகிட்டு வேறவிதமா பேசறதுதான் தப்பு. இவங்களுக்கு என்ன தோணுதோ அதை பேசட்டும்.''

''இல்ல சாமி... இப்பா நானோ தேவியோ, விவாதம் பண்ணவோ சாவகாசமா பேசவோ வரலை. உங்களுக்கே எங்க சிக்கல் தெரியும்...''

''ஆமாமா... கர்மவினை சாகக் கிடக்கற ஒரு பெரியவர் மூலமா கண்ணா மூச்சியில்ல ஆடுது...''

- பரஞ்ஜோதியார் அப்படிச் சொன்னதுதான் தாமதம் தேவிக்கு சுருக்கென்றது. சந்த்ரகுமார் எதுவுமே கூறாமலே அந்த சித்தர் சாகக் கிடக்கற ஒரு பெரியவர் என்று தன் அப்பாவை தொட்டுப் பேசியதில் ஒரு சின்ன ஆச்சரிய அதிர்வு.

''சாமி... ரெண்டு பேரும் மனம்விட்டுப் பழகிட்டோம். தேவி என் மனைவியாயிடுவாங்கற நம்பிக்கைல நான் அவளோடு சேர்ந்து வாழ்ந்து பிள்ளை பெத்துக்கிட்டு குழந்தை குட்டியோட வாழற மாதிரி எல்லாம் கற்பனை எல்லாம் செய்துட்டேன்...''

''அதனால என்ன இப்போ... கற்பனையை உண்மையாக்கிட்டா போச்சு...''

''அதுக்கு விதி இருக்காசாமி?''

''ஏன் இல்லாம... இருக்கப்போய்தானே அப்பான இங்க இவ்வளவு தூரம் என்னைத் தேடி வந்திருக்கே?''

''சாமி ஈஈ...''

''நானும் உனக்கு கடன்பட்டிருக்கேன். அகத்தியர் சாமிதான் சொன்னாரு. பாம்பு கடிச்சு செத்துப்போன என் தாயோட உடம்பை நீ பத்து நாளைக்கு மேல பாதுகாத்து வெச்சிருந்தே...! அப்ப நான் காசி யாத்திரைக்கு போயிருந்தேன். திரும்பி வந்து நான்ல கர்மம் பண்ணணும். திரும்பி வந்த என் முன்னால என் தாயோட உடம்பைதூக்கிப் போட்டு கர்மம் செய்யச் சொன்னே... அப்ப நீ பெரிய சித்தயோகி... எந்த மூலிகை தழையைப் பறிச்சு அரைச்சு பூசுனா பிரேத உடம்பு கெட்டுப் போகாதுங்கறதுல்லாம் உனக்கு அப்ப நல்லா தெரியும். அதைச் செய்து அன்னிக்கு என் தாய் உடம்பையும் காப்பாத்திக் கொடுத்தே...

உனக்கு ஒண்ணு தெரியுமா?

இதெல்லாம் உன் மூணாவது ஜென்மத்தின்போது... இப்ப நீ டாக்டரா எடுத்துருக்கறது ஆறாவது ஜென்மம். இன்னும் ஒரு ஜென்மம் உனக்கு இருக்கு. அதுல ஒரு ஆச்சரியம் பாரு... எப்பவும் நீ எடுக்கற ஜென்மத்துல எல்லாம்

வைத்தியனாவே இருக்கேய்யா. அதுதான் உன் ஜாதகத்தோட சிறப்பு...''

- பரஞ்ஜோதி சித்தரின் பேச்சுக்குள் வரிக்கு வரி அமானுஷ்யம். தேவிக்கு ஒரு ராஜா ராணி கதை கேட்கிற மாதிரிதான் இருந்தது. ஆனால், சந்த்ரகுமாருக்குத் தெளிவாகப் புரிந்தது. அவர் தங்கள் பொருட்டு ஒரு பெரிய கணக்கையே போட்டு விட்டு வந்திருக்கிறார் என்று.

''சந்த்ரா... சாமி என்ன சொல்றார். ஐ கான்ட் பிலீவ். இதை எல்லாம் எந்த அடிப்படைல சந்த்ரா ஏத்துக்கறது?'' என்றும் கேட்டு விட்டாள்.

''பொண்ணே நீ நம்பாதே... நம்பவே நம்பாதே... நம்பி என்னாகணும்? எங்கள மாதிரி ஆசாமிகளை நம்பாம வெறுக்கறதுதான் எங்களுக்கு நல்லது. அப்புறம் இந்த காட்டுக்கு நல்லது. நாட்டுக்கும் அதான் நல்லது. அதனால நீ நம்பவே நம்பாதே. நம்பிட்டு சந்த்ரகுமார் கஷ்டப்படறது போதாதா?''

- அவர் வரையில் இப்படி ஒரு பதில் தேவிக்கு தலையைச் சுழற்றியது. சந்த்ராவோ நேராக விஷயத்துக்குள் சென்றான்.

''சாமி... என் கற்பனையை உண்மையாக்கிட்டா போச்சுன்னு சொன்னீங்க. எப்படீங்க அப்படிச் சொன்னீங்களோ அப்பவே எனக்கு மனசுல இருந்த பாரமெல்லாம் நீங்கிடிச்சு சாமி... அது எப்படி எந்த மாதிரின்னுல்லாம் உங்ககிட்ட நான் கேட்டா அது நான் உங்கள புரிஞ்சுகிட்டதுக்கே அர்த்தமில்லாம போயிடும். இனி எங்க கல்யாணம் உங்க கைல. அது போதும் எனக்கு. நாங்க புறப்படலாமா சாமி?''

- பக்குவமாய் பாந்தமாய் பேசியபடி கேட்டான்.

''நல்லது தம்பி... நீ புறப்படு. மழைகூட நின்னுடிச்சு... இப்ப புறப்பட்டா ராத்திரி 2 மணிக்கெல்லாம் ஊருக்குப் போயிடலாம். நேரா இதோ இந்த பொண்ணோட வீட்டுக்குப் போ. இன்னிக்கு விடிய விடிய அங்க யாரும் தூங்கப் போறதில்ல...''

- அவர் அப்படி கூறவும், தேவிக்கு ஷாக் அடித்த மாதிரி இருந்தது.

''சாமி தூங்கப் போறதில்லன்னா என்ன அர்த்தம் சாமி...''

''என்னம்மா அப்படிக் கேட்டுட்டே. உன் அப்பா உயிருக்குப் போராடிக்கிட்டு இருக்கும்போது எப்படித் தூக்கம் வரும். அதான் அப்படிச் சொன்னேன்.''

''சரி, சாமி... சந்த்ராவுக்கு உங்கள தெரிஞ்ச அளவு எனக்கு உங்கள தெரியாது. இருந்தாலும் கேக்கறேன், எப்படி எங்க கல்யாணம் நடக்கும். அதுவும் எங்கப்பாவோட பரிபூரண சம்மதத்தோட...?''

''நடக்கும்மா... நடந்தே தீரும். உனக்கு இவனையும் இவனுக்கு உன்னையும்தான் விதில போட்டுருக்கு. அப்படி போட்டிருந்தா நடந்துதானே தீரணும்?''

''அப்படி நடக்கணும்னு இருந்தா அப்பா எதுக்கு இப்படி தன் உயிர் போகப் போற ஒரு நேரத்துல என் கல்யாணம் பத்தி வேறமாதிரி நினைக்கணும். இப்ப பார்த்து கச்சிதமா அந்த செல்வகுமாரும் என் எதிர்க்க வந்து நிக்கணும்?''

''அவனுக்கு உங்கப்பாவால கஷ்டம் வரணும்னு இருக்கு. அந்ததண்டனைக்காகதான்மா அவன் வந்துருக்கான்...''

''எங்கப்பாவால அவன் எதுக்கு கஷ்டப்படணும். புரியலியே...?''

''நாளைக்கு இதே நேரம்... உனக்குள்ள அந்த கேள்வியும் இருக்காது - எந்த குழப்பமும் இருக்காது. எல்லாம் தெளிவாகியிருக்கும். நீ புறப்படு. நான் ஏதோ விபூதி தந்து கடவுள் பார்த்துப்பார்னு சொல்ற ஒரு சாமி இல்ல. நான் சொல்றது நடக்கும். நீ வேணா பாரேன்.''

- திரும்பவும் அவர் பேச்சில் ஒரு ஊசி. அவளுக்கும் வலித்தது. இருந்தும் அந்த பதிலால் மனசு நிறையவில்லை. அது கொதிக்கும் வெயிலின்போது ஒரு பாறை மேல் விழுந்த ஒரு மீன் குஞ்சைப் போல துடித்தபடிதான் இருந்தது!

8

ஜாதக கணக்கு போடுவதில் ஒருவருக்கு பிடிப்பும் ஆர்வமும் ஏற்பட்டுவிட்டால் அது விடவே விடாது... அதிலும் துல்லியமாக போட முடிந்தவருக்கு நேரம் போவதே தெரியாது. காரணம், அந்த கணக்கு அளிக்கும் விடைகள் தான்!

ஒரு ஜோதிடர் இந்த கணக்குக்கு தன்னையே உட்படுத்திக் கொண்டார். நாளை மதியம் 2 மணிக்கு நான் என்ன செய்து கொண்டிருப்பேன் என்று ஒரு கேள்வி கேட்டு அதற்கு விடையை தேடத் தொடங்கினார் அந்த ஜோதிடர். கிட்டத்தட்ட ஆறு மணி நேரம் பலவித கணக்குகளை போட்டு முடித்துவிட்டு பார்த்த போது அப்போது ஆழ்ந்த தூக்கத்தில் இருப்பதாக தெரிய வந்தது. இதை அப்போது அவரைப் பார்க்க வந்த நண்பரிடமும் கூறியவர், முடிந்தால் என்னை தூங்க விடாமல் பார்த்துக்கொள் என்றார்.

அவரும் ஜாதகக் கணக்கு என்பதெல்லாம் பம்மாத்து என்கிற கருத்து உடையவர். எனவே நீ எப்படி தூங்குகிறாய் என்று நானும் பார்க்கிறேன். வீட்டில் இருந்தால் நம் வீடுதானே யார் கேட்கப் போகிறார்கள் என்கிற ஒரு எண்ணத்தின் அடித்தளத்தில் பேசிக் கொண்டிருக்கும்போதே ஒரு வேளை தூக்கம் வந்து விடலாம். அதுவே நாம் பரபரப்பாய் ஒரு கூட்டத்துக்கு நடுவில் இருந்தால் அந்த தூக்கம் எப்படி வரமுடியும் என்று கேள்வி கேட்ட அந்த அன்பர், அதற்கேற்ப அவரை அழைத்துக் கொண்டு புறப்பட்டு விட்டார். ஜோதிட கணக்கு போட்ட அன்பருக்கு தன் கணக்கு எப்படிப் பலிக்கப் போகிறது என்பதை அதை எதிர்த்து செயல்படுவதன் மூலம் உணர்ந்து கொண்டுவிட வேண்டும் என்கிற எண்ணம். எனவே அவரோடு சேர்ந்து கொண்டு செயல்படத் தொடங்கினார்.

ஆனால், ஜோதிட அன்பர் போட்ட கணக்கு தான் ஜெயித்தது. எப்படித் தெரியுமா?

*நி*ல்ல இருட்டு!

ஒரே சில்வண்டுச் சப்தம் வேறு...

எப்படி அங்கிருந்து குற்றாலத்தின் அருவிக்கரை வரை செல்லப் போகிறோமோ என்றிருந்தது. வரும்போதே கிட்டத்தட்ட இரண்டு மணி நேரமாகி விட்டிருந்தது. இப்போதும் அதே அளவு நேரமாகலாம் என்றுதான் தேவிக்கு தோன்றியது.

பரஞ்ஜோதி சித்தரோ, ''அஞ்சு நமிஷத்துல நீங்க கீழ ரோட்ல நிறுத்திட்டு வந்துருக்கற உங்க கார்கிட்ட

போயிடலாம்'' என்றபடியே கையில் ஒரு தீப்பந்தமுடன் அவரும் புறப்பட்டார்.

''சாமி... நீங்களுமா கூட வர்றீங்க?''

''ஆமாம்பா... வழில மிருகங்க வந்தா தேவி அநாவசியமா பயப்படுவால்ல அதான்...''

''ஐயோ! அப்ப மிருகங்க வருமா... எந்த மாதிரி மிருகங்க வரும்?'' என்று தன் மை விழிகள் படபடக்க கேட்டாள் தேவி.

''காட்டெருமை, கருஞ்சிறுத்தை, ஒரு பொட்ட சிங்கம் ஒண்ணும் சுத்திக்கிட்டிருக்கு. அதுவும் வரலாம்...''

''மைகாட்... சிறுத்தை, சிங்கம் எல்லாம்கூடவா இந்த காட்டுல இருக்கு?''

- அதற்கு அவர் பதில் ஒன்றும் கூறாமல் தீப்பந்தம் பிடித்தபடி முன்னால் நடந்தார்.

''தம்பி... உன் வருங்காலத்தோட கைய பிடிச்சுகிட்டு என் பின்னாலேயே வா. அஞ்சு நிமிஷத்துல உங்கள கீழே கொண்டுகிட்டுப் போய் விட்டுடறேன்'' என்றபடியே நடந்தார்.

''அஞ்சு நிமிஷத்துலயா... குறைஞ்சது இரண்டு மணி நேரம் ஆகியே தீரும்... சந்த்ரா! இவர் என்ன சொல்றார். நாம என்ன பறந்தா போகப் போறோம்?'' என்று அவளும் கிசுகிசு குரலில் கேட்டாள்.

சந்த்ரா அதற்கு பதில் கூறாமல், ''அஞ்சு நிமிஷம் கழிச்சு இதுக்கு நான் பதில் சொல்றேன்'' என்றான். அவரோ விறுவிறுவென்று முன்னால் வெகுதூரம் சென்றவராக திரும்பி பார்த்தார்.

''இப்படி மெல்ல வந்தா எப்படி?'' என்று கடிந்து கொண்டார். பின் இருவரும் அருகில் வரவும் ஒரு குச்சி ஒன்று

அருகில் கிடந்தது. அதை எடுத்தவர் ''சந்த்ரா தம்பி... இதை நீ பிடிச்சுக்க. உன்னை உன் வருங்காலம் பிடிச்சுகிடட்டும்... நானும் நடக்கறேன். இப்பவே ரெண்டு நிமிஷம் ஆச்சு. இன்னும் மூணு நிமிஷம்தான் இருக்கு...'' என்று ஏதோ ரயிலுக்கு நேரமாகிவிட்டதைப் போல பேசினார்.

சந்த்ரகுமாரும் அப்படியே செய்தான். மிகச்சரியாக ஒரு நிமிடம் ஆகியிருக்கும். சிங்கத்தின் கர்ஜனைக் குரல் கேட்டு தேவியை கிலி கொள்ளவைத்தது. அவர்கள் எதிரில் ஒரு சிங்கம் நிஜமாலுமே குறுக்கே சென்றது. பரஞ்ஜோதி அதைப் பார்த்தவராக, ''போப்பா... போய் காலா காலத்துல படு...'' என்று ஒரு மனிதனிடம் பேசுவதைப் போல பேசினார். அதுவும் அசால்டாக கடந்து போனது. தேவிக்கு அப்போதுதான் தன் உயிர் என்பது எங்கே இருக்கிறது என்பதே தெரிந்தது. சந்த்ரகுமாருக்கும் அது ஒரு பய'ங்கர அனுபவம் தான். கூடவே பரஞ்ஜோதி சித்தர் இருப்பதால் எந்த விதமான கெடுதலும் ஏற்பட்டு விடாது என்கிற தைரியம். இருளில் விறுவிறுவென்று நடந்தபடியே இருந்ததால் அந்த அனுபவத்தின் தாக்கங்களை எல்லாம் தேவியால் உடனுக்குடன் சந்த்ரகுமாரிடம் பகிர்ந்துகொள்ள முடிய வில்லை. எங்கேயோ மிதந்தபடி, பறந்து போகிற மாதிரி எல்லாமும் அவளுக்கு இருந்தது. ஒரு விஷயத்தில் மட்டும் தேவியிடம் மாற்றம் ஏற்பட்டிருந்தது!

பரஞ்ஜோதி சித்தரிடம் நிச்சயம் ஏதோ இருக்கிறது என்கிற எண்ணம்தான் அது.

மிகச்சரியாக ஐந்தாவது நிமிடம்... கார் பஸ்களின் ஹாரன் சப்தம் காதில் கேட்டபோது தேவிக்கு ஆச்சரியமான ஆச்சரியம். கண் எதிரில் குற்றாலம் நகரியத்தின் சாலைகளும் அதன்மேல் மனிதர்களும் தெரிந்தனர்.

என்ன ஆச்சரியம் இது!

எப்படி சாத்தியமானது... ஐந்து நிமிட நேரத்தில் புலியருவியில் இருந்து குற்றால மெயின் அருவிக்கு அருகில் ஒருவரால் வரமுடியுமா? தேவி கேள்விக்குள் விழுந்து தனக்குள்ளே மாய்ந்து போகுமுன் தார்ச்சாலையும் வந்து விட்டது. அதுவும் எங்கே சந்த்ரகுமார் காரை நிறுத்தி இருந்தானோ அங்கேயே வந்தாகி விட்டது.

காரின் மேல் பக்கத்து மரம் மழையின் நிமித்தம் ஏராளமான பூக்களை அர்ச்சித்தது போல உதிர்த்திருந்தது.

சந்த்ரகுமார் பதிலுக்கு பரஞ்ஜோதி சித்தரை பார்த்து கைகளை மட்டும் கூப்பினான். அவனிடம் அதற்கு மேல் எந்தவித எக்ஸைட்மெண்ட்டோ வார்த்தைகளோ எதுவும் இல்லை. அவரும், ''போய்ட்டு வா தம்பி... எல்லாம் சரியாயிடும்...'' என்றார். பின் தீப்பந்தத்தை அப்படியே ஓரமாக ஒடியபடி இருக்கும் மழை நீரில் போட்டார். அதுவும் அணைந்து போய் புகை எழும்பிற்று.

தேவி அதைக் குனிந்து பார்த்துவிட்டு நிமிர்ந்து பார்ப்பதற்குள் அவரைக் காணவில்லை.

''சந்த்ரா! என்ன இது மிராகிள்... எப்படி சந்த்ரா, நாம அஞ்சு நிமிஷத்துல கீழே வந்தோம்... ஐ கான்ட் பிலீவ். என்னால கொஞ்சம்கூட நம்ப முடியல... எப்படி... எப்படி?''

''அதான் பரஞ்ஜோதி சித்தர்... வரும்போது எவ்வளவு கேள்வி கேட்டே... இப்ப அதை எல்லாம் உனக்குள்ள கேட்டுக்கோ தேவி...''

''சந்த்ரா! இப்படிச் சொன்னா எப்படி... நான் புரிஞ்சுக்க முயற்சி செய்யறது தப்பா?''

''அத தப்புன்னு யார் சொன்னது... ஆனா, ஒரு குறிப்பிட்ட தூரத்துக்கு மேல் நம்மால புரிஞ்சுக்க முடியாது.

நமக்கு அந்த கெபாசிடி இல்லையோன்னு நமக்கே தோணும்...''

''ஒரு டாக்டருக்கு படிச்சிட்டிருக்கிற நீங்க பேசற பேச்சா இது...''

''டாக்டர்னாலும் நானும் மனுஷன்தானே... எனக்கும் லிமிட்ஸ் இருக்கு தேவி...''

''அது எப்படி சந்த்ரா, ஒரு சிங்கம் எதுவும் பண்ணாம போக முடியும்... எனக்கு மயக்கமே வந்திடிச்சி.''

''அதான் அன்போட சக்தின்னு சொல்வார் சாமி. உன்கிட்டகூட அவர் தன்னைப் புரியவைக்கவோ, இல்ல நான் அதை பண்ணிடுவேன், இதை பண்ணிடுவேன்னு சொல்லவே இல்லை பாத்தியா?''

''ஆமாம்... பெரும்பாலும் புதிராவே இருந்தது அவர் பேச்சு. எனக்கு அதெல்லாம்கூட விஷயமில்லை. எப்படி நாம் இவ்வளவு சீக்கிரம் இங்க வந்தோம் அதான்...''

''கார்ல போய்க்கிட்டே பேசலாம்... கமான் கெட் இன்.''

- இருவரும் காரில் ஏறிக்கொண்டனர். காரும் சீறிக்கொண்டு கிளம்பியது. கை கடிகாரத்தில் மணி ஒன்பது! அந்த நேரத்திலும் அருவிக்கு குளிப்பதற்காக சிலர் சென்றபடியே இருந்தனர். பலரிடம் போதையும் தள்ளாடலும்!

''குற்றாலம்னாலே கூத்தடிக்கற இடம்னு ஆயிடிச்சு...''

- என்று சந்த்ரகுமார் முணுமுணுத்துக் கொள்ள, கச்சிதமாய் தேவியின் செல்போனில் அழைப்பொலி.

வேகமாய் எடுத்துக் காதை கொடுத்தாள்.

''தேவி...''

''அண்ணே...''

''என்னம்மா நீ... எங்க இருக்கே - எவ்வளவு மணி நேரமா ட்ரை பண்ணிக்கிட்டு இருக்கோம் தெரியுமா?''

''ஸாரிண்ணே... அந்த சித்தரை பார்க்கப்போன இடத்துல டவர் கிடைக்கலண்ணே... அப்புறம் அப்பாக்கு இப்ப எப்படிண்ணே இருக்கு?''

''என்னத்தம்மா சொல்ல... நான் அதை எப்படிச் சொல்ல?''

- மறுபக்கம் சாரதியிடம் வேகமான விகும்பி அழும் அழுகுரல்!

''அண்ணே... என்னாச்சுண்ணே?''

''என்ன ஆச்சா... எல்லாம் முடிஞ்சு போச்சும்மா. அப்பா உயிர் போய் கிட்டத்தட்ட நாலு மணி நேரமாச்சு. உடம்பு இப்ப ஃப்ரீஸர்ல...!''

''ஐயோ அண்ணே...''

''உயிர் போறதுகூட எதிர்பார்த்ததுதான் நாம... ஆனா, இந்த சண்டாளன் செல்வகுமார் சாகறதுக்கு முந்தி அப்பாவை வெச்சு ஒரு பெரிய நாடகமே நடத்திட்டான்மா...''

''நாடகமா...?''

''நம்ம வரைல அது நாடகம். ஆனா, ஊர் உலகத்தை பொறுத்தவரைல அது கிட்டத்தட்ட உனக்கும் அவனுக்குமான நிச்சயதார்த்தம்.''

''வேண்டாம்ண்ணே... என்னை பயமுறுத்தாதே - சந்த்ரா பக்கத்துலதான் இருக்கார். இதுக்கு மேல நீ பேசறத என்னால கேக்க முடியாது. அவர்கிட்ட நீயே பேசிக்க...''

- என்று படபடத்தவள், ''சந்த்ரா கமான், எல்லாம் முடிஞ்சு போச்சு...'' என்றாள். அவனை நோக்கி செல்போனை நீட்டியபடி...

அவனும்காரை ஓரமாக நிறுத்தினான்.

செல்போனை மிகுந்த நிதானத்துடன் காதருகே வைத்துக் கொண்டு கொஞ்சமும் பதட்டமில்லாதவனாக ''சொல்லுங்க சாரதி'' என்றான்.

சாரதியும் நடந்த அவ்வளவையும் கூறி முடித்தவனாக இறுதியில் சொன்னது சந்த்ரகுமாரையே சற்று கலங்க வைத்து விட்டது.

''சந்த்ரா... இங்க எல்லாத்தையும் லீகலாவே அந்த நபர் செய்து முடிச்சுட்டான். எங்களால அவனுக்கு எதிரா எதையும் செய்ய முடியாது. உங்களுக்கு ஒரே வழிதான். அப்படியே என் தங்கச்சியோட போய் கல்யாணத்தை முடிச்சிகிட்டு திரும்பி வாங்க. இங்க நாங்க நாளைக்கு காலைல ஒன்பது மணிக்கு அப்பாவை மயானத்துக்கு கொண்டு போகப் போறோம்... நீங்க இப்ப இங்க வந்தா எல்லாமே கெட்டுடும்.''

- சாரதியின் பேச்சு சந்த்ரகுமாருக்கு வருத்தத்தையும் பலத்த யோசனையையும் உருவாக்கியது.

தேவி கண்களில் நீர் பெருகிட அவனை வெறித்தாள். அவனும் அவளைப் பார்த்து கண்ணீரைதுடைத்து விட்டான். பின், ''கவலைப்படாதே... சாமி சொன்னதுல எனக்கு நம்பிக்கை இருக்கு. நம்மை பிரிக்க யாராலயும் முடியாது'' என்றான்.

''சந்த்ரா... அவன் அக்ரீமெண்ட் மாதிரி எழுதி அப்பாகிட்ட கையெழுத்தே வாங்கிட்டானாம்...''

''என்ன வேணா பண்ணியிருக்கட்டும். ஐ டோண்ட் கேர்.''

''சரி, அண்ணன் முடிவா என்னதான் சொன்னார்...''

''நம்மளை அங்க வரவேண்டாம்னார். ஒடிப்போய் கல்யாணம் பண்ணிக்கச் சொன்னார்...''

''நினைச்சேன். அதுதான் நமக்கும் ஒரே வழி - இல்ல...''

''என்ன பேசறே... உன் அப்பா இறந்து பிணமா கிடக்கும்போது உனக்கும் எனக்கும் கல்யாணமா?''

''வேறவழி... நானும் நீங்களும் இப்ப அங்க போனா அந்த பத்திரத்துக்கெல்லாம் பதில் சொல்லணும். சொந்தக்காரங்கல்லாம் அவன் பக்கம்தான் நிப்பாங்க. அப்பா உயிர் பிரியவும் நாம பேச்சு மாறிட்டோம்னு அண்ணனுக்கு தான் கெட்ட பேர் வரும்...''

''நீ நினைக்கற எதுவுமே நடக்காது தேவி... தைரியமா இரு. நாம இப்ப நேரா உங்க வீட்டுக்குப் போறோம். உன் அப்பாவோட உடம்புக்கு முதல்ல மரியாதை செலுத்தறோம்...''

''இல்ல சந்த்ரா... நாம போறது அ.பத்து. நம்ம காதலை நாமளே குழி தோண்டி புதைக்கற மாதிரியான ஒரு விஷயம் அது...''

''நீ நினைக்கற மாதிரி நடந்தாதானே அப்படி ஆகும்... நிச்சயமா அப்படி நடக்காது. சாமி நமக்கு நல்ல வழி காட்டுவார்...''

''போதும்... சாமி... சாமி... சாமி! அவரால இனி நமக்கு என்ன பெருசா உதவி செய்ய முடியும். அப்பா உயிரோட இருந்தாலாவது பரவாயில்லை. அவரும் இறந்துவிட்டார். இந்த நிலைல சாமியால என்ன செய்ய முடியும்? ஒரு வேளை அந்த செல்வகுமாரை வாயடைக்க வைக்கறார்னே வெச்சுப்போம். அதனால நமக்கு தடை வேணும்னா நீங்கலாம். அப்பாவோட ஆசையை அப்படியே நாம நிறைவேத்தலைங்கறதுதானே உண்மை. எப்படிப் பார்த்தாலும் அப்பா ஆசை ஈடேறப் போறதில்லன்னும்

போது, இந்த செல்வகுமாரை பத்தி எதுக்கு பயப்படணும். சாமியும் இவன் மனசை மாற்றி இவன் திருந்தறதெல்லாம் வேஸ்ட்... அதனால நாம் இங்க எங்க வீட்டுக்குப் போக வேண்டாம்.''

- தேவியின் பேச்சிலும் ஒரு நியாயம் இருக்கிற மாதிரிதான் தோன்றியது. அதற்காக சித்தர் சாமியை நம்பாமல் தங்கள் வழியே தங்கள் இஷ்டப்படி போவதும் அவனுக்கு சரியாகத் தோன்றவில்லை. அதற்காக சாமியை பார்க்க வந்திருக்கவே தேவையில்லை என்றும் தோன்றியது.

காலம் என்பதே இப்படித்தான். அது பலவிதமாக யோசிக்க வைக்கும்... பல குழப்பங்கள் ஏற்படுத்திப் பார்க்கும். சாமி கூட ஸ்திர புத்தி, நம்பிக்கை, நேரான வழி இவை எல்லாம் ஒருபோதும் தோற்காது என்பார். அதெல்லாம் சந்த்ரகுமாருக்கும் நினைவுக்கு வரவே, மறுப்பாக திரும்பி தேவியைப் பார்த்தான்.

''என்ன சந்த்ரா... நாம எங்க வீட்டுக்குப் போகவேண்டாம்தானே?''

''இல்ல தேவி... போவோம். ஒரு பெண்ணா உன் அப்பாவுக்கு நீ செய்ய வேண்டிய கடமையைச் செய். அதுதான் நாம இப்ப செய்ய வேண்டிய செயலும்கூட. மற்றதை நிச்சயமா சாமி பார்த்துப்பார்...''

- சந்த்ரகுமார் காட்டிய உறுதி தேவி முகத்தில் கோபமாக பீறிட்டது.

''என்ன சந்த்ரா நீங்க... சாமி பாத்துப்பாங்க, சாமி பாத்துக்குவார்னு அவரையே நம்பி பேசறீங்க. உங்களுக்கா சுயமான முடிவோ, இல்லை தீர்மானமோ கிடையாதா?''

''தேவி... ஒருத்தர் மேல் நம்பிக்கை வெச்சுட்டபிறகு பாதை மாறிப் போகக் கூடாது...''

''இந்த விஷயத்துல நீங்க நம்பிக்கை வெச்சா போதுமா. நான் வைக்க வேண்டாமா?''

''உனக்கும் சேர்த்துதான் சாமியை நம்பறேன். அவர் நமக்கு நிச்சயமா உதவி செய்வார். அந்த செல்வகுமார்லாம் ரொம்ப சாதாரணமானவன் தேவி. தைரியமா இரு...''

''சரி... நான் பயந்த மாதரி நடந்துட்டா அப்ப என்ன செய்வீங்க?''

''நடக்காது. என் எதிர்க்க அவன் உன்கிட்டயே வரமுடியாது. முதல்ல இப்ப நீ செய்ய வேண்டியது, உங்க அப்பாவுக்கான ஈமக்கடன். என் கண் முன்னால அதுதான் இப்ப தெரிஞ்சிகிட்டிருக்கு... மற்ற எல்லாமே அதுக்கு பின்னாலதான்!

நாம எப்பவும் நேர்வழியிலயே போவோம். என்ன வருதுன்னு நானும் பார்க்கறேன்...''

- சந்த்ரகுமார் முதல் முறையாக மிகத் தெளிவாகவும் தீர்க்கமாகவும் பேசினான். பேசியதோடு காரையும் ஸ்டார்ட் செய்தான்.

தேவிக்குதான் அவன் முடிவும் போக்கும் ஏமாற்றமாக இருந்தது!

9

தனது ஆய்வில் மறுநாள் இரண்டு மணிக்கு நல்ல தூக்கம் என்பதை அறிந்த ஜோதிடர், அதை தவிர்க்கவும் வெற்றி கொள்ளவும் ஒரு பெரும் கூட்டத்தில் இருந்து விதிக் கணக்கு எப்படிச் செயலாற்றப் போகிறது என்பதை அனுபவ பூர்வமாக உணர்வதற்கு தயாரானார்... பேசாமல் ஒரு திரைப்படத்துக்கு போவோம். 2 மணி என்பது வரிசையில் நிற்கும்

நேரமாக இருக்கும். தூங்க விரும்பினாலும் முடியாமல் போகும் என்ற முடிவு செய்து அதற்காக அவர் திரை அரங்கத்திற்கு செல்லும்போது வழியில் விபத்து நேரிட்டது. அதில் அவருக்கு பலத்த காயம். ஆஸ்பத்திரிக்கு அவரை தூக்கிச் சென்றனர். அங்கு அவருக்கு மயக்கமருந்து கொடுக்கப்பட்டது. பின்தான் டாக்டர் வந்து அறுவைசிகிச்சையும் செய்யப்பட்டது. மயக்கத்தில் அவர் இருந்தபோது மணி மிகச் சரியாக இரண்டு. அவருடன் இருந்த நண்பருக்கு அப்போதுதான் விதிக்கணக்கு எப்படிப்பட்டது என்பது புரிந்தது. 2 மணிக்கு தான் என்ன செய்து கொண்டிருப்போம் என்பதை பார்த்தவர், கொஞ்சம் முன்பாக அதாவது மிகச் சரியாக 1.15-க்கு என்ன செய்து கொண்டிருப்பேன் என்பதை கவனித்திருந்தால் விபத்து பற்றி தெரிய வந்து அவரும் வேறுமாதிரி முடிவு எடுத்திக்கக் கூடும். ஆனால், அவர் இப்படி 2 மணிக்கு என்னாகும் என்று பார்க்கப் போனதே 1.15-க்கு விபத்து நடக்கத்தான் எனும்போது அதை மாற்ற யாரால் முடியும். இதிலிருந்து அந்த ஜோதிடருக்கும் சரி, அவரது நண்பருக்கும் சரி... விதியின் வழியில்தான் மதி என்பது செல்லும் என்பதும் அதற்கேற்பவே பேச்சு செயல் எல்லாம் அமையும் என்பதும் புரிய ஆரம்பித்தது.

இந்த கருத்தை கடுமையாக முயற்சிகள் செய்யும் முயற்சியாளர்கள் மறுப்பார்கள். முயற்சி செய்தால் முடியாததும் உண்டோ இதெல்லாம் மனிதனை செயலற்றவனாக்கும் பிற்போக்கு கருத்தாகும் என்பார்கள்.

ஆனால், முயற்சித் திருவினை என்பதற்கு பின்னால் உண்மையில் வேறு ஒரு விஷயம் ஒளிந்துள்ளது. முயற்சித் திருவினையாக்கும் என்பதற்கு முன்னாலும் பின்னாலும் இரு வரிகள் உள்ளன. அவைகளை சாதுர்யமாக மறைத்து விட்டு நடுவில் உள்ள 'முயற்சித் திருவினை யாக்கும்' என்னும் வரியை மட்டும் சொல்வதுதான் இன்று தங்களை வெற்றியாளர்கள் என்று சொல்பவர்களின் வழக்கம்.

சரி, அந்த வரிகள்... அதாவது வார்த்தைகள் எவை?

இரவு மணி பன்னிரண்டு!

ராம்மோகன் பங்களாவின் முகப்பில் ஒரு ஃப்ரீசருக்குள் ராம்மோகன் உடம்பு வைக்கப்பட்டிருக்க, சுற்றிலும் ஏராளமான உறவினர்கள் மற்றும் அவரது ஈசா கார்மெண்ட்ஸில் பணியாற்றும் ஊழியர்களின் கூட்டம். அவ்வப்போது வந்து போகும் பெரிய மனிதர்கள் சாரதியை துக்கம் கேட்டுவிட்டுப் போனதில் சாரதியிடம் ஒரு தனி களைப்பு. அவ்வளவு பேருக்கு நடுவிலும் செல்வகுமாரிடம் ஒரு சுறுசுறுப்பு தெரிந்தது. அவனாக வலியப் போய் கிளரிடம் பேசினான். தன்னையும் அறிமுகப்படுத்திக் கொண்டு போலியாக கண்ணீர் விட்டான்.

''மாமா என்னையும் தேவியையும் மாலையும் கழுத்துமா பார்க்க கடைசி மூச்சுவரைதுடிச்சாரு... நான்தான் எங்கனை அந்த கோலத்துல பார்த்தா உயிரை விட்ருவாருன்னு, நீங்க குணமாகி வீட்டுக்கு வாங்க மாமா அப்பபுறமா எங்க கல்யாணத்தையும் நடத்தி வையுங்'கன்னு

சொன்னேன். கடைசில இப்படி ஆயிடிச்சே...'' என்று ஒப்பாரி வைத்தான்.

அவன் அழுகையும் பேச்சும் பல பேருக்கு புதிராகவே இருந்தது. சிலர் அந்த சோகத்திலும் சாரதியிடம் சென்று, ''என்ன சார் இது! இவர்பாட்டு ஏதேதோ சொல்றாரு... எல்லாம் உண்மையா?'' என்றும் கேட்டனர்.

சாரதிக்கு முகத்தை பிறாண்டிக் கொண்டு அழவேண்டும் போல இருந்தது. மௌனமாக அவர்களை வெறித்தான். பலர் வந்து கேட்கவும், எரிச்சலாகி செல்வகுமாரை அழைத்து, ''கொஞ்சம் வாயை மூடிக்கிட்டு சும்மா இருக்கியா... இது கல்யாணத்த பத்திபேசற நேரமா?'' என்று கேட்கவும், செல்வகுமாரிடம் ஒரு சின்ன அமர்த்தலான புன்னகை.

''இப்ப பேசாம எப்ப மச்சான் பேச...? எல்லாருக்கும் தெரிஞ்சா நல்லதுதானே? மாமா தன் சொந்தபந்தங்க மேல எவ்வளவு பாசமா இருந்திருந்தா இப்படி நடந்து கிட்டிருப்பார்னுதானே நினைப்பாங்க...?''

''ஒண்ணும் வேண்டாம். நீ கொஞ்சம் வாயமூடிக் கிட்டிரு...''

''ஏன் மச்சான் கோவிச்சிக்கிறீங்க... ஆமா தேவி, அப்படி எங்க போய்ட்டா. எனக்குப் பயந்துகிட்டு ஓடிகீடி போய்ட்டாளா?''

''அப்படித்தான் வெச்சுக்கயேன்...''

''அப்ப அதையே இனி பாக்கறவங்க கிட்ட சொல்றேன். பத்திரத்துல எழுதி வாங்கின பிறகும் இப்படி நடந்துகிட்டா அது நல்லாவா இருக்குன்னு கேக்கறேன்...''

''ஏய்... ஏன் இப்படி எங்க உயிரை வாங்கறே. உனக்கே இது அதிகமா தெரியல.''

''இல்ல மச்சான்... உங்களுக்குதான் உங்கப்பா ஆசைங்கறது சாதாரணமா தெரியுது.''

''இப்ப நீ நடந்துக்கறதை எல்லாம் பார்த்தா என் அப்பாவுக்கு வந்த ஆசை மேலயே எனக்கு சந்தேகமா இருக்கு. நீதான் எதாவது பேசி அவர் மனசை கெடுத்திருக்கணும்...''

''மச்சான்! ஏன் டென்ஷன் ஆகறீங்க... நீங்க என்ன பேசினாலும் நான் கோபப்பட மாட்டேன். அவ்வளவு ஏன், பத்திரத்துக்கு பதில் சொல்லிட்டுதான் பாடியையே எடுக்க விடுவேன்.''

- செல்வகுமார் ஷாக் அடிக்கும்படியான பாயிண்ட்டை தொடவும், சாரதிக்கு முகம் வெளிறிப் போனது. ராம்மோகனின் உடம்பருகே அமர்ந்து அழுது கொண்டிருந்த தாட்சாயணி அங்கிருந்தபடியே இருவரும் உரசிக் கொள்வதை பார்த்தபடி இருந்தாள். அவளுக்கு 'பக்குபக்கு' என்றுதான் இருந்தது.

சாரதி அப்போது கோபத்தின் உச்சிக்கே போய் விட்டான். கட்டுப்படுத்தமுடியாமல் வெடிக்கவும் செய்தான்.

''டேய்... என்னடா மிரட்ற...? பத்திரம், பதில்னு பூச்சி காட்றியா. இப்ப சொல்றேண்டா. இந்த கல்யாணம் நடக்காதுடா. அதுமட்டுமில்ல, எங்கப்பா உடம்பை என்ன பண்ணனும், எப்படிப் பண்ணனும்னு எங்களுக்கு தெரியும். உனக்கு என்ன தெரியுமோ பார்த்துக்கோ... இங்க இருக்கிற என் ஃபேக்டரி ஆட்கள் கிட்ட ஒரு சைகை காட்டுனா போதும்... உன் எலும்பை எண்ணிடுவாங்க'' என்று சாரதி பதிலுக்கு வெடிக்கவும், அந்த நடுநிசியிலும் பலரது கவனம் அவர்கள் இருவர் பக்கமும் சென்றது.

சாரதியின் பலமான குரலைக் கேட்டு அவன் மனைவி இந்துமதி என்னவோ ஏதோ என்று அவனை நோக்கி

ஓடினாள். தாட்சாயணியும் எழுந்து ஓடினாள். செல்வகுமாரிடம் பதிலுக்கு எந்தவித சப்தமும் இல்லை. சில வினாடிகள் சாரதியை வெறித்துப் பார்த்தவன், மெல்ல மார்புக்கு முன்பக்கம் பனியனுக்குள் கையை விட்டான். கொத்தாக அவன் கைகளில் அவன் எழுதி கையெழுத்து வாங்கிய பத்திரத்தின் ஜெராக்ஸ் பிரதிகள்! அதை அங்கிருக்கும் ஒவ்வொருவரிடமும் கொடுக்கத் தொடங்கினான். சாரதிக்கு தேன்கூட்டில் கை வைத்துவிட்டது அப்போதுதான் புரிந்தது. இந்துமதியோ அவன் செய்கையை பார்த்து ஆடிப்போய் தாட்சாயணியைப் பார்த்து கத்தினாள்.

''அத்தை! என்ன அத்தை இது... உங்க மகன் ஏன் இப்படி எல்லாம் நடந்துக்கறாரு. இவர் இப்படி நடந்துக்கறத எல்லாம் பார்த்தா திட்டம் போட்டு தப்பு பண்றது நல்லா தெரியுது. இதுக்குதான் இவ்வளவு வருஷம் கழிச்சு இங்க வந்தீங்களா? மாமாவைபறிகொடுத்துட்டு மனசொடிஞ்சு போய் நிக்கறோம். இப்ப போய் இப்படியா நடந்துக்கறது?'' என்றவளைதாட்சாயணியும் விடவில்லை.

''அவன் எங்கம்மா தப்பா நடந்துக்கறான். அவன் இப்படி நடந்துக்கவே சாரதிதானே காரணம். அவன் இந்த வீட்டு மாப்ளைம்மா! அவனைப் பார்த்து, உன்னால ஆனத பார்த்துக்கோன்னா என்னம்மா அர்த்தம்?'' என்றாள்.

அதற்குள் அங்கிருப்பவர்கள் அவ்வளவு பேரும் அந்த பத்திரத்தை, அதாவது அதன் ஜெராக்ஸ் படிவத்தை படிக்க ஆரம்பித்து விட்டனர்.

ஒவ்வொருவர் முகமும் ஒவ்வொரு விதமாக போனது.

சிலர் சாரதியை நெருங்கி, ''என்னசார் இது... உங்கப்பா உங்களை இப்படிச் சிக்கல்ல மாட்டிவிட்டு போயிட்டாரே. பொண்ணையும் கொடுத்து அவர் கஷ்டப் பட்டு உருவாக்கின

கார்மெண்ட்ஸ் ஃபேக்டரியையும் தாரைவார்த்துக் கொடுத்துட்டாரே?'' என்று கேட்கவும், சாரதிக்கு அவன் முதுகில் சொடேர் என்று அடி விழுந்தது போல் இருந்தது. வேகமாய் அவர் கையில் இருந்த அந்த ஜெராக்ஸ் நகலை வாங்கிப் படித்தான். அதில் வெகு அழகாக உயில் எழுதுவது போலவே வாசகங்கள்!

'எனது செல்லமகளை கைபிடிக்கும் என் சகோதரி மகனான செல்வகுமாரே எதிர்காலத்தில் எனது சுய உழைப்பாலும் திட்டமிடுதலாலும் உருவான ஈசா கார்மெண்ட்ஸ் என்னும் நிறுவனத்துக்கும் உரிமை யாளராவார் என்பதையும் இதை என் மகளை மணக்கும் செல்வகுமாருக்கு நான் திருமணப் பரிசாக அளிக்கிறேன். இதை நான் பூரண மன நலனுடன் எந்தவித குழப்பமும் அச்சமும் இன்றி தெரிவிக்கிறேன். என்னை எந்த நொடியும் மரணம் நெருங்கலாம் என்பதாலும் இந்த முடிவை நான் எடுத்து சில தினங்களே ஆனபடியாலும் என் குடும்ப வக்கீலை அழைத்து முறைப்படி உயில் எழுதி கோர்ட்டில் பதிவு செய்ய அவகாசம் இல்லாததால் இந்த ஒப்பந்தப் பத்திரத்தையே உயிலுக்கு நிகராக கருதிட வேண்டுகிறேன்.

என் மகனுக்கு மற்ற எனது வீடு வாசல் முதலான அசையும் அசையா சொத்துக்கள் சென்று சேரவேண்டியது என்பதையும் இங்கே பதிவு செய்கிறேன்...'

- என்று வெகு அழகாய் தேர்ந்த வார்த்தைகளில் அமைந்திருந்த அந்த ஜெராக்ஸ் நகலை படித்து முடித்த சாரதிக்கு மயக்கம் வராத குறை!

கச்சிதமாய் அப்போது காரின் ஹாரன் சப்தம்... சந்த்ரகுமாரும் தேவியும் வீட்டு முன் காரில் இருந்து இறங்கிக் கொண்டிருந்தனர். தேவி இறங்கிய வேகத்தில் அப்பா என்கிற பெருங்குரலுடன் ஓடத் தொடங்கினாள்.

ஃப்ரீஸருக்குள் மாலையும் கழுத்துமாய் கிடந்தவர் முன் மூச்சிளைப்பு விட்டபடி நின்றாள். கண்களில் நீரின் பெருக்கு!

எல்லோர் கவனமும் அவள் பக்கம் திரும்பிய நிலையில் செல்வகுமார் ஒரு மாலையுடன் அவளை நோக்கி சென்றான்.

''வந்துட்டியா தேவி... இந்தா முதல்ல மாலையை அப்பாவுக்குப் போடு. உனக்காகதான் இங்க எல்லாரும் காத்துக்கிட்டிருக்கோம். பாவம் நீ... பயணக்களைப்போட இருப்பே - உள்ள போய் கொஞ்சம் ஃப்ரெஷ் பண்ணிக்கிட்டு வரலாம். இந்தா மாலையை போடு...'' என்றான். அவளும் அவனை கலங்கின கண்களுக்கு நடுவிலும் ஒரு அம்பின் கூர்மையோடு பார்த்தாள்.

''என்னம்மா பார்க்கறே... மாலையைப் போடு...'' - அவனிடம் ஒருவித சிணுங்கல். அவள் மெல்ல அந்த மாலையை வாங்கினாள். மௌனமாக ஃப்ரீஸர் மேல் வைத்தாள். பின் கண்களைத் துடைத்துக் கொண்டாள். கச்சிதமாய் சந்த்ரகுமாரும் வந்து நின்றான். அவனும் ராம் மோகனின் உடலைப் பார்த்தான். அப்படியே பார்வை செல்வகுமார் பக்கம் சென்ற நொடி அவன் கையிலும் ஒரு ஜெராக்ஸ் நகலைத் தந்தான்.

இடையிட்டது சாரதியின் குரல்!

''தேவி... இங்க எதுக்கு வந்தே? அப்படியே எங்கேயாவது போயிருக்கறதுக்கென்ன... இந்த பாவியோட வலைல சிக்கணும்கறதுதான் உன் தலை எழுத்தா... பாவிப் பொண்ணே... பாவிப் பொண்ணே...'' - என்று வெடித்த சாரதியை தேவியும் அமைதியாக பார்த்தாள்.

''மச்சான்! சும்மா பாவி, வலைன்னு எதையாவது சொல்லாதீங்க. நான் மாமா பேச்சுக்கு கட்டுப்பட்டு இங்க

நின்னுகிட்டிருக்கேன்... அவர் ஆத்மா இங்க நம்மளை எல்லாம் பார்த்துக்கிடிருக்கறத மறந்துட்டு நீங்க பேறீங்க'' என்று கத்திய சாரதிக்கு ஒரு பதிலையும் சொன்னான்.

அந்த இரவுப் பொழுது அங்கே ரணகளமாக மாறிக் கொண்டே போனது.

சாரதியின் உறவினர்கள் அவனை நெருங்கி சமாதானம் செய்யப் பார்த்தனர்.

''அப்பா உடம்பு இப்படிக் கிடக்கும்போது ரசாபாசம் வேண்டாம் சாரதி... அவர் வாழ்ந்த வாழ்க்கைக்கே அர்த்தமில்லாம போயிடும். காரியமெல்லாம் முடியட்டும். பார்த்துக்கலாம்...''

''நானும் அப்படி நினைச்சுதான் மாமா சும்மா இருந்தேன். ஆனா, அவனோ உடம்பையே எடுக்கவிட மாட்டேன்னா என்ன அர்த்தம்?''

''என்னப்பா பண்ண... உங்கப்பா அப்படி உங்கள பண்ணிட்டுப் போயிட்டாரே. அவர் எப்படி இவன் இவ்வளவு பெரிய அயோக்கியன்கறது தெரியாம பத்திரத்துல ரேகை வெச்சார்...?''

''எல்லாம் விதி... நாங்க ஒண்ணு நினைச்சோம். அது ஒண்ணு நடந்துகிட்டிருக்கு. ஆமா... இந்த பத்திரம் என் தங்கையை கட்டுப்படுத்துமா சார். என்னதான் என் அப்பா ஆசைப்பட்டாலும் என் தங்கச்சி முழு மனசா சம்மதிக்கணும்ல?''

''என்னப்பா நீ... அதை சரியா படிக்கலையா. நீ அப்படி உன் தங்கை சம்மதிக்காட்டி என் மொத்த சொத்துலயும் காலணா சம்மந்தம் என் பிள்ளைகளுக்கு கிடையாது. அவ்வளவும் என் சகோதரி மகன் செல்வகுமாரை சேரவேண்டியதுன்னும் ஒரு வரி எழுதியிருக்காரே...''

''அ... ஆமால்ல... சார்! என் அப்பா அப்படி எழுதல! இவன் எழுதி அப்பாகிட்ட கையெழுத்த வாங்கிட்டான். அதுக்கு சாட்சிகள் வேற...''

''நீ எவ்வளவு படிச்சவன்... உன் அப்பா ரேகை வைக்கறதுக்கு முந்தி இதை வாங்கிப் படிச்சுப் பாக்கலையா?''

''ஐயோ சார்... இதை அவன் முதல்ல லக்னப்பத்திரி கைன்னுதான் சொன்னான்... அது படிப்படியா மாறி இப்படி வந்துருக்கு. இந்த மாதிரி ஒரு மோசடியாளனா நாங்க இவனை நினைச்சுகூடப் பார்க்கல. எங்களுக்கு வாஸ்தவத்துல இவனை பத்தி எதுவுமே தெரியாது சார்!''

''சரிப்பா... நீ இப்பதான் ரொம்ப புத்திசாலித்தனமா நடந்துக்கணும். இப்போதைக்கு அப்பாவை கொண்டுபோய் தகனம் பண்றவரை அவன் போக்குக்கு போற மாதிரி நடிங்க. தகன காரியம் முடியட்டும். அப்புறமாக அவனா நாமளான்னு பார்த்துடுவோம்...''

- ஒருவர் சாரதிக்கு ஐடியா கொடுக்க, அதை கேட்டு விட்டவன் போல சிரித்தபடியே வந்த செல்வகுமார்,

''என்ன மச்சான்! என்னை ஏமாத்த சதியா லோசனையா?''

- என்று கேட்கவும் அவருக்கு பகீர் என்றது.

''காலைல நான் தேவி கழுத்துல இங்க இதோ என் மாமா சடலம் முன்னால தாலி கட்டறேன். அப்பதான் அவர் ஆத்மா சாந்தியடையும். அப்படியே அந்த கையோட போய்தான் ஒரு மாப்ளையா காரியம் பண்ணப்போறேன்.

முடியாதுன்னா இவங்க அவ்வளவு பேரும் இப்பவே இங்க இருந்து போய்டலாம். என் மாமா விருப்பப்படி அவர் சொத்தை நான் இனி பாதுகாத்து அதன் மூலமா அவர் ஆத்மா சாந்தியடைய பாடுபடுவேன்...''

- என்று அவன் சொன்ன மறுநொடி சாரதியின் வலது கரம் அவன் கன்னத்தில் ஒரு அறை அறைந்து முடித்து விட்டது.

அவன் அசரவில்லை.

சிரித்தான். சிரித்தபடியே பேசினான்.

''நல்லா அடிங்க மச்சான்... உங்கள மாதிரி உணர்ச்சி வசப்பட்டு நான் பதிலுக்கு அடிக்க மாட்டேன். அவ்வளவு சொத்தும் போகப் போவுதேங்கற கோபத்துல நீங்க இப்படி எல்லாம் நடந்துக்கிறீங்க. பரவால்ல மச்சான்... என் மாமாவுக்காக நான் இதை எல்லாம் தாங்கிக்கறேன்...''

- அவன் பேச்சு மற்றவர்களையும் தர்மசங்கடப் படுத்தியது.

ஒரு கைதேர்ந்த கிரிமினலுக்கு மட்டுமே இதெல்லாம் சாத்தியம். இப்படிப்பட்டவர்கள் சாதாரணமாகவே எப்படிப் பட்டவர்களையும் வளைத்துவிடக்கூடியவர்கள்... ஏற்கெனவே வளைந்து இருந்த ராம்மோகனை வளைப்பதா இவனுக்கெல்லாம் ஒரு விஷயம்...?

''டேய்... என் சொத்தே போனாலும் சரிடா. என் தங்கை உனக்கு கிடையாதுடா... உன்னை நான் அவ்வளவு சுலபத்துல இந்த சொத்தை எல்லாம் கொண்டு போகவும் விடமாட்டேண்டா...''

- என்று ஒரு பக்கம் சாரதி மட்டும் கத்தியபடி இருக்க... தேவி, சந்த்ரகுமாரைத்தான் பார்த்தாள்.

சந்த்ரகுமாருக்கு நெருப்பின் மேல் நிற்பது போல இருந்தது.

''பார்த்தீங்களா... அப்பாவுக்கு ஈமக்கடன் செய்யறது தான் முக்கியம்னு வந்து மாட்டிக்கிட்டதை பார்த்தீங்களா? நான் படிச்சுப் படிச்சு சொன்னேனே... சாமி பார்த்துப்பார், சாமி பார்த்துப்பார்னு சொல்லி வாயடைச்சிங்களே. எங்க

உங்க சாமி? நம்பிக்கை வைக்கவும் ஒரு அளவு வேண்டாம். இப்படியா? இங்க எனக்கு இப்ப என்ன தோணுது தெரியுமா?''

- தேவி கேள்வியோடு இடைவெளி விட்டாள். சந்த்ரகுமாரும் வெறித்தான்.

''அசட்டு நம்பிக்கையுள்ள உங்களவிட ஆபத்தான அவன் புத்திசாலித்தனமும் முயற்சிகளும் எனக்கு இப்ப பெருசா தெரியுது சந்த்ரா... இந்த பூமி எப்பவும் புத்தி உள்ளவங்களுக்குதான். உங்கள மாதிரி அசட்டு நம்பிக்கையாளர்களுக்கு கிடையாதுங்கறத இந்த சம்பவத்துக்கு பிறகாவது நீங்க புரிஞ்சுக்கணும்...''

- என்று தேவி ஒரு தீர்மானத்தை முன்மொழிபவள் போல பேசினாள். பின் நேராக சாரதியிடம் சென்றவள்,

''அண்ணே! எனக்காக நீங்க யாரும் நடுத்தெருவுக்கு வர வேண்டாம். இனி எப்படி நடந்துக்கணும்னு எனக்குத் தெரியும்...''

- என்றவள் நேராக அடுத்து செல்வகுமாரிடம்தான் சென்றாள்.

அவனுக்கே அவள் அருகே வரவர சற்று டென்ஷன் அடிக்கத் தொடங்கியது.

''என் அருமை அத்தை மகனே... உனக்கு நான் வேணும். அவ்வளவுதானே?'' என்று கேட்டாள்.

அவனும் ஆமோதிப்பாய் பார்த்தான்.

''சரிடா... நான் உன்னைக் கட்டிக்கறேன்டா. போய் எல்லார்கிட்டேயும் கொடுத்த அவ்வளவு ஜெராக்ஸ் நகலையும் வாங்கிட்டு வாடா... போடா...'' என்றாள்.

''என்ன தேவி கட்டிக்கப் போற புருஷனை வாடா போடாங்கறே?'' அவனும் நெளிந்தான்.

''உன்னை நான் வாடா போடான்னுல்லாம் கூப்பிடக் கூடாதுன்னு ஒண்ணும் என் அப்பா எழுதலையே...''

- அவளது மடக்கல் வேலை செய்தது. போய் எல்லாரிடமும் நகலை வாங்கத் தொடங்கினான்.

சாரதி அழுகையின் உச்சிக்கே போய் விட்டான்.

''தேவி! வேண்டாம்... அவன் சீட்டிங் பார்ட்டி, திருடன்... நீ மனசு தளர்ந்துடாதே...''

''அண்ணே! கொஞ்சம் சும்மா இரு நீ... எனக்கு நம் அப்பாகாரியம் நல்லபடி நடந்து முடியணும். இப்ப அதுதான் முக்கியம்...'' - அவளிடம் ஒரு புதுவித தீர்க்கம். ஆனால், சந்த்ரகுமார் மட்டும் அதை நம்பத் தயாராக இல்லை. தேவி தனக்குள் ஒரு புதிய முடிவெடுத்து அதை நோக்கிச் செல்வதாகத்தான் நினைத்தான்.

உண்மைதான்... தேவியும் மனதுக்குள், ''எரியப் போறது என் அப்பா உடம்பு மட்டும் இல்ல - அதோட சேர்ந்து நீயும்தான்'' என்று கூறிக் கொண்டிருந்தாள்!

10

மெய்வருத்தக் கூலிதரும் என்கிற வரிகளுக்கு முன்னால் ஊழ்வினை துணை யிருக்க மெய்வருத்தம் கூலி தரும். அதுவும் எப்போது...? மெய்வருந்தப் பாடுபட்டால் அதற்குரிய பலன் இவருக்கு போய் சேரட்டும் என்கிற விதிப்பாடு இருந்தால் மட்டுமே...

இது புரியாமல் மெய்வருத்தம் கூலி தரும் என்று வள்ளுவரே கூறிவிட்டார் என்று பேசுவ தெல்லாம் கவிதைக்கு பொய்யழகு போன்ற விஷயங்களே...

வாழ்க்கையில் கூர்ந்து கவனித்தால் இந்த கருத்தை விளங்கிக் கொள்ளலாம். மலையளவு பாடுபட்ட ஒருவர் தினையளவு மட்டுமே பலனடைவதும், எதுவுமே செய்யாமல் சிலர் வேகமாக முன்னுக்கு வருவதும் நாம் பலரிடம் பார்க்கும் நிதர்சனமான விஷயங்கள். அப்போதெல்லாம் இந்த கருத்தில் எவ்வளவு உண்மையிருக்கிறது என்பது தெரியவரும்.

ஒரு விஷயம் நடக்கவேண்டும் என்கிற விதிப்பாடு மட்டும் இருந்துவிட்டால் போதும். அதற்கேற்பவே அவரைச் சுற்றி எல்லா விஷயங்களும் நிகழும்... ஈ எறும்புகூட அதற்கேற்பவே நகரும். இல்லாவிட்டாலும் அப்படித்தான்... இதனால் மனச்சோர்வடைய தேவையே இல்லை. எது நடந்தாலும் அதை ஏற்றுக் கொள்ளும் மனப்பக்குவத்தோடு நடந்து கொள்ளத் தொடங்கினாலே போதும்... குறிப்பாக நல்லதையும் தீயதையும் சமமாக கருதும் மனோநிலை மிகவும் உசிதமானது!

விடிந்து விட்டது...! அதுவரை வராதவர்கள்கூட வரிசையாக வந்து அஞ்சலி செலுத்திவிட்டு சென்று கொண்டிருந்தனர்.

சந்த்ரகுமார் கொஞ்சம்கூட நம்பிக்கை இழக்காமல் ஒரு ஓரமாக நின்று கவனித்துக்கொண்டே இருந்தான். சுடுகாட்டுக்கு உடம்பை எடுத்துச் செல்வதற்கென உள்ள பிரேத வண்டியும் பங்களாவுக்கு வெளியே வந்து ஒரு ஓரமாக நின்றது.

அதிகபட்சம் இன்னும் சில மணி நேரங்களில் ராம்மோகனின் உடப்பை எடுத்துச் சென்று ஈமக்கடன் செய்து எரிக்க வேண்டியது மட்டுமே மீதமுள்ள செயல்.

தேவி, செல்வகுமாரின் இழுப்புக்கு இடம் கொடுத்தவள் போல அவனருகிலேயே இருந்தாள். அவன் இரவு நேரத்தில் சொன்னது போல அவர் சடலத்தின் முன்பாக தாலி கட்ட விரும்பியதைகூட தவிர்க்கவில்லை. அவள் தவிர்க்க நினைத்தாலும் அவன் விடமாட்டான் என்பதும் அவளுக்கு தெரிந்தே இருந்தது.

உழைப்பால் உயர்ந்த ராம்மோகனின் இறுதி யாத்திரை இப்படி மனித வாழ்வில் இதுவரை எங்கும் நடந்திராக ஒரு சம்பவத்தின் தொகுப்பாக மாறும் என்பதை ஒருவர்கூட எண்ணிப் பார்க்கவில்லை.

சாரதிக்கு மட்டும் நடுநடுவே ஆவேசம் வந்து சந்த்ரகுமாரிடம் சென்று, ''சந்த்ரகுமார்... என் தங்கையை தயவுசெய்து கூட்டிக்கிட்டுப் போங்க... எங்கள பத்தி அவ அநாவசியமா கவலைப்படறா... சொத்து போனா சம்பாதிச்சிடலாம். ஆனா, வாழ்க்கை போனா வராது சந்த்ரகுமார்...'' என்று கத்திப் பார்த்தான்.

''பொறுமையா இருங்க சார்... நான் நம்பற சித்தர்சாமி கை விடமாட்டார்...'' என்று அவனிடமும் அவன் சொன்ன போது சாரதிக்கு கோபமான கோபம் வந்து விட்டது.

''என்ன சந்த்ரகுமார் இது பேச்சு... இனி யாரால என்ன செய்ய முடியும்? தேவி உங்க பேர்ல இருக்கற கோபத்தை தான் இப்படி காட்டிக்கிட்டிருக்கா... இங்க துணிச்சலா நீங்க காட்டப்போற தைரியத்துலதான் எல்லாம் இருக்கு. பாவம் சித்தர்சாமி... அவரை ஏன் இங்க கூப்பிடறீங்க. இந்த பாவியோட தப்புக்கு அவர் என்ன செய்வார்?''

''எல்லாம் சரி மிஸ்டர் சாரதி... நான் பார்த்துக்கறேன்னு சாமி சொல்லாம போயிருந்தா இங்க இன்னேரம் இவனை புரட்டிப் போட்டிருப்பேன். அவர் சொல்லிட்டார். சொன்னா அவர் சொன்னபடி செய்வார்...''

''எப்படிசந்த்ரா... எப்படி? விஷயம்கைமீறிப்போயாச்சு. என் அப்பாவே உசுரோட எழுந்து வந்து இந்த அக்கிரமத்தை தடுத்தாதான்உண்டு. ஆனா, அவரோநிம்மதியாஎங்களமாட்டி விட்டுட்டுதான்பாட்டும்போய்ட்டார்.

உங்க சித்தர் இனி ஒரு வேளை வந்தாலும் அவர் பேச்சை எல்லாம் இந்த செல்வகுமாமர் கேப்பான்னா நீங்க நினைக்கறீங்க?'' - சாரதி சீறினாள்.

''சாரதி... இடி இடிச்சாலும், உயிர் போனாலும் அசராத நம்பிக்கைக்கு மட்டும்தான் நம்பிக்கைன்னு பேர்... என்கிட்ட அது மட்டும்தான் இருக்கு. என் நம்பிக்கை நிச்சயம் என்னை கைவிடாது...''

- சந்த்ரகுமார் அசராமல் சொன்ன பதில் சாரதியையே கொந்தளிக்க வைத்து விட்டது.

''அடபோய்யா, நீயும் உன் நாசமா போன நம்பிக்கையும்... கண் எதிர்க்க கொஞ்சம் கொஞ்சமா உன் காதலி பறிபோய்க்கிட்டிருக்கா... போய் கை கொடுக்காம நம்பிக்கை மயிருமட்டைன்னு பேசிக்கிட்டு நிக்கறே'' என்று வெடித்து விட்டான்.

மணி எட்டை எட்டியபோது செல்வகுமார் மாப்பிள்ளை கோலத்தில் வந்தான்... தேவியும் ஒரு சிலைபோல அவனோடு வந்தாள். கழுத்தில் மாலை வேறு. செல்வகுமார் கரத்தில் தாலி!

அதை ஆட்டியபடியே அவன் சாரதியைப் பார்த்த பார்வையில் நல்ல கேலி.

சாரதியை சிலர் தடுத்து நிறுத்தியிருந்தனர்.

''உங்க தங்கச்சியே சம்மதம் சொல்லிட்ட நிலைல நீங்க கத்தறதுல அர்த்தமே இல்லை...'' என்றனர். அதேசமயம் ஃப்ரீஸருக்குள் படுத்திருந்த ராம்மோகனின் உடலை மெல்ல

வெளியே எடுத்து அருகில் இருக்கும் நீண்ட மர பெஞ்சின் மேல் கிடத்தினர்.

அவருக்கான ஈமக்கிரியை தொடங்கியது.

ஒரு குடத்தில் நீர் எடுத்து வந்து அதை பெண்ணாகிய தேவிதான் விட வேண்டும் என்று சடங்கு நடத்த வந்த ஐயர் கூறவும், தேவியும் குடத்து நீரை சுமந்து கொண்டு அவர் அருகே சென்று ஒரு எந்திரம் போல செயல்படத் தொடங்கினாள்.

குடத்து நீரும் அவர் மேல் கொட்டி முடிக்கப்பட, கோடி வேட்டி மாற்றும் சடங்கு ஆரம்பமானது... பழைய வேட்டியை அவிழ்த்துவிட்டு புதிய வேட்டியைக் கட்டிய போது அதுவரை உடம்பில் நிலவியிருந்த ஜிலுஜிலுப்பு குறைந்த மாதிரி இருந்தது, வேட்டியை கட்டியவருக்கு.

அவர் பார்க்க ராம்மோகனின் கால் கட்டை விரலிலும் ஒரு மெல்லிய அசைவு. அவர் முகத்தில் அதன் நிமித்தம் அதிர்ச்சி பரவிட, உற்றுப் பார்க்கத் தொடங்கினார்.

''என்ன சாமி... எதை அப்படிப் பார்க்கறீங்க?...'' - என்று ஒருவர் கேட்டிட, ஐயர் முகத்தில் சுரத்தே இல்லை. திரும்பவும் காலைப் பார்த்தபோது கால்கட்டை விரல் எல்லோரும் பார்க்க நன்றாகவே அசைந்து கொடுத்தது.

''கால் அசையறது... கால் அசையறது...'' என்றார் ஐயர். ''கால் அசையுதா? என்ன உளறறீங்க?'' என்று உடனேயே ஒருவர் கேட்டிட, நெற்றியில் புருவத்திலும் மெல்லிய வளைவு தோன்றத் தொடங்கியது.

''ஐயோ! உயிர் இருக்கு...'' - என்று பலமாகவே ஒலித்தது ஒரு பெண்குரல்.

''என்னது உசுர் இருக்கா...?'' என்று பலரும் அருகே வர ராம்மோகனின் முகத்தில் மெல்லிய சலனம்... கன்னங்களில்

கதைப் பரப்பில அசைவு... ஒரு மெல்லிய முனங்கல் சப்தமும் கேட்கத் தொடங்கியது.

அதைப் பார்த்த செல்வகுமார் பேயறைப்பட்டவன் போல ஆகிவிட, சாரதி, தேவி, இந்துமதி வேகமாக ஓடிவந்து மிக அருகில் நின்று ராம்மோகனையே வெறித்திட, மெல்ல... மிக மெ... ல்... ல ராம்மோகனும் கண்களைத் திறந்தார்!

''அப்பா...'' - சாரதியிடம் ஒருவித கூவல்.

''சாரதி...''

''அப்பா...'' - தேவி அழைத்தாள்.

''தேவி...'' - என்று பதிலுக்கு அவளையும் திருப்பி அழைத்தார். சந்த்ரகுமார் கைகளை கூப்பியிருந்தான்.

''சாமி... நீங்க கைவிடலை நன்றி சாமி... நன்றி!''

- என்றவனாக அவனும் அவர்கள் அருகில் வந்து நின்றான்.

அவனைப் பார்த்த ராம்மோகன், ''அடடே! வாங்க மாப்ள... கிட்ட வாங்க...'' என்றார்.

அவர் மாப்பிள்ளை என்றதும் எல்லோருக்குமே இன்பஅதிர்ச்சி. ஒரு உறவுக்காரர் மிக வேகமாக குறுக்கில் புகுந்து, ''மாமா... இந்த அதிசயத்த நான் என்னன்னு சொல்வேன். நீங்க சாகலைங்கறத எங்களால நம்பவே முடியல. அதே சமயம் உங்களால இங்க எவ்வளவு குழப்பம் தெரியுமா?'' என்று கேட்க, ராம்மோகன் மெல்ல எழுந்து அமர்ந்தார். நன்கு திடமான நிலையில் கையை உயர்த்தி அசைத்து, ''என்னய்யா குழப்பம்?'' என்றும் கேட்டார்.

''பாருங்க இந்த பத்திர காப்பியை...'' என்று ஒருவர் தன்வசம் இருந்ததை நீட்டவும், அதை வாங்கிப் படித்த ராம்மோகன் முகத்தில் அசாத்திய கோபம்.

''என்ன அநியாயம் இது...? நான் சுயநினைவு இல்லாம படுத்திருந்தப்போ இந்த செல்வகுமார் என்கிட்ட சொன்னதே வேற. என் மகளுக்கு இஷ்டம் இருந்தாதான் கல்யாணம்னு நான் சொன்னதை சாமர்த்தியமா மறைச்சு சொத்தை எல்லாமும் எழுதி வாங்கிக்கப் பார்த்திருக்கானே... எங்க அவன்?'' - அவர் குரலில் நல்ல தெம்பு... எல்லோரும் அவனை பதிலுக்கு தேடியபோது அவனும் இல்லை. தாட்சாயணியும் இல்லை!

மறுநாள்!

எல்லா குழப்பங்களும் விலகிய நிலையில் அந்த வீடே சந்தோஷத்தில் மூழ்கியிருக்க சந்த்ரகுமாரையும் தேவியையும் நெருங்கிய ராம்மோகன், ''மாப்ள... கொஞ்சம் என்கூட கிளம்பறீங்களா?'' என்று கேட்க, ''எங்க மாமா?'' என்றான் அவனும்.

''குற்றால மலைக்குமேல இருக்கற பரஞ்ஜோதி சித்தர் ஆசிரமத்துக்குதான்...''

''அங்கயா... அங்க எதுக்குப்பா!'' - தேவி படுவேகமாய் கேட்டாள்.

''அங்க வாம்மா சொல்றேன்'' என்றவர், மகன் சாரதி, இந்துமதியையும் கூட்டிக் கொண்டார்.

அதற்குமுன் வக்கீலை வரச்சொல்லி அவர் சொன்னபடி எழுதியிருந்த உயிலில் கையெழுத்து போட்டு முடித்தார்.

சரி, புறப்படலாம் என்று காலெடுத்தபோது ஆஸ்பத்திரியில் ராம்மோகனை பார்த்துக் கொண்ட டாக்டர்களும் நர்ஸ்களும் எதிரில்...!

''வாங்க டாக்டர்... எங்க இவ்வளவு தூரம்?''

''உங்கள பார்க்கத்தான் சார்... எங்களால இப்பவும் நம்ப முடியல. இறந்துட்ட நீங்க எப்படிப் பிழைச்சீங்க. பிழைச்ச

நீங்க ரொம்ப நார்மலாவும் இருக்கீங்க. மிஸ்டர் ராம்மோகன்! நீங்க இந்த நிமிஷம் ஒரு உலக அதிசயம்... ஒரு பிளட் கேன்சர் பேஷண்ட் பிழைச்சதா வரலாறு இல்லை. உங்களை 'என்பாம்' பண்ணவன் நான். உங்க உடம்பு எப்படி இப்படி திடமா இருக்குங்கறத நாங்க உங்கள டெஸ்ட் பண்ணி தெரிஞ்சுக்க விரும்பறோம்...''

டாக்டர் கூறியதை கேட்டு சிரித்த ராம்மோகன்,

''ஸாரி டாக்டர்... நான் இப்ப அவசரமா குற்றால மலைக்குப் போய்க்கிட்டிருக்கேன். நான் இனி வரமாட்டேன். அங்க மலைக்கு மேல ஒரு சித்த சந்நியாசியா வாழறதுதான் என் நோக்கம் - விருப்பம். உங்க ஆராய்ச்சிக்கு ஒத்துழைக்கற நிலைல இப்ப நான் இல்லை'' என்றபடியே புறப்பட்டார். டாக்டர்களிடம் விக்கிப்பு! அதன் பிறகு அவர்கள் எவ்வளவோ பேசிப் பார்த்தும் பயனில்லை.

அவருடன் தேவியும் சந்த்ரகுமாரும் ஏற்றிக்கொண்ட காரும் கிளம்பிவிட்டது. அந்த காரை சாரதியும் இந்துமதியும் மற்றொரு காரில் பின்தொடரத் தொடங்கினர்!

பரஞ்ஜோதி சித்தர் ஆசிரமம்!

எல்லோரும் அங்கு சென்று சேர்ந்த நிலையில் ராம் மோகன் தன்னோடு வந்த நால்வரையும் உள்ளே குடிசைக்குள் எட்டிப் பார்க்க சொன்னார்.

உள்ளே பரஞ்ஜோதி சித்தர் உடல் பிணமாக தரையில் கிடந்தது. தேவி அந்த காட்சியைப் பார்த்து,

''சந்த்ரா! என்ன இது... சாமி செத்துக்கிடக்கறார்?''

-என்று கேட்டபோது அந்த உடம்பில் மெல்லிய அசைவு.

''அட உடம்பு அசையுதே...'' எனும்போதே பரஞ்ஜோதி சித்தர் எழுந்து அமர்ந்தார். சிரித்தார்.

''நான் இறந்ததும் உண்மை - இப்ப பிழைச்சு எழுந்திருக்கறதும் உண்மை. வெளியே போய் பாருங்க...'' - என்று அவர் கூறிட, அவர்களும் வெளியே பார்த்தனர். வெளியே குடிசை வாசலில் ராம்மோகன் உடல் பிணமாக கிடந்தது.

சாரதி, ''ஐயோ அப்பா...'' என்று பதைத்துப் போனான். தேவியும் கதற ஆரம்பித்தாள். ஆனால், சந்த்ரகுமார் மட்டும் மௌனமாகப் பரஞ்ஜோதி சித்தரை பார்த்தான். அவரும் அவனிடம், ''உன் நம்பிக்கை என்னை உலுக்கிட்டிச்சு சந்த்ரகுமார்... அதான் பரகாயப்பிரவேசம் பண்ணி இவர் உடம்புல புகுந்து அங்க நிலவின குழப்பத்தை தீர்த்து வெச்சேன். இப்ப திரும்ப என் உடம்புக்கே வந்துட்டேன்.

கூடுவிட்டு கூடுபாயறது என்மாதிரி சித்தர்களுக்கு ஒரு சாதாரண விஷயம். ஆனால், உயிர் போய்ட்டா போனது தான்... ஒரு உயிரை அந்த மகேஸ்வரனைத் தவிர யாராலயும் திரும்பத்தர முடியாது.

இந்த உடம்பை இந்த காட்டுலயே போட்டு எரிச்சுட்டு போய் நல்லபடியா வாழுங்க. இங்க தகனமாக கொடுத்து வெச்சிருக்கணும் அஸ்தியை அருவில கரைச்சுட்டு போயிடுங்க. ஊர்ல யாராவது கேட்ட அப்பா பொதிகை மலைல சித்தரா நடமாடறதா சொல்லுங்க. ஏன்னா அதுவும் ஒரு பெரிய சத்தியமான உண்மைதான்...'' - என்றார். அந்த நொடி அவர் கால்களை பற்றினாள் தேவி. கண்ணீர்த்தம்ப, ''எது நம்பிக்கைன்னு இப்ப நான் நல்லா தெரிஞ்சுகிட்டேன் சாமி...'' - என்றாள்.

- முற்றும் -